தமிழ் காட்டும் உலகு

27 JAN
MADRAS

இயற்றியவர் :
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டி தெரு, சென்னை-

பதிப்புரிமை] 1957 [விலை ரூ. 2-50

முதற் பதிப்பு—அக்டோபர், 1957

Kabeer Printing Works, Madras (3650)

MADRAS

முன்னுரை

"தமிழ் காட்டும் உலகு" என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் தமிழ் இலக்கியம் பற்றியும் தமிழ்ப்பண்பாடுபற்றியும் தமிழ்க்கலைபற்றியும் சிற்சில வேளைகளில் நான் எழுதிய கட்டுரைகள், ஆற்றிய சொற்பொழிவுகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். இந்நூலின்கண் 1, 4, 10 ஆகிய எண்களில் உள்ளவை திருச்சி வானொலி வழியாக நான் இயற்றிய மூன்று சொற்பொழிவுகள். 5-வது எண்ணுள்ள "அறங்கள்" என்பது திருச்சிப் பாப்பம்மாள் சத்திரத்தில் என்னால் இயற்றப்பட்ட சொற்பொழிவு. 6-வது எண்ணுள்ள "திருக்குறளும் சிலப்பதிகாரமும்" என்பது திருச்சி மாவட்டத் தமிழ் ஆசிரியர் கழக ஆண்டு விழாவில் நான் பேசியதனை ஒட்டி எழுதப்பட்டது. பிற கட்டுரைகள் "செந்தமிழ்ச் செல்வி", "தமிழ்ப் பொழில்", "தென்றல்", "கதிரொளி", "பாரதி", "தினமணி மலர்", "நிலவு" முதலிய இதழ்களில் முன்னர் வெளிவந்தவை.

இக்கட்டுரைகளையும் சொற்பொழிவுகளையும் நூல் வடிவில் தொகுத்துத் தரவேண்டுமென்று நேஷனல் பதிப்பகத்தார் வேண்டினார்கள்.

இந்நூலை அழகிய முறையில் வெளியிட முன்வந்த அப்பதிப்பகத்தார்க்கு நன்றி உடையேன்.

அ. சிதம்பரநாதன்

15—8—1957

MADRAS

பொருளடக்கம்

			பக்கம்
1.	தமிழ் காட்டும் உலகு	...	1
2.	செல்வமும் வறுமையும்	...	9
3.	நாட்டு முன்னேற்றம்	...	17
4.	எழுத்தாளர்க்கு உதவி	...	22
5.	அறங்கள்	...	34
6.	திருக்குறளும் சிலப்பதிகாரமும்	...	54
7.	பூத்த வேங்கை	...	78
8.	உலகத்தார்க்கு ஆணி	...	84
9.	திருவள்ளுவர் அருங்கருத்துக்கள்	...	94
10.	குறுந்தொகை	...	110
11.	மணிமேகலை	...	119
12.	பதிற்றுப்பத்து	...	138

27 JAN 1958

1. தமிழ் காட்டும் உலகு *

இந்தப் புது நாளில் திருச்சி வானொலி நிலையத்தார் வழக்கம்போலத் தமிழ்க் கவி அரங்கு ஒன்றினை ஏற்படுத்திச் சிறந்த அறிஞர்களை அழைத்து இதனை நடத்துவது மிகவும் போற்றத் தக்கது. அறிஞர்கள் எழுதுதற்கேற்ற பொதுப் பொருளாகக் கொள்ளப்பட்டிருப்பது "தமிழ் காட்டும் உலகு" என்பது. தமிழ் இலக்கியம் துணையாகக் கொண்டு உலக மக்களைப்பற்றிப் புலவர்கள் கருதியவை இன்ன என்பதைக் காட்டுவதே இந்தத் தலைப்பினுடைய நோக்கம். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று கருதினார் கணியன் பூங்குன்றனார். 'எந்த ஊரையும் தன்னூர் போல மதித்து அங்குள்ள மக்களோடு உறவுகொண்டு வாழ்க்கையை நடத்துதல் வேண்டும்' என்பதும், 'எல்லோரையும் உற்றவர்களாக மதித்துப் பழகுதல் வேண்டும்' என்பதும் அவர் கருத்தாகும். திருவள்ளுவரும் கல்வி நன்கு கற்ற ஒருவனுக்கு எந்த நாடும் தன்னுடைய சொந்த நாடே போலாகும், எந்த ஊரும் அவனுக்குரிய ஊர் போலாகும் என்று சொல்லினார். கல்வி நன்றாகக் கற்றவர்கள் பல்வேறு நாட்டிலே சிறப்பாகப் போற்றப்படுவார்கள் என்பது அவர் கருத்து. அதைப்போலவே பலபேர் தத்தம் ஊரையும் நாட்டையும் விட்டு வெளியிடங்களுக்குப் போனவர்கள் அன்றும் இன்றும் போற்

* இது திருச்சி வானொலி நிலையத்தில் 14-1-57-இல் ஒலி பரப்பப்பட்டது. வானொலி நிலையத்தார் இசைவுடன் வெளிப்படுத்தப்படுகிறது.

றப்படுதல் நாம் அறிந்ததேயாகும். உலக மக்களெல்லாம் வெவ்வேறு தேசங்களிலிருந்து, வெவ்வேறு நாட்டிலிருந்து, வெவ்வேறு திசையிலிருந்து கூடினும், அவர்கள் ஒன்று கூடுகின்றபொழுது மக்களாகிய ஒரே இனம் என்ற உணர்ச்சி உண்டாதல் வேண்டும் என்பது பழந்தமிழ் அறிஞர் ஒருவரின் நோக்கம். பொன் மருத நிலத்தில் தோன்றுகிறது, மணி மலையிலே பிறக்கிறது, பவழம் காட்டிலே தோன்றுகிறது, முத்து கடலிலே பிறக்கிறது. இவற்றை எல்லாம் சேர்த்து ஓர் அணிகலனகச் சில வேளைகளில் அமைத்தல் உண்டு. அப்படி அமைக்கிறபொழுது பொன்னும், மணியும், பவழமும், முத்தும் எல்லாம் ஒருசேர அமைக்கப்பட்டு ஓர் அணிகலன் எனப் பெயரைப் பெறுகின்றன. அவ்வாறே வெவ்வேறு திசையிலிருந்து அறிஞர் பலர் ஒன்றுகூடினும் அவர்கள் தத்தம் திசையைச் சிறிது மறந்து மக்களென ஒரு கூட்டமாகக் கூடினதாக மதிக்கவேண்டும் என்பது அவரது விழுமிய கருத்தாகும். இவ்வாறு கருதியவர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கண்ணகனர் என்ற பெரும்புலவர்.

உலகத்து மக்கள் போற்றி விழைகின்ற பல பொருள்களை வாய்மையறத்திினின்று வழுவாது ஒழுகுவதாற் பெறுதல் இயலும் எனப் பழந்தமிழ்க் காப்பிய அறிஞர் இளங்கோவடிகள்,

"வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்?"

என்று இயம்பினர்.

எப்பொழுதும் உண்மையே பேசிக்கொண்டு, மற்ற உயிர்க்குத் துன்பம் தராமல் ஒருவர் பாது காப்பாரேயானால், அவரால் உலகில் அடைய முடியாத பொருளும் உண்டோ என வினவினார். எனவே, வாய்மையறம், பிறருக்கு இன்னா செய்யாமையாகிய அறம் ஆகிய இரண்டும் அன்று இளங்கோவடிகளால் வற்புறுத்தப்பட்டவை அண்மையில் நம் நாட்டுத் தலைவர் காந்தியடிகளால் இந்நூற்றுண்டில் வற்புறுத்தப்படுவன ஆயின.

ஒருவன் வாழ்க்கையை நடத்துகிறபொழுது ஆடம்பரத்தில் நாட்டம் செலுத்தாமல் மனத்தினைத் தூயதாக வைத்துக்கொண்டிருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் வழங்கிய அருண்மொழி. ஒருவன் மனத்திலே மாசற்றவனாக இருப்பானாக; அவ்வாறு இருந்தால் அவன் போற்றத் தக்கவன் ஆவன் என்பதை அவர் பல இடங்களில் வற்புறுத்தியிருக்கிறார். உலகத்தாரால் பழிக்கப்படுகிற செயல்களை ஒருவன் ஒதுக்குவான் ஆனால், அவன்பால் நிகழாமல் பாதுகாத்துக் கொள்வானானால், அவன் தலைமயிர் வைத்திருந்தாலும் மொட்டை அடித்திருந்தாலும் அதைப்பற்றிக் கவலை இல்லையெனக் கூறிவிட்டார். அப்படியானால், புறத்தோற்றத்திற்குக் கொடுக்கப்படுகிற மதிப்பைக் காட்டிலும் அகத்தின் பாங்கிற்குக் கொடுக்கப்படும் மதிப்பு பெரிதாக இருக்க வேண்டும் என்பது அவர் நோக்கம். ஒருவன் பூசை செய்கிறபொழுது பலவிதமாக மணியடித்து அவன் பூசை செய்வதைப் பிறர் எல்லாம் கேட்டும்,

கண்டும் பாராட்டவேண்டும் என்று எண்ணி இயற்றுவதைக் காட்டிலும், ஒருவன் தனித்துக் கடவுளோடு பேசியும், பழகியும் வருதல் நன்று. உலக மக்களொடு பழகுகின்றபொழுது நெஞ்சாலும் அவர்களுக்குத் தீமை நினைக்காமல் பழக வேண்டும்; கேடு சூழாது ஒழுகவேண்டும் என்பதைத் திருவள்ளுவர், "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்ற விடத்து வற்புறுத்தினர்.

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் அனைவரும் ஒரே இனம், ஒரே குலம் என்ற கருத்து இந்நாளில் யாங்கணும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்திய மக்களெனப் பறையறைந்தார் பாரதி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே திருமூலர், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று மொழிந்துவிட்டார். அரசுகள் எல்லாம் உலகெங்கணும் இன்றும் பேணிப் பொன் எழுத்துக்களிற் பொறித்து வைத்துக் கொள்ளக்கூடிய சொற்களாக அவை இருக்கக் காண்கிறோம். கடவுள் ஒருவர், நாம் எல்லாம் அவர் மக்கள் என்றால், அவர் நம் தந்தை; நாமெல்லாம் உடன் பிறந்தவர்கள் என்பது கருத்து. இந்த உடன்பிறப் பெண்ணம் உலகெங்கும் பரவ வேண்டும் என்பதே இக்காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. இது பரவுமானால், பொத்தானை அழுத்தினதும் உலகு முழுதையும் பாழாக்கக்கூடிய அணுக்குண்டினை உண்டாக்குதற்கு இடமே இல்லை.

உலகத்திலே உள்ள கண்டங்கள் ஐந்து ஆயினும், மதங்களைக் கோடிக் கணக்கிற் பெருக்கி விட்டார்களே என்று அஞ்சுகின்ற இந்நாளைய உலகத்தில் பலப்பல சமயங்களும் பேசுகின்ற கடவுள் மூவாச்சாவா முழுமுதற் கடவுள் ஒன்றாகத்தான் இருத்தல் இயலும் என்பது அவரது நம்பிக்கை. நம்மைப் படைக்கும் பிரமன் என்றும், நம் உயிரைப் போக்கும் எமன் என்றும் பல்வேறு பேர் இல்லை என்பது அவருடைய கருத்து. அதனால் தான் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை," என்று கூறினார். ஒருவனாகிய அந்தக் கடவுளை ஒவ்வொருவரும் தத்தம் சித்தத்திலே நிலைபெறவைத்து நினைக்க வேண்டும் என்பதுதான் அவர் வற்புறுத்தியது. யாவரும் ஒன்றுபட வேண்டுமென்றால் அவரவர் தத்தம் சமயக் கருத்துக்களை அடியோடு விட்டுவிட வேண்டும் என்பதன்றிச் சிறிது சிறிது தளர்த்து தற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பது கருத்து. 'தத்தம் கொள்கையினின்று காணும் கடவுளே தக்கது; பிற எல்லாம் ஒவ்வாதன' என்று கருதுகின்ற மனப்பான்மை குறையவேண்டும். கடவுளைப் பற்றிய உண்மை என்பது யாதாவது ஒரு மதத்தின் தலைவருக்கே தெரிவிக்கப்பட்டது, பிறர் எவர்க்கும் அறிவிக்கப்பட்டிலது எனக் கருதுகின்ற மனப்பான்மையை விடுதல் வேண்டும். ஒவ்வொரு சமயத் தலைவரும் கண்ட முடிவுகள் ஏறத்தாழ உண்மையை எட்டிப்பிடிக்க முயலுவன ஆகும் என்று நாம் கருதுதல் வேண்டும். ஒவ்வொரு

சமயத் தலைவரும் குறித்த முடிவே உண்மை, மற்ற மதத்தார் கண்டன உண்மையல்ல என்று சிலர் கருதிவிடுவதால்தான் பிற சமயத்தினரிடத்திலே மதிப்பின்மை தோன்றுகிறது. கடவுள் ஒரு பேரொளியாக இருக்கிறார் என வைத்துக்கொண்டு அவரிடத்திலிருந்து சில பல கதிர்கள் நமக்குக் கிடைக்கின்றன என வைத்துக் கொள்வோமே யானால், அதன்படி பல கதிர்களும் முடிவில் ஒரே இடத்தைச் சுட்டிக்காட்டுதலைப் போல, முடிவில் கடவுள் ஒருவரே என்பது வற்புறுத்தப்பட்டதாகி விடும். கடவுள் ஒருவர் என்ற அடிப்படையில்தான் நாம் எல்லாம் அவர் மக்கள் என்ற கருத்து வலுத்து நம்முள் ஒற்றுமை மனப்பான்மை வளருதல் இயலும்.

பழந்தமிழ் அறிஞர்கள் சிலர் உலகு எப்படி இருத்தல் வேண்டும் எனக் கனாக் கண்டுள்ளார்கள். கோவூர்கிழார் என்பவர் "அடுதீ அல்லது சுடுதீ அறியார்" எனச் சொன்னார். அடுக்களையில் காணப்படுகின்ற தீயையே அல்லாது மக்களைச் சுடுகின்ற தீயை அறியார் என வற்புறுத்தினார். குறுங்கோழியூர்கிழார் என்பவரும் அவ்வாறே வற்புறுத்தினார். அவர் கனாக்கண்ட நாட்டிலே மழை பெய்வதற்கு முன்னர்த் தோற்றும் இந்திர வில்லாகிய திருவில்லைத் தவிரக் கொலைவில் இல்லை என்றார். ஒருவரை ஒருவர் அழித்துச் சாகக்கூடிய ஆயுதங்கள் இல்லையென்றார். பிறர் எல்லோருக்கும் பயன்படக்கூடிய கலப்பையைத் தவிர அழிவினைத்தரும் படைக்கலங்கள் இல்லை என்றார்.

அதனுல், " திருவில் அல்லது கொலேவில் அறியார், நாஞ்சில் அல்லது படையும் அறியார் " என்றுர். இந்தக் கருத்தினைத் தழுவிக் கம்பர் ஒரு நாட்டிலே வறுமை இல்லை என்றுல் வண்மைக்கு வேலையில்லை யென்றுர். பொய்மை இல்லை என்றுல் உண்மை என்று ஒன்றைப் பேசுதற்கு இடமில்லை என்றுர். சேக்கிழாரும் ஓர் ஊரில் கொலைபடுதலே இல்லை யெனச் சொல்லி வற்புறுத்த நினைத்தவர் "குலே படுவன வாழையே" என்றுர். இவ்வாறு கூறுவன வற்றை நியமச்சிலேடை என ஒருசாரர் சொல்லுவர்.

தாயுமானவரும் இவ்வுலக மக்கள் யாவரும் இன்பமாக இருக்கவேண்டும் என்று எண்ணிய பெரியவர். "உலகத்தில் துன்பமே இயற்கை யெனும் சொல்லை மறந்திடுவோம், இன்பமே வேண்டிநிற்போம், யாவும் அவள் தருவாள்" எனப் பாடினுர் பாரதியார். நான் பெற்ற இன்பம் இவ் வையகத்தில் அனைவரும் பெறவேண்டும் என்னும் விழுமிய நோக்கத்தோடு தமிழ் நாட்டிலே வாழ்ந்து வழிகாட்டியவர் பலர் பலர்.

அரசன் ஒருவனே உலகத்தில் வாழுதற்குப் பிறந்தவன், பிறர் எல்லாம் உழைப்பதற்குப் பிறந் தவர்கள் என்ற எண்ணம் மலேயேறவேண்டுமென நினைத்தவர்களுள் கவிஞர் சுப்பிரமணிய பாரதி யாரும், அவரை அடியொற்றிய பாரதிதாசனும் தலைசிறந்தவர்கள். விடுதலைபெற்ற இந்தியாவிலே எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றுர் பாரதி. அப்படியானுல் ஒவ்வொருவரும் தத்தம் தலையைத்

தடவிப் பார்த்துக்கொண்டு மணிமகுடத்தைக் காணேனே என்று சொல்லுதல் கூடாது. பாரதி சொன்னதென்னவென்ருல், ஒருவனுடைய உரிமை போல இருந்துவந்த அரசு குடிமக்கள் அனை வருக்கும் இந்நாளில் உரியதாகிவிட்டதென்பது. ஆள்வோரைக் குடிமக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பு கிருர்கள் என்பது கருத்து. குடிமக்கள் ஆளுதற்குத் தமக்குப் பதிலாகப் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுக்கிருர்கள் ; மக்கள் ஆட்சியைப் பிரதிநிதிகள் நடத்துகிருர்கள் என்பது கருத்து. இதுதான் குடியரசின் தத்துவம். அரசாட்சியில் இருப்பவர்கள் குடிமக்களை அல்லற்படுத்தி ஆற் ருது அழுத கண்ணீர் உடையவர் ஆகிவிட்டால், அப்போதே அரசனை மாற்றுவதற்குக்கூட மக்கள் அதிகாரம் பெறுகிருர்கள். அதனுல்தான் குடி மக்களில் ஒவ்வொருவரும் இந்நாட்டு மன்னர் என இக்காலத் தமிழ்நூல்கள் கூறுகின்றன. " தமிழ் காட்டும் உலகு " என்ற தலைப்பில் இந்த உட்பிரிவு களின் அடிப்படையில் நம்கால அறிஞர்கள் கவிகள் இயற்றி இவ்வரங்கில் ஏறுதல் வேண்டும் என்பது வானெலி நிலையத்தாரால் முடிவு செய்யப்பட் டிருக்கிறது.

2. செல்வமும் வறுமையும்

பழந்தமிழ்ப் புலவர்களுக்குச் செல்வத்தின் சிறப்பையும், வறுமையின் வாட்டத்தையும் நன்ருக வருணிக்கக்கூடிய ஆற்றல் இருந்தது. ஒருவர் செல்வத்தின் பெருமையை நன்ருகப் படம் பிடித்துக் காட்டுதற்குத் தகுதியுடையவராக வும், இன்மையின் அல்லலை எடுத்துக் காட்டு தலில் வல்லர் அல்லாராகவும் இருத்தல் இயலும். அங்ஙனமே, வறுமையின் இடும்பையால் வருந்தி இருப்போரின் நிலையைச் செவ்வன் காட்ட வல்ல ஒருவர் செல்வச் செருக்கினைச் செம்மையாக எடுத்துக் காட்டுதல் இயலாதவராக இருத்தல் கூடும். எனினும், பழங்காலக் கவிஞர்கள் இவ்விரு திறத்தினையும் நன்ருக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவராய் இருந்தார்கள். இதற்குப் பல சான்றுகள் பத்துப்பாட்டிலும், புறநானூற்றிலும் உண்டு. அறிஞர் ஒருவர் (நக்கீரர்) மதுரை அரண் மனையைப்பற்றி வருணிக்கின்ற விதத்தை ஒரு பாட்டில் காண்கின்ரும். சிற்பநூல் வல்லவர்கள் கூர்ந்து ஆராய்ந்து எழுப்பிய அரண்மனை அது. அந்த அரண்மனைக்கு உள்ளே பல மனைகளும் வாயில்களும், மண்டபங்களும் உண்டு. தாழோடு சேர்க்கப்பட்டிருந்த பெருங்கதவுகள் நடுநிலையில் சேர்க்கப்பட்டிருந்தன. அந்த வர்சல் வழியே பிடித்த கொடிகளோடு யானைகள் நிமிர்ந்தபடி உள்ளே செல்லத்தக்க அளவு உயரமாக அவ் வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. கவரிமான்

களும், அன்னங்களும் அவ்வாசலில் விளையாடித் திரிந்தன. அந்த அரண்மனை வாயிலில் ஒரு பெரிய நிலா முற்றம் உண்டு. அந்த முற்றத்தில் நிலா வெள்ளித் தகடேபோல் பரவுவது உண்டு. அந்த நிலாமுற்றத்தின் ஓரமாகச் செயற்கை நீரருவி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் மயில்களுடைய ஆரவாரம் கேட்டுக்கொண்டிருந்தது. அருவிநீர் ஓசைகளும் கேட்டுக்கொண்டிருந்தன. குதிரைகள் நிரம்பிய புல்லைத்தின்று குதட்டும் குரல் இன்னொருபால் கேட்டுக்கொண்டிருந்தது.

இவ்வாறு அமைந்த அரண்மனையினுள்ளே பல இடங்களில் நிறைய விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அவ்விளக்குகளிற் பல யவனர்களின் பாவை விளக்குகள். அவ்விளக்குகளில் பருத்த திரிகள் போடப்பட்டிருந்தன. அடிக்கடி நெய்யை வார்த்துத் தூண்டிவிடும் மகளிர் இருந்தனர். அரண்மனையிலுள்ள நெடுஞ் சுவரிலெல்லாம் வெள்ளியை ஒத்த சாந்து பூசப்பட்டிருந்தது. அங்கு நின்ற தூண்களோ நீல மேனியை ஒத்த நிறமும் வடிவமும் உடையன. சுவர்களோ செம்பினால் வார்க்கப்பட்டவைபோல் தோற்றின. சுவர்களில் பல்வேறு பூங்கொடிகளின் உருவங்கள் அழகாக வரையப்பட்டிருந்தன.

பருத்த அழகிய வலிய யானைகளினின்று தாமே விழுந்த கொம்புகளைக் கொண்டு, வல்ல தச்சர்கள் கூரிய உளியினால் செய்தமைத்த இலை வேலையொடு கூடிய கட்டில் ஒன்று அவ்வரண்மனை

யில் இருந்தது. அந்தத் தந்தக் கட்டிலில் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தகடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. அந்தத் தகடுகளில் சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது போன்ற காட்சிகள் பொறிக்கப்பட்டு இருந்தன. பொறிக்கப்பட்டிருந்த புலிகள் உண்மைப் புலிகள் என்று தோன்றுதற்குரிய வகையில் புலிமயிர்களை உள்ளே கொடுத்து, புலியின் உடம்பில் உள்ள கோடுகள் தெரியும்படி செய்யப்பட்டிருந்தன. முல்லைப் பூக்களின் காட்சியும், பிற பூக்களின் காட்சியும் அழகு படுத்தின. தகடுகள் ஆணிகளாலே தைத்துக் கோக்கப்பட்டிருந்தன. கட்டிலைச் சுற்றி நாற்புறமும் தொங்கும்படி முத்துவடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அந்தக் கட்டிலின் கால்கள் நல்ல உருட்சி உடையனவாக இருந்தன. கட்டில் கால்களின் நடு இடங்கள் மெல்லியனவாய்த் திரண்டு இருந்தன. அந்தக் கட்டிலின்மேல் இரட்டை இரட்டையாய்ப் போடப்பட்ட மெத்தைகள் இருந்தன. அந்த மெத்தை ஒன்றில் அன்னத்தின் தூவிகள் பரப்பப் பட்டிருந்தன. அவற்றிற்குமேல் தலையணைகள் போடப்பட்டிருந்தன. கஞ்சிபோட்டுக் கழுவிய தூய துகில்மடிகள் விரிக்கப்பட்டிருந்தன. அவற்றிற்குமேல் பல பூக்கள் சொரியப்பட்டிருந்தன. அத்தகைய கட்டிலில் ஒருத்தி படுத்திருந்தாள் என்று நக்கீரர் நெடுநல்வாடையில் வருணித்துள்ளார். செல்வத்தின் செழிப்பினை வருணித்ததற்கு ஓர் எடுத்துக்காட்டு இது.

வறிய மக்களின் நிலையை உள்ளவாறு வருணித்ததற்கு ஓர் எடுத்துக்காட்டு நத்தத்தனுர் பாடிய சிறுபாணுற்றுப்படையிற் காணப்படுகிறது. வறுமையால் வாட்டமுற்ற ஒரு வீடு இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் அடுப்பு மூட்டிப் பல நாட்கள் ஆயினபோலும்! அதனுல், அடுப்பங்கரையில் நாய் குட்டிபோட்டுள்ளது. குட்டிகளோ இப்பொழுதுதான் அண்மையில் ஈனப்பட்டனபோலும்! இவை இன்னும் கண்கூடத் திறக்கவில்லை. இந்தக் குட்டிகள் தாய் மடியைக் கவர்ந்தன. மடியைத் தொடுதலைக்கூட பொறுக்கவில்லை தாய்நாய். காரணம் பால் இல்லாமையே. ஒருவரும் பாலினைக் கறந்துகொள்ளவில்லை; ஆயினும் பால் இல்லை. பலநாட்கள் சாப்பிடாத வீட்டில் உள்ள தாய்நாய் தீனி எவ்வாறு பெற்றிருத்தல் இயலும்! வேறு வீடுகளிற் போய்ச் சுற்றிப் பார்த்து வருதற்கும் இளங்குட்டிகளைப் பிரிந்து போக அந்நாய்க்கு மனமில்லைபோலும்! எனினும், குட்டிகளின் வாய் மடியில் பட்டவுடன் குரைக்கும் அளவு வறுமையுடையதாகிவிட்டது தாய்நாய் என்று காட்டும் ஆற்றல், கவிஞர் அந்த வீட்டின் பேரிடும்பையை எடுத்துக் காட்டியவராகிவிட்டார்.

அந்த வீட்டின் சுவர்களோ மிகப் பழைய சுவர்கள். கூரையில் உள்ள குச்சிகள் எல்லாம் முன்னரே விழுந்து அடுப்புக்கு உதவிவிட்டன. எஞ்சிக் கிடந்த துரும்புகளைப் பற்றிய நீரின் துணையால் கறையான்கள் தோன்றிவிட்டன. இவை அரித்த பாகம்போக எஞ்சிய சுவரின் பாகத்

திற் காளான்கள்கூட முளைத்துவிட்டன. குப்பை களில் விளைந்த வேளைக்கீரையைத் தவிர வேறு ஒன்றும் பெறமாட்டாத நிலையில் உள்ள அந்த வீட்டின் தலைவி, அந்தக் குப்பைக்கீரையைப் பறித்து அரைகுறையாய் வேகவைத்து எடுத்துத் தன் சுற்றத்தாரொடு ஒருங்குகூடி மிசைகின்ற மிக்க பசிக்காட்சியைப் படமாக வரைந்துள்ளார் நத்தத்தனார்.

புறநானூற்றிலும் இதுபோன்ற காட்சி காட் டப்பட்டுள்ளது. பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெரும்பாலும் இதனை ஒத்த காட்சியைத் தாம் பாடிய பாட்டுக்களுள் ஒன்றில் அமைத்து வைத்துள்ளார். (புறம். 164) பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாட்டிலும் இல்லாரின் இல்லநிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை காண்கிறோம். அவ்வீட்டில் வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி உண்டு. "எனக்குக் காலம் வரவில்லையே" என நொந்து நொந்து' பலவாறு புலம்பிக்கொண்டு, கையிலே பிடித்த தடிக்கம்பு காலாக அவளுக்கு உதவ, அவள் மெல்ல மெல்ல நடந்து வீட்டினுள் ஒதுங்கிக் கிடக்கும் காட்சியை அளிக்கின்ற கவிஞர் அவள் தலைமயிர் நூலை விரித்தால் ஒப்ப இருந்ததாகக் கூறியதிலிருந்து, அவளுடைய முதுமையும், வறு மையும் நன்கு அறியப்படும். அந்த வீட்டிலுள்ள மற்றொரு பெண்மகள் பசந்த மேனியோடு "இக் குழந்தைகளை எப்படியாவது காப்பாற்ற வேண் டும்!" என்று நினைத்து வருந்தியவளாய் உள்ளாள். அவள் இடுப்பிலும், கையிலும், தோளிலும் பல

குழந்தைகள் உள்ளன. ஒவ்வொரு குழந்தையும் அத்தாயை "ஏதாவது தா" என வதைத்துத் தின்றுகொண்டிருந்தன. அந்தக் குழந்தைகளில் ஒருவன் "இந்த வீட்டில்தான் ஒன்றும் இல்லையே" என்று கோபித்து வீட்டை விரும்பாணுய் வெளியே சென்றுள்ளான். எனினும், சிறிது நேரம் பொறுத்து "இப்பொழுது ஏதாவது வீட்டில் இருக்கிறதா?" என்று கருதி உள்ளே நுழைந்தவன் பானைகளையும் சட்டிகளையும் திறந்து திறந்து பார்த்துக் கூழோ, சோருே இல்லாமையைக் கண்டு அழத் தொடங்கிவிட்டான். அவனது பசியைத் தணிக்க முடியாவிட்டாலும், அவனது வருத்தத்தைத் தணிக்கக் கருதிய பெற்ருேள் "வானத்தில் உள்ள அம்புலியைப் பார்; எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று சொல்லிப் பார்த்தாள். புதல்வன் கேட்கவில்லை. "உன் தந்தையின் முகம் எப்படி இருக்கிறது; காட்டு" என்று அவனைக் கேட்டு வேடிக்கை விளைக்கப் பார்த்தாள். அதுவும் பயன் தரவில்லை. "இன்னும் அழுதுகொண்டிருந்தாயாஞல், புலி வரும்; பிடித்துக் கொடுத்துவிடுவேன்" என்று அச்சுறுத்திஞள் அன்பே உருவான அத் தாய். "வறுமைப் புலியைவிட நீ சொல்லும் மறப்புலி பெரிதோ?" என்று கேட்பவனைப்போல, அதற்கு அசையாதவனுய் அச்சிறுவன் இருந்துவிட்டான். செல்வம் இல்லாமையால் இவ்வாறெல்லாம் அல்லற்பட்ட குடும்பம் அது என்று காட்டியுள்ளார் பெருஞ்சித்திரஞர்.

நம் காலத்தில் வாழ்ந்த கவிமணி தேசிக

விநாயகமும் செல்வமக்களின் களிப்பினையும், வறிய மக்களின் மனப்புழுக்கத்தையும் அழகுபட எடுத்துக்காட்டியுள்ளார். செல்வச் சிறுமியர்கள் நல்ல பாகமாகச் செய்த பண்டம் உண்டலையும், பக்குவமான பழங்கள் உண்டலையும், நேரத்திற்கு நேரம் உடையை மாற்றி அணிதலையும், சீவிச் சிணுக்கெடுத்து மலர்சூட்டி அழகு செய்துகொள்ளு தலையும் கூறினர். "பத்துப் பசுக்களெம் வீட்டி லுண்டு - நல்ல பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை" என்று பெருமிதத்தொடு அந்தச் சிறுமியர்கள் களித்ததாக அவர் கூறினர். அதற்கெதிரே, ஏழைவீட்டுச் சிறுமியர்கள் "அன்னப்பால் காணுத ஏழைகட்கு—நல்ல ஆவின்பால் எங்கே கிடைக்கு மம்மா" என்று கதறினர்கள் என்ருர். இட்டலி என்ருல் அது எந்த எலி என்று கேட்கக்கூடிய நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான வறியவர்களுக் காக இரங்கினர். நேரத்திற்கு நேரம் காப்பி காப்பி என்று கத்துகின்ற பெருமக்களை நோக்கி, ஏழைமக்கள் "காப்பி என்பது சட்டையா? தொப்பியா? உணவுதானு?" என்று கேட்டது போல எழுதிவைத்தார். தாம் சுற்றுவது ஒரு முழந் துணி என்றும், அதில் தோன்றிய பீறல் ஆயிரம் என்றும், அக்கந்தையில் உள்ள அழுக் கினைப் போக்க முயன்ருல் அது பஞ்சு பஞ்சாகப் பறந்து போய்விடுமென்றும் ஏழைச் சிறுமியர் சொல்லியதாக அமைத்தார். பல மாதங்களாக எண்ணெய் கிடைக்க மாட்டாமையால் கூந்தல் ஈருக்கும் பேனுக்கும் இடமாயிற்றென்றும், அது

ஈந்தஞ்செடிபோல் ஆயிற்றென்றும், வாரி முடிக்க வகையில்லை என்றும் அச்சிறுமியர் கூறியதாக அமைத்திருப்பது உள்ளம் உருக்குவது ஒன்றன்றோ ?

இவ்வாறு பழந்தமிழ்ப் புலவரும், இக்காலப் புலவரும் செல்வம் நிரம்பியவர் சிறந்து விளங்கும் வகையையும், செல்வம் இல்லாதார் அல்லலுற்று வருந்தும் நிலையையும் ஒத்த ஒத்த வகையான் உயிரோவியங்களாகத் தீட்டியுள்ளார்கள் என்பது அறியப்படும்.

3. நாட்டு முன்னேற்றம்

பாரதியார் கடவுட் கொள்கைபற்றித் தம் பாடல்களிற் பல இடங்களில் சொல்லியிருப்பது கொண்டு அவரைப் பெரியதொரு சமரச ஞானி யாக மதிக்கலாம் என்பது தோன்றும். சமயம் காரணமாக மதம் பிடித்தலே வெறுத்தவர் பாரதி யார். மக்கள் எல்லாம் ஒரு குலத்தவர், ஓரினத் தவர் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக் கையுடைய அவர் கடவுள் ஒருவரே உண்டென்றும், நாமெல்லாம் அவருடைய மக்கள் என்றும் மதித் தார் என்பதில் வியப்பில்லை. "சாதிகள் இல்லை யடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்" என்றும், "சாதிக் கொடுமைகள் வேண் டாம்—அன்புதன்னில் தழைத்திடும் வையம்" என்றும் அடிக்கடி கூறிவந்த பாரதியார் பொய் மைச் சாதி வகுப்புகள் எல்லாம் தகர்க்கப்பட வேண்டும் என விழைந்தார். அதனுல், அவர் பாடிய "முரசு" என்ற தலைப்பிற் காணப்படும் பாடலொன்றில்,

> "நிகரென்று கொட்டு முரசே இந்த
> நீணிலம் வாழ்பவர் எல்லாம்;
> தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
> சாதி வகுப்பினை யெல்லாம்"

எனப் பறையறைந்தார்.

வெள்ளை நிறமுடைய பூனை ஒன்று ஈன்ற குட்டிகளில் ஒரு குட்டி சாம்பல் நிறம், ஒரு குட்டி கருநிறம், ஒரு குட்டி பாம்பு நிறம், மற்ருெரு குட்டி

பால் நிறம் என்பதற்காக, ஒரு தாய் ஈன்ற குட்டிகள் அவை அல்ல எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தாதோ, அவ்வாறே நிறம்பற்றியும் வண்ணம்பற்றியும் வர்ணங்களையும் சாதிகளையும் வகுத்தல் பொருந்தாது என்பது பாரதியார் கருத்து. இவ்வுலகிற் பிறந்த மனிதர்கள் எல்லாம் உடன்பிறந்தவர்களைப் போன்றவர் என்றும், அவர் எல்லாம் ஒத்தவர்கள் என்றும் கருதினால் உலகில் இன்பங்கள் மிகவும் பெருகும் என்று பாரதியார் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

பல சமயத்தினரும், பல வருணத்தவர் எனச் சொல்லப்படுபவரும் வணங்கும் கடவுள் முடிவில் ஒன்றே என்பது கவிஞர்மணி பாரதியாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால்தான்,

> "பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதிற்
> பற்பல சண்டைகள் வேண்டாம்"

என்றார். மேலும்,

> "தெய்வம் பலபல சொல்லிப் பகைத்
> தீயை வளர்ப்பவர் மூடர்"

என்று கூறினார்.

பாரதியார் தாம் இயற்றிய "புதிய ஆத்திச்சூடி"க்குக் கூறிய பரம்பொருள் வாழ்த்திலிருந்தே அவர் மனப்போக்கை ஒருவாறு அறிதல் இயலும். அந்த வாழ்த்தினில், பிறைசூடிய சிவன், பாற்கடற் பரமன், நபிநாயகத்தின் அல்லா, ஏசுநாதரின் தந்தை எல்லாரும் ஒருவரே என்ற தெள்ளிய அறிவினைப் புகட்டியுள்ளார். "சர்வமத சமரசம்" என்ற தலைப்பில் மந்திரங்கள் எல்லாம் முடிவில்

ஒரு கடவுளுக்கே உரியன என்பதைப் புலப்படுத்தி யுள்ளார்.

"ஓம் நமச்சிவாய" என்ருலும், "ஹரிஹரி" என்ருலும், "சிவசிவ" என்ருலும், "ஓம் சக்தி" என்ருலும் எல்லாம் ஒன்றே எனக் கூறியுள்ளார். மேலும், பாரதியார் தாமே அல்லாவைப் பற்றியும் ஏசுநாதரைப் பற்றியும் பாக்கள் இயற்றிப் போற்றியிருப்பது அவருடைய சம நோக்கிற்குத் தக்கதொரு சான்ரும்.

"கல்லாதவராயினும் உண்மை
சொல்லா தவராயினும்
பொல்லா தவராயினும்
தவமில்லா தவராயினும்

வந்து ஏத்திய அளவில் அச்சத்தைத் தீர்ப்பவர் அல்லா எனப் பாடியுள்ளார். பழைய தீமை யுணர்ச்சிகளை ஒருவர் அழித்துவிட்டால், மூன்று நாட்களில் ஒரு புத்துயிர் தோன்றும் என்பது ஏசு நாதர் வரலாற்றிஞல் விளங்குகிறது என அழகாகப் பாடியுள்ளார்.

"அறிவே தெய்வம்" என ஆயிரம் இடங் களில் அறைந்துள்ளார் பாரதியார். மாடனையும் காடனையும் இருளனையும் காட்டேறியையும் கடவுள் கடவுள் எனச் சொல்லி, அஞ்சியஞ்சிச் சாகும் மக்களுக்காக இரங்கியுள்ளார். அதஞல்

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்—எதனூடும்
நின்ருேங்கும் அறிவொன்றே தெய்வமென்று
ஓதி யறியீரோ"

எனக் கேட்டுள்ளார். "பல தெய்வம் கூட்டி

வளர்த்து வெறுங் கதைகள் சேர்த்துப்" பரப்பு கின்றீர்களே எனக் கூறி வருந்தியுள்ளார்.

உலகத்தில் கண்டங்கள் ஐந்துதான்; மதங் களோ கோடியாக இருக்கின்றனவே எனக் கருதித் துயருற்றவர் பாரதியார். "காயில் புளிப்பதும் கண்ணன், கனியில் இனிப்பதும் கண்ணன்" எனக் கருதிய அவர், "சிவனும் கண்ணனே! நினைத்தொழுவேன்" என்று கூறியுள்ளார். இன் னோர் இடத்தில்,

"தவறுணர்வீர், புவியீர்—மாலும்
சிவனும், வானோர் எவரும் ஒன்றே"

என்று சொல்லித் தமது ஒருமை யுணர்ச்சியைக் காட்டியுள்ளார். இந்திய நாட்டு மக்களின் இரங் கத்தக்க நிலையைப்பற்றிக் குறிப்பிடும் ஓரிடத்தில்,

"ஆத்திரம் கொண்டே இவன் சைவன்—இவன்
அரிபக்தனென்று பெருஞ் சண்டையிடுவார்"

எனக்கூறி, மதச் சகிப்பிலாத்தன்மை வெறுக்கத் தக்கது என்பதை உணர்த்தியுள்ளார். மேலும், பாரதியார் தமது நெஞ்சொடு பேசிய இடங்களில், ஓரிடத்தில்,

"சக்தியென்று புகழ்ந்திடுவோம், முருகன் என்போம்
சங்கரன் என்று உரைத்திடுவோம் கண்ணன் என்போம்"

எனக் குறிப்பிட்டபோது சக்தியும் சிவனும், முருக னும் வள்ளியும், அரியும் அரனும் எல்லாம் ஒன்றே என்ற முடிவையே புலப்படுத்தியுள்ளார் என்பது பெறப்படும்.

நாட்டு முன்னேற்றம்

கடவுள் ஒருவரே என்ற இத்தகைய கருத்து இக்காலத்திற்குக் கட்டாயம் வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில்தான் மக்கள் எல்லாரும் பிறப்பினுல் ஒத்தவர் என்ற எண்ணம் வலியுறும். இவ்வெண்ணம் துணையாகத்தான் சமுதாய வளர்ச்சி ஏற்படும். சமுதாய வளர்ச்சியே நாட்டு முன்னேற்றத்தின் உயிர்.

4. எழுத்தாளர்க்கு உதவி

"எழுத்தாளர்" என்பது இக்காலத்தில் எழுந்த ஒரு புதுச்சொல். எழுத்தாகிய கருவியினை எடுத்து ஆளும் திறமை படைத்தவர்களை எழுத்தாளர் என்று சொல்லுதல் தகும். எனவே, கவிஞர்கள், உரைநடையாளர்கள், ஆய்வுரையாளர்கள், செய்யுள் ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சிறுகதை ஆசிரியர்கள், நாடக ஆசிரியர்கள், இசைப்பாடல் அமைப்பவர்கள், திரைப்பட வசன ஆசிரியர்கள் முதலியவர்களை "எழுத்தாளர்" என்று சொல்வது பொருந்தும். இவ்வெழுத்தாளர்களுக்கு ஆதரவு தந்தால்தான் நாடு நலமுற்றுச் செழிக்கும் என்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்த கருத்து.

நம் நாட்டில் பழங்காலத்தில் முத்தமிழ் வல்லவர்களுக்கு ஆதரவு நிரம்ப உண்டு. இதற்குச் சங்ககாலச் செய்யுட்களே தக்க சான்று. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களின் துணையாக, ஆயிரத்துத்தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் எழுத்தாளர்களுக்கு இத்துணை ஆதரவு இருந்தது என்பதை ஒருவர் அறிதல் இயலும். பதிற்றுப்பத்தில் பரவப்படுகின்ற அரசர்கள் எழுத்தாளர்களுக்கு அளித்த நிதியங்கள் இன்ன என்பது கூறப்பட்டிருக்கிறது. நெடுஞ்சேரலாதனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் பல ஊர்களைப் பரிசிலாகப் பெற்றார். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடிய காப்பி

யாற்றுக் காப்பியனுர் நாற்பது இலட்சம் பொன் பெற்ருர் என்பதும், அரசன் ஆண்ட நாடுகளிற் பாதி பெற்ருர் என்பதும் சொல்லப்பட்டுள. இவ்வாறு, பற்பல பரிசில்களைச் சேரநாட்டு அரசர்கள் வழங்கினுரெனப் பதிற்றுப்பத்திற் காணப்படும் குறிப்பு தெரிவிக்கின்றது.

வெள்ளைக்குடி நாகனுர் என்ற புலவர் ஒருவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடித் தம் பழைய கடனை விடுதலை செய்து கொண்டார் என்பது புறநானூற்ருல் அறியப் படுவது. "உனக்குப் பிடிக்கப்படுகின்ற வெண் கொற்றக் குடை வெயிலை மறைப்பதற்கா பிடிக்கப் படுகின்றது? இல்லையே. வருந்திய குடிமக்களுக்கு நிழல்செய்வதற்கு அன்ருே அது பிடிக்கப் படுகின்றது! உன்னுடைய படைவீரர்கள் உனக்காக விளக்கின்ற எல்லாம் உழுகலப்பை ஊன்று சால் இடத்து விளைந்த நெல்லாலான பயன்தானே? இங்கு, ஏர்காவலரின் காவலனுய் மற்ற குடி மக்களையும் பாதுகாப்பாயானுல், உன் பகைவர் எல்லாம் உன்னை வணங்குவர்" என்பது உறுதி என்றவாறு பாடி, அவர் தம்முடைய கடனை விடுதலை செய்துகொண்டு, மென்மேலும் உழுதொழிலில் ஈடுபட்டு மிகப்பெரிய அளவில் விளைத்துப் பயனுற்ருர் என்பது ஊகிக்கப்படுகிறது. விவசாயக்கடன் நிவாரண மசோதா வருதற்குப் பல நூற்ருண்டுகள் முன்னரே இங்ஙனம் ஒருவர் பேசித் தம்முடைய விவசாயக் கடனைத் தீர்த்துக் கொண்டார் என அறிகின்ருேம்.

புலவர்களுக்கு வேண்டுவது இவ்வளவுதான் என்று பார்த்துத் தராமல், தம்முடைய பெருமைக் கும், ஏற்றத்திற்கும், செல்வ வளத்திற்கும் பொருந் தியவாறு நிரம்ப நிரம்ப நல்கிய பெருமக்கள் பழங் காலத்தில் தமிழகத்தில் நிறைய இருந்தார்கள். அதனால், அரசர்களையும், செல்வர்களையும், பெருங் குடி மக்களையும் பாடிய புலவர்களுடைய செய்யுட் கள் பழங்காலத்தில் நிறைய எழுந்தன. அவற்றுட் பல புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன.

அவ்வாறு செல்வர்களையும் பெருமக்களையும் பாடும் எழுத்தாளர்களுக்கே இக்காலத்தில் ஆதரவு தருவோமென்றல் பொருந்தாது. இக்காலத்தில், இந்தியாவில் அரசாங்கம் உண்டு என்றாலும் அரசர் இல்லை. எனவே, பழங்காலத்தில் அரசர் கள் எழுத்தாளர்களை ஆதரித்த அளவிற்கு இக் காலத்து அரசாங்கம் அளிக்க இயலாவிட்டாலும், ஓரளவிற்கு அவர்களை ஆதரிக்கவேண்டிய கடமை உடையது என்று சொல்லுதல் கூடும். இடைக் காலத்தில், குறுநில மன்னர்கள் எனச் சொல்லக் கூடிய ஜமீன்தார்களிடமிருந்தும், மிட்டாதார்கள் இடத்திலிருந்தும், மிராசுதார்களிடத்திலிருந்தும் நிலங்களையும் பெரு நிதியங்களையும் பெற்றுத் தன தாக்கிக்கொண்டுவிட்ட இந்திய அரசாங்கத்திற்கு எழுத்தாளர்களை ஆதரிக்கவேண்டிய பொறுப்பு உண்டு என்பது தானே விளங்கும். அதனை நம் இந்திய அரசாங்கம் நன்கு உணர்ந்து, அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட் டுள்ள பதினான்கு மொழிகளில் உள்ள எழுத்தாளர்

களுக்கு ஆதரவு தரவேண்டுமென்ற நோக்கத் தோடு முன்வந்துள்ளது. அசாமீஸ், வங்காளம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், காஷ்மீரி, மலே யாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் உள்ள எழுத்தாளர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தினுல் சாகித்திய அகாடமி என்ற ஒரு நிலேயத்தை இந்திய அரசாங்கம் நிறுவி உள் ளது. இந்தப் பதினுன்கு மொழிகளில் அமைந்த இலக்கியங்களில் சிலவற்றை ஏனேய இந்திய மொழி களிலும் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் பெயர்த்து வெளியிடுதல் என்பது சாகித்திய அகா டமியாரின் நோக்கங்களில் ஒன்று. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் வெளியாகிய தமிழ் இலக்கியங் களிற் சிறந்த ஒன்றினேத் தெரிந்தெடுத்து, அதனே இயற்றிய ஆசிரியர்க்கு ஐயாயிரம் ரூபாய் பரிசில் கொடுத்தல் வேண்டும் என்பது இந்திய அரசாங் கத்தின் எண்ணம். அதனே இயற்றுதற்குத் துணே யாகச் சாகித்திய அகாடமி பயன்படுகிறது. சாகித் திய அகாடமி உட்குழுக்கள் சிலவற்றை நியமித் துக்கொண்டு, அக்குழுக்களின் ஆலோசனேகளே யொட்டி இன்ஞருக்குப் பரிசு நல்குதல் தகும் எனச் சிபாரிசு செய்கின்றது. இந்தியா அரசியல் விடுதலேபெற்ற ஆண்டாகிய 1947-க்குப் பின் 1952-க்குள் வெளியான புத்தகங்களில் ஒன்றினே ஒவ்வொரு மொழிதோறும் தெரிந்து எடுத்துப் பரிசு வழங்குதல் என்ற திட்டத்தின்கீழ் தமிழ் மொழியில், சென்னேப் பல்கலேக் கழகத்

தமிழ்ப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களது கட்டுரை நூல் "தமிழின்பம்" என்பதற்குப் பரிசு தரப்பட்டது. பின்னர் 52-க்கும், 55-க்கும் இடைப்பட்ட காலத்திலே தோன்றிய தமிழ் நூல்களிற் சிறந்ததொன்றினுக்குப் பரிசு வழங்குதல் என்ற திட்டத்தின்கீழ் சிறுகதைத் தந்தையாகிய ஆசிரியர் கல்கி அவர்கள் இயற்றிய "அலையோசை" என்ற புதினத்திற்குப் பரிசு வழங்கப்பட்டது. அதனைப் பெறுதற்குத் திரு. கல்கி அவர்கள் உயிருடன் இல்லையாயினும், அவருடைய புதல்வர் மனைவியர் ஆகியோர் டெல்லியில் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்து அப்பரிசினைப் பெற்றார்கள்.

எழுத்தாளர்களுக்கு ஆதரவு தருதல் என்ற நோக்கத்தில்தான் இப்பரிசில் வழங்கப்படுகிறது என்பது உண்மையாயினும், இறந்துபட்ட ஆசிரியர்களுக்குப் பரிசு நல்குதல் அவர்களை ஊக்குமாறு எங்ஙனம் எனக்கேட்டல் கூடும். இந்திய அரசாங்கத்தினுடைய நோக்கம் இருவகைத்து; ஒன்று தக்கதோர் நூலிற்குப் பரிசில் வழங்குதல் என்பது; மற்றொன்று தக்கதோர் நூலினை இயற்றிய ஆசிரியர்க்கு ஆதரவு அளித்தல் என்பது. பின்னர்க் குறிப்பிட்ட ஆதரவு இறந்தவர்களைப் பொறுத்தவரையில் பொருந்தாது என்றாலும், அவர் குடும்பத்தில் உள்ள பலருக்கும் இது ஒரு பேராதரவாக இருந்துமென்மேலும் அவர்களை எழுதுவதில் ஈடுபடும்படி செய்யுமென்பது உண்மை அன்றோ? எழுத்தாளர் பிறரும் இதைப்போன்ற பெருநிதியம் ஒன்று நாம் பெறுதல் இயலுமென நூல்கள் இயற்ற முன்வரு

வார்கள் அல்லரோ! எழுத்தாளருக்கு ஆதரவு என்ற ஒரே நோக்கத்தினுல் இப்பரிசு கொடுக்கப் படுமாயின், பெரும்பாலும் வறிய எழுத்தாளருக்கு அது கொடுக்கப்பட வேண்டிய நிலை வந்துவிடும். எனவே இப்பரிசில் திட்டத்தின்கீழ் ஓரளவிற்கு எழுத்தாளருக்கு ஆதரவு உண்டு என்ருலும், போதிய அளவிற்கு உண்டு என்று கூறுதல் ஆகாது.

சிறந்த எழுத்தாளராக உள்ளவர் தம் வயது முதிர்ந்த காலத்தில் வறுமையும் பிணியும் உடையவராய் இருந்தால் அவருடைய வறுமையையும் பிணியையும் போக்க ஓரளவு பணம் கொடுத்தற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்ற எண்ணம் இந்திய அரசாங்கத்திற்கு இல்லாமல் இல்லை. தமது காளைப்பருவத்தில், செயல் உள்ள காலத்தில்' நிறைய நிறைய எழுதியும் பொருள் தேடியும் சேமித்துத் தமக்கென வைத்துக் கொள்ளாத சிலருடைய கடைசிக் காலத்தில் அரசாங்கம் உதவித் தொகை (பெஞ்சன்) அளித்தல் வேண்டுமென்ற எண்ணம் அறிஞர் சிலர் உள்ளத்தில் ஊன்றி இருக்கிறது. பரலி நெல்லையப்பர் போன்ற பழைய பெரிய எழுத்தாளர்களுக்கு இத்தகைய ஆதரவு கொடுக்கவேண்டும் என்பது சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கருத்து.

இக்காலத்தில் சிறுகதை ஆசிரியர்கள் ஆகவும், நவீனங்கள் எழுதும் ஆசிரியர்களாகவும் உள்ளவர்களுக்கு ஆதரவு பொதுமக்களிடத்திலிருந்து தாளுகக் கிடைக்கிறது. இப்பொழுது, தமிழ்

நாட்டில் சிறுகதைப் புத்தகங்களையும், புதினங்களையும் வாங்கிப் படிக்கும் மக்கள் தொகை பெருகிக் கொண்டு இருக்கிறது. எனினும், புதுவதாகப் புதுவதாக வருகின்ற புத்தகங்களை வாங்குவோர் தொகை இன்னும் அதிகமாதல் வேண்டும். மேலை நாடுகளோடு ஒப்புநோக்க, நம் நாட்டில் தாமே புத்தகங்களுக்கு விலைகொடுத்து வாங்குவோர் தொகை குறைவு. இரயில் நிலையங்களில் வைத்திருக்கும் புத்தகங்களை வாங்கிப் படிப்போர் எண்ணிக்கை மேலும் பெருகுதல் வேண்டும். இப்பொழுது ஊர்தோறும் அமைக்கப்பட்டு வரும் நூல்நிலையங்களிலும் புத்தகங்களிற் பல பிரதிகள் வாங்கி வைக்கப்படவேண்டும்.

எழுத்தாளர்கள் பொதுமக்களிடத்தில், வாசகர்களிடத்தில், ஆதரவு பெறுகிறுர்கள் என்று சொல்லுதல் கூடுமாயினும் அவ்வாதரவு முழுதும் அவ்வெழுத்தாளர்களுக்கு உரியதாகும்படி செய்ய வேண்டிய கடமை பதிப்பாசிரியர்களுடையது. தாமே எழுதும் நூல்களைத் தாமே வெளியிடும் ஆசிரியர்கள் குறைவு. அவர்களே வெளியிடுதற்கு வேண்டிய வசதிகளை உடையவரல்லராகவே பெரும்பான்மையோர் உள்ளார். அல்லாமலும், பதிப்பகங்கள் நூல்வெளியீட்டினைச் செவ்வையாகச் செய்யக்கூடியனவாக உள்ளபொழுது அப்பதிப்பகங்களோடு நூலாசிரியர்களும் போய்ப் போட்டிபோடவேண்டிய கட்டாயம் இல்லை. ஆயினும், பதிப்பகங்களும் பதிப்பாசிரியர்களும் எழுத்தாளரிடத்திலிருந்து அவர் எழுத்துக்குரிய உரிமை

யைக் காபிரைட்டாக விலைக்கு வாங்கிவிடாமல், தக்க மதிப்பிட்டுத் தகுந்த வழியில் வாங்குதல் முறையாகும். ஒரு சிறுதொகையைக் கொடுத்து ஒரு நூலினைக் காப்பிரைட்டாகப் பெற்றுவிட்டு நூலின் விற்பனையில் பிறகு எந்தத் தொடர்பும் நூலாசிரயர் வைத்துக் கொள்ளாதவாறு பதிப்பகங்கள் செய்வது குறைதல்வேண்டும். சிறந்த நல்ல நூலாசிரியர்கள் எழுதும் நூல்கள் ஆண்டுதோறும் விற்பனையாகின்ற அளவையொட்டி ஊதியம் கிடைக்கப்பெறுமாறு செய்தல் வேண்டும். நூறு ரூபாய்க்குப் புத்தகம் விற்ருல், பத்து அல்லது பதினைந்து ரூபாய் கொடுத்து நிறுத்திவிடுகின்ற வெளியீட்டாளர்கள் சிலர் உண்டு. நூற்றுக்கு இருபது, இருபத்தைந்து விகிதம் தருகிறவர்கள் சிலர் உண்டு. செலவினங்களை நீக்கி நிகர இலாபத்தில் ஒருகூறு பதிப்பாசிரியர்க்கும் ஒருகூறு எழுத்தாளருக்கும் உண்டு என்றவாறு வரையறை செய்து நம் நாட்டில் எழுத்தாளர்களுக்கு ஊதியம் நல்கப் பதிப்பாளர்கள் முன்வருவார்களாளுல், எழுத்தாளருக்குரிய ஆதரவினை நல்கிய பெருமக்கள் என அவர்கள் போற்றப்படுவார்கள்.

அதிகமாக விற்பனையாகும் நூல்கள், கதைகள், நாடகங்கள் முதலிய நூல்களைப் போல அல்லாமலும், மிகவும் அருகிய வகையிலே செலவாகும் இலக்கியச் செய்யுள் நூல்களைப் போல அல்லாமலும், இவற்றின் இடைப்பட்ட நிலையில் உள்ள தமிழ்க் கட்டுரைகளை எழுதுபவர்கள் உள்ளார்கள். வேடிக்கையாக எழுதிப் படிக்குங்கால்

மகிழ்ந்து தள்ளிவிடக்கூடிய கட்டுரைகள் சில உண்டு. திரும்பத்திரும்பப் படிக்கப் பின்னரும் பெரும்பயன் நல்கும் கட்டுரைகள் பல உண்டு. இவைபோன்ற நூல்களை வெளியிடுகின்ற பதிப்பாளர்களும் முன்னர்ச் சொல்லியவாறு ஊதியத்தில் ஒருகூறு இவ்வெழுத்தாளர்களுக்குத் தர முன்வருதல் வேண்டும். தமிழ்ப் பத்திரிகை நிலையங்களிலும் எழுத்தாளர்களுக்கு ஆதரவு இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் அதிகமாக நல்குதல் வேண்டும். திரைப்பட வசனம் எழுதித் தருவோர்க்கு ஐம்பது ரூபாய் அல்லது நூறு ரூபாய் அளவே கொடுத்து ஒதுக்கி விடுகிருர்கள் சிலர். அஃது ஒவ்வாது. சினிமாப் படத்தின் வெற்றிக்கு விறுவிறுப்புள்ள வசனமும் பேருதவியாய் இருத்தலின், வசன எழுத்தாளருக்கு, உரையாடல் எழுத்தாளருக்கு, அதிகமான ஆதரவு காட்டுதல் பொருத்த முடைத்தேயாகும்.

சில நூல்களைப் பதிப்பகத்தில் வெளிப்படுத்திஞல் பத்து, இருபது ஆண்டுகட்குக்கூட ஐந்நூறு, ஆயிரம் பிரதிகள் விற்கமுடியாத நிலை இருத்தலும் உண்டு. அத்தகைய நூல்களை வெளியிடுகிறபொழுது பதிப்பகங்கள் பெரும்பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றன. ஊதியம் திரட்டப் படவேண்டுமென்ற நோக்கத்திஞல் மாத்திரம் அல்லாமல் பலவிதமான நூல்களை நிலவவிட வேண்டும் என்ற விழுமிய நோக்கத்திஞல், தாமே முன்பணம் போட்டுப் பதிப்பித்து இலாபம் அடைதலை எதிர்பார்த்து இருக்கும் பதிப்பகங்கள் சில

உண்டு. பணவசதி உடைய எழுத்தாளர்கள் பதிப்பகங்களோடு ஒத்துழைத்துத் தம்முடைய பணத்திலிருந்து ஒருகூறு கொடுத்து நூல்களைப் பதிப்பிக்கவும் முன்வருதல் வேண்டும். அதிகமாக விலையாகக்கூடாத புதிய நல்ல நூல்களை இயற்றுகின்ற ஆசிரியர்க்கு ஆதரவு நல்குதற்குச் சென்னை மாநில அரசாங்கமும், பல்கலைக் கழகங்களும் முன்வருதல் வேண்டும். இத்துறையில் உதவி செய்தற்குத்தான் தென்னிந்திய மொழி அறநிலையம் (Southern Languages Book Trust) என்பது ஒன்று அண்மையான ஆண்டில் நிறுவப்பட்டுப் பணியாற்ற முன்வந்திருக்கிறது. ஆயிரக் கணக்கான பிரதிகளை வெளிப்படுத்தி நூல்களைப் பரவச் செய்வதும் நூலாசிரியர்களுக்குத் தக்க சன்மானம் அளிப்பதும் இந்நிலையத்தின் நோக்கம். வருங் காலத்தில் இந்நிலையத்தின் ஆதரவு எழுத்தாளர்களுக்கு நிரம்பக் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. சென்னை மாநில அரசாங்கம் தேர்ந்த எழுத்தாளர் சிலருடைய நூல்களுக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு அளித்து வந்ததை இப்பொழுது ஆயிரம் ரூபாயாக அமைத்திருக்கிறது. பல்வேறு துறைகளில் எழுதப்படும் புத்தகங்களைப் பாகுபடுத்திப் பரிசுகளை வழங்கும் திட்டம் ஒன்று சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் உருவாக்கப்பட்டது சென்னை அரசினரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. நடுநிலையாளர் மூவர் தேர்ந்து தம் கருத்தினைத் தெரிவிக்க, அதன் அடிப்படையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் அரசாங்கத்

திற்குச் சில நூல்களைப் பரிசு பெறுதற்குரியன எனச் சிபாரிசு செய்கின்றது. ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசில்கள் எழுத்தாளர்களுக்கு ஆதரவே யாகும். கையெழுத்துப் பிரதிகளாகச் சென்னை அரசினர் கையெழுத்து நூனிலையத்திலும், தஞ்சை சரசுவதிமகால் நூனிலையத்திலும் உள்ள சில பண்டைய ஏடுகளை வெளிப்படுத்துதற்கு எழுத்தாளர் சிலர் அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுகிருர்கள்.

சீன தேசத்தில் உள்ளதைப்போல நம் நாட்டிலும் எழுத்தாளருடைய கூட்டுச் சங்கங்கள் (யூனியன்) அமைக்கப்பட்டால், கூட்டுறவுமுறையில் எழுத்தாளர்கள் தமக்கு வேண்டிய ஆதரவினைத் தேடிக்கொள்ளுதல் இயலும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழுக்குப் பிறகு அமைக்கப் பட்ட சீன தேசத்து எழுத்தாளர் கூட்டுப்பேரவை செய்யுள் எழுதிய இளைய எழுத்தாளர்கள் இருநூற்றுவருடைய படைப்புக்களைத் தொகுத்து வெளிப்படுத்தி உள்ளது. இத்தகைய எழுத்தாளர்கள் பலவகையான வாழ்க்கை நிலையில் இருந்தும் வருபவர்கள். ஆடைநெய்பவரும், படைவீரரும், விவசாயிகளும் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களும் இயற்றிய நூல்களிற் சிலச்சில பகுதிகள் இக்கூட்டுச் சங்கத்தின் ஆதரவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அம்மாதிரியான முறையை நம் நாட்டிற் பல பத்திரிகைகள் கடைப்பிடிக்கின்றன. வாழ்க்கையின் பலதிறப்பட்டவர்களிடத்தில் இருந்தும் பலவகையான தொழிலாளர்களிடத்தி

லிருந்தும் கிடைக்கப்பெறும் கதைகளையும் கட்டு ரைகளையும் வெளிப்படுத்தி அவர்களுக்குச் சிறு சிறு சன்மானம் வழங்குகின்ற பத்திரிகைகள் பல நம் நாட்டில் உண்டு. எனினும், இவ்வாறு பத்தி ரிகைகளில் வெளியாகும் கதைகளுக்கும், கட்டுரை களுக்கும் போதுமான தக்க சன்மானம் தரும் பத்திரிகைகள் ஒன்று அல்லது இரண்டே உண்டு. இவற்றைத் தெரிந்தெடுத்துத் தொகுத்து வெளி யிடும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத் தாளர் சங்கங்கள் இன்னும் நம் நாட்டில் உண்டாக வில்லை. உள்ள எழுத்தாளர் சங்கங்களை வலுப் படுத்துவதால் இவைபோன்ற நோக்கங்கள் நிறை வேறும்.

இக்காலத்தில் நம் நாட்டில் தமிழ் வளர்ச் சிக்குரிய திட்டங்களில், எழுத்தாளர்களுக்கு ஆதரவு கொடுத்தல் என்பதை நிறைவேற்றப் பலப் பல அமைப்புக்கள் முன் வருதல்வேண்டும்.

5. அறங்கள்

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் பேசப்படும்பொழுது அறத்திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு வருதல் கண்கூடு. பொருளும், இன்பமும் அறத்தின் வழியே தோற்றுவன என்ற கருத்து பழங்காலந்தொட்டு நம் நாட்டில் இருந்து வருகிறது. புறநானூற்றுப் பாடலாகக் காணப் படுகின்ற ஒன்றினுள், சேர மன்னர், பாண்டிய மன்னர் ஆகிய இருவருடைய குடைகள் பின்னும், சோழ மன்னருடைய குடை முன்னும் வருகின்ற காட்சியைத் தெரிவிக்கக் கருதிய புலவர் ஒருவர் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னர் அமைந் திருக்கின்ற செய்தியைக் குறிப்பிட்டார் என அறிகிறோம். அற வழியிலே பொருள் ஈட்டி அறத் தாற்றிலே இன்பம் துய்க்கவேண்டும் என்பது தொன்றுதொட்டு வரும் கருத்து.

> " அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
> தீதின்றி வந்த பொருள் "

என்றார் திருவள்ளுவர். குற்றம் இல்லாத வழியில் ஈட்டும் பொருள் அறத்தைத் தரும், இன்பத்தையும் தரும் என்பது அவரால் வற்புறுத்தப்பட்டது. அற வழியால் விளைவதே இன்பம்; பிற வழிகளால் வருவது துன்பம் என்பதும் திருவள்ளுவர் கருத்து. அதனால்,

> " அறத்தான் வருவதே இன்பம் ; மற்றெல்லாம்
> புறத்த ; புகழும் இல "

என்றார் திருவள்ளுவர். இக்காரணங்களால், அறத்

திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு, பொருள் இன்பம் ஆகியவற்றிற்கு மற்ற இடங்கள் கொடுக்கப்பட்டன என்பது அறியப்படும். அதனால்தான், கோவூர்கிழார்

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க"

என்று கூறினர்.

அறம் என்பதை ஈதல் அல்லது கொடுத்தல் என்ற பொருளிற் பொதுவாக வழங்கினர் என்றாலும், இன்னாருக்கு இன்ன அளவு, இன்னவர்க்கு இன்ன அளவு என்றவாறு வரையறை செய்து கொண்டு வாழ்கின்ற முறையைக் காட்டுவதுதான் அறம் என்பது அச்சொல்லின் அடிப் பொருளால் விளங்கும். அறுக்கப்படுவது அறம்; அல்லது வரையறை செய்யப்படுவதொன்று என்ற கருத்து புலப்படும். அறம் என்றாலே பகுத்துண்பது என்பது

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது"

என்ற குறளால் விளங்கும். திருக்குறளுக்கு உரை வகுத்தவர்கள் "அறன்" என்பதற்குப் பகுத்து உண்டல், அதாவது பிறர்க்கு எல்லாம் பங்கிட்டுக் கொண்டு உண்ணுதல் என்று எழுதினார்கள். அறம் என்ற சொல்லுக்குக் கடமை என்ற பொருளும் உண்டு.

"அறனேக்கி ஆற்றுங்கொல் வையம் புறனேக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை"

என்ற திருக்குறளில் வரும் அறன் என்பதற்குக் கடமை என்ற பொருள் உண்டு. ஒருவன் முன்னே அவனைப் புகழ்ந்துரைத்து அவன்பின்னே இல்லாததும் பொல்லாததும் சொல்லித் தூற்றுபவரைச் சுமக்கின்ற பெரும் பாரத்தை உலகம் பொறுக்க வேண்டும் என்ற கடமையால் அன்றோ தாங்குகின்றது என இப்பாட்டிஞல் விளக்குகின்ருர் வள்ளுவர். எனவே, அறம் என்ற சொல்லுக்குக் கடமை என்பது பொருள் என்பது பெறப்படும். சான்ருேராயினேர்க்கு நல்லன எல்லாம் கடன்; அல்லன எல்லாம் கடமை அல்லாதவை.

சில வேளைகளிற் பிறர்க்கு நல்லன செய்ய முடியாவிட்டாலும் அல்லது செய்தலையாவது ஒருவர் தவிர்த்தல் வேண்டும். "நல்லன செய்தல் ஆற்றீராயின் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ருர் அறிஞர் ஒருவர். நல்லன செய்தல் என்ருல் பொருள்களைக் கொண்டே நல்லன செய்தல் என்பது கருத்தாகாது. உடம்பிஞலும், உரையாலும், உள்ளத்தாலும் பிறர்க்கு நல்லன செய்தல் இயலும். அவற்றையெல்லாம் செய்க என்பதே கருத்து. அதஞல், உடலாற் செய்யப்படும் அறங்கள், உள்ளத்தாற் செய்யப்படும் அறங்கள், உரையாற் செய்யப்படும் அறங்கள் என்று இவை முத்திறப்படும். ஒருவர் நல்ல செல்வாக்கு உடையவராய் இருந்தால், தம் சொல் செல்லுகின்ற இடத்தில்

அதனைப் பயன்படுத்தி அதனுல் நன்மை செய்தலும் விரும்பத்தக்கதொன்று.

அறங்களை முப்பத்திரண்டு வகையென வகுத்தவர்கள் அவற்றில் ஒவ்வொன்ருக ஆதுலர் சாலையையும், ஓதுவார்க்குணவையும், அறுவகைச் சமயத்தவர்க்கு உண்டியையும், சிறைச் சோற்றினையும் கூறியுள்ளார்கள். எனவே, உண்டிக்குக் கொடுக்கப்பட்ட சிறந்த இடம் அறியப்படும்.

அறங்களைத் தொடர்புடையோர்க்குச் செய்வன என்றும், தொடர்பு இல்லாதார்மாட்டு அல்லது பிற உயிர்கள் மாட்டுச் செய்வன என்றும், கடவுளுக்குச் செய்வன என்றும் மூன்று வகையாகப் பிரித்தலும் ஒரு மரபு. எவ்வாறெனினும், அறத்திற்கு அடிப்படை இன்சொல் என்பதும், அது வெளிப்படும் வகை ஈகை என்பதும், அன்பொடு இயைந்தே அது செய்யப்படவேண்டும் என்பதும், வன்சொல் நீக்கி இயற்றப்படவேண்டும் என்பதும், வாய்மை இன்றி அது தழைக்காது என்பதும் ஆன்ருேர் கருத்து.

> “ இன்சொல் விளைநிலனு ஈதலே வித்தாக
> வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
> அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய் ”

என்பது அறநெறிச்சாரம்.

அறம் என்பதற்கு விட்டுக் கொடுத்தல் என்ற பொருளும் உண்டு. ஒருவருடைய உரிமைகளை அல்லது ஒருவருடைய சொத்துக்களைச் சமயத்தில் பிறருக்கு விட்டுக்கொடுத்தல் என்பதும் அறம்

எனப்படும். அதனுல்தான், இக்காலத்தில் தோன்றிய நிலக்கொடை இயக்கமும் ஒரு பேரறமாக மதிக்கப்பட்டு வருகிறது. தன்னைப்போலப் பிறரை ஒருவன் மதித்தல் வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வறம் எழுகின்றது. தனக்கு இன்னுதன பிறர்க்கு இன்னுமை பயக்கும் என்பதை ஒருவன் அறிந்திருப்பானுனல், பிறர் எவர்க்கும் தீமை செய்யச் சிந்தையாலும் எண்ணுன். திருவள்ளுவரும்,

> " இன்னு எனத்தான் உணர்ந்தவை துன்னுமை
> வேண்டும் பிறன்கட செயல் "

என்ருர். பக்கத்து வீட்டாரைத் தன்னைப்போல் மதித்து அவர்க்கு அன்பு காட்டவேண்டும் என்ற ஆங்கில மொழியில் அமைந்த கருத்தும் உன்னத் தக்கது. அயல் வீட்டாரிடத்தில் ஒருவன் அன்பு செலுத்தல் வேண்டும் என்ருல், ஒருவன் தன்னிடத்தில் தானே முதலில் அன்புடையவனுக இருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். தன்னை விரும்பினுல்தான் பிறரை நேசிக்க ஒருவனுல் இயலும். தன்னிடத்திலிருந்து சுற்றத்தாரிடத்து அன்பு வளருகிறது; சுற்றத்தார் இடத்திலிருந்து ஊரார் இடத்துப் பெருகி வளருகிறது; ஊராரிடம் இருந்து நாட்டார் இடத்தில், நாட்டார் இடத்தில் இருந்து தேயத்தின் இடத்தில், தேயத்தின் இடத்திலிருந்து ' உலகத்தின் இடத்தில் இவ்வன்பு வளருகிறது. எனவே, ஒன்ருேடொன்று தொடர்புடையனவாய் இவை சங்கிலிப் பிணைப்பாக நிற்கின்ற நிலை அறியப்படும். அதனுல், தன்னை

மறந்து, தன் இனத்தவரையும் ஊராரையும் மறந்து, பிறர்க்கே அறம் செய்யவேண்டும் என்ற கருத்து இயற்கைக்கு வேறுபட்டதாக இருத்தலை விரைவில் அறிந்துகொள்ளுதல் இயலும்.

அறம் என்பது மனத்தில் மாசில்லாமை என்று கூறுதல் தகும்.

> " மனத்துக்கண் மாசிலன் ஆதல் ; அனைத்துஅறன்
> ஆகுல நீர பிற "

என்றார் திருவள்ளுவர். ஒருவர் மனத்திலே தூய எண்ணங்களை எண்ணுதவராய் இருந்தால், அவருடைய செய்கையறம் பயன்விளைக்காது என்பது கருத்து. பொருள்கொண்டு இயற்றப்படும் பல செயல்களால் அறம் எனச் சொல்லத்தக்கவை இயற்றப்பட்டாலும், புற வேடங்களால் அறம் எனக் கருதப்படுவது இயற்றப்பட்டாலும், மனத்தில் மாசு உண்டு என்றால், குற்றம் உண்டு என்றால், பழிபாவத்திற்கு இரங்கும் பண்பு இல்லை என்றால், அவ்வேடங்களாற் பயன் இல்லை என்பதே கருத்து. ஒருவன் பொருள் துணையாக அறங்கள் செய்யவில்லை என்றாலும், அறம் என்பதன் பெயரைக்கூடச் சொல்லவில்லை என்றாலும், புறத்தே அணியத்தக்க சமயச் சின்னங்கள் முதலானவற்றை அணிந்துகொள்ளவில்லை என்றாலும், அவன் மனத்தில் மாசு மறு அற்றவனாய் இருப்பின், அவனே சிறந்த அறம் செய்தவனாக உண்மையில் மதிக்கப்படவேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. அதனால்தான் மனத்துக்கண் மாசு அற்றவராக ஒருவர் வாழ்கின்ற அளவே அறமாவது ;

மற்றவை எல்லாம் ஆடம்பரத்தோடு பிறர் அறியு மாறு செய்யப்பட்டவை என்றார் அவர். ஒருவன் ஒரு விரதத்தைக் காக்கின்றான் என்றால், ஒருவன் பலர்க்குக் கொடுக்கின்றான் என்றால், அவன் அவ்விரதத்தைப் பிறர் அறியாமல்தானே இயற்ற முற்படுதலும், விளம்பரம் இன்றிக் கொடுத்தலும் தக்கன என்பது ஏசுநாதர் கருத்து. பட்டினி நோன்பு ஒருவர் இயற்றுகின்றார் என்றால், ஒருவர் நிறையப் பணம் கொடுக்கின்றார் என்றால், அவற்றை விளம்பரப்படுத்திச் செய்தலைக்காட்டி லும், பிறர் எவரும் அறியாவாறு செய்தல் நல்லது என்றார் அவர். பட்டினியால் விளைந்த வாட்டத்தை முகங்காட்டாதவாறு தோற்றத்தை அமைத்துக் கொண்டு நோன்பு நோற்றல் நல்லது என்றார் அவர். தன் வலது கை கொடுப்பது இடது கைக்குக் கூடத் தெரியக்கூடாது என்பது சொல்லப்பட்டது. இவ்வாறு கூறியதன் நோக்கம் ஒருவர் கொடுக் கின்றார் என்ற காரணத்தினால் அடைகின்ற புகழை அவர் பெற்றுவிட்டதால், அவர் கொடையின் பயனை இவ்வுலகத்தில் தானே பெற்றுவிடுதல் கூடும்; பிறகு ஒருமுறை கடவுளால் அதற்காக எனப் பாராட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதாகும்.

புற வேடங்கள் என்று சொல்லப்படுபவை பெரும்பாலும் சமயச் சின்னங்களே. ஒருவருடைய தோற்றத்தைக்கொண்டே அவர் இந்தச் சமயத் தினர் அல்லது இந்த மதத்தினர் எனக் கூறுதற்கு உதவும் அடையாளங்கள் சமயச்சின்னங்கள் எனப்

படும். திருநீறு அணிகிறவர் சைவர் என்றும், திருமண்காப்பு இடுகிறவர் வைணவர் என்றும் புறத் தோற்றத்தால் அறியப்படுவர். இந்த இந்தச் சமயத்திற் பிறந்தவர்கள் அல்லது இந்த இந்தச் சமயத்தைத் தழுவியவர்கள் இந்த இந்த அடையாளங்களை மேற்கொள்வதில் தவறு இல்லை. ஆனால், இந்த அடையாளங்களைக் கொள்ளாத காரணத்தால் ஒருவர் ஒழுக்கம் குன்றியவர் என்றோ, கடவுளை வழிபடும் பான்மையர் அல்லர் என்றோ கூறுதல் ஒவ்வாது. ஒருவர்க்கு அகத்திலே தூய்மை உண்டாவது வாய்மையால் ஆகும். புறத்திலே அமையும் தூய்மையே நீரினால் ஏற் படுவது. இதனை மக்கள் சிந்தித்தல் வேண்டும். ஒரு நாளில் மூன்று முறை குளிக்காதவரும், திரு நீறு அணியாதவரும், திருமண்காப்பு இடாதவரும் கடவுளுக்குப் புறம்பானவர் என்ற கருத்து தவறு பட்ட கருத்தாக இருத்தல்கூடும் என்ற எண்ணம் நம் மக்களிற் பலருக்கு உண்டாதல் இல்லை. கடவுள் வழிபாட்டிற்குத் துணையாக, சார்பாகச் சமயச் சின்னங்கள் இருக்கின்றன என்று வேண்டுமானால் ஒருவர் கூறுதல்கூடும். ஆயினும், சமயச் சின் னங்கள் வேறு, சமயம் வேறு என்பது அறியப் படுதல் வேண்டும். ஒருவர் உடுத்துகின்ற விதமும், உண்ணுகின்ற விதமும், குடிக்கின்ற விதமும் சமூகச் செய்திகளே ஒழியச் சமயச் செய்திகள் அல்ல என்ற எண்ணம் நன்றாக நாட்டிற் பரவ வில்லை. சமயம் என்பது மனிதனுக்கும் கடவுளுக் கும் ஏற்பட்ட ஒரு தொடர்பினைப் பற்றியதாகும்.

சமயத்திற்குரிய ஆங்கிலச் சொல்லுக்கு விளக்கம் தருகின்ற பெரியவர்கள் மனத்தை இறைவனோடு இயைப்பது சமயம் என்றும், மன மாசுகள் நீங்கப் பெற்று ஒருவன் இப்பிறவியில் தானே மறுபிறப் பெய்துதல் சமயம் என்றும் கூறுகின்றார்கள். இப் பிறவியிலேயே மறுபிறப்பு எய்துதல் என்றால், ஒருவன் உள்ளத்தில் உள்ள தீமைகளை எல்லாம் அகற்றிவிட்டுத் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டு புது மனிதன் ஆகின்றான் என்பது பொருள் என்று டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் கூறியுள்ளார். இந்த நிலைதான் ஒவ்வொரு மனித னுக்கும் உண்டாதல் வேண்டும். உண்டானபிறகு தான் ஒருவன் ஒரு சமயம் சார்ந்தவன் என்று சொல்லுதல் பொருந்தும். அதுவரை அவன் தழுவுகின்ற சமயம் என்று சொல்லப்படுவது உண்மைச் சமயம் அன்று; சமுதாய வழக்கமாக இருக்கலாம்.

ஆயினும், புறவேடம் கொள்ளக்கூடியவர்கள் உண்மையில் அந்நெறி நிற்பவர்கள் எனில், அவர்க்கு அதனாலேயும் ஒரு நன்மை உண்டு. "வேடநெறி நில்லாதோர் வேடம் பூண்டு என் பயன்" என்றவரே "வேடநெறி நிற்பார் வேடம் மெய்வேடமே" என்றார். எனவே, புறவேடம் புனை பவரை, சமயச் சின்னங்கள் அணிபவரைக் கண் டால் ஒருவர் குறை கூறாது இருத்தலே விரும் பத்தக்கதாகும். புற வேடம் தாங்கியவர்கள் சிலர் அகத்தே அஞ்சத்தக்க பெருஞ் சழக்க ராய் வன்கண்ணராய் வாழ்கிறார்கள் என்ற

ஒரே காரணத்தால், அவ்வேடம் தாங்குபவர் அனைவரையும் குறைகூறுதல் பொருந்தாது. அதே காலத்தில் சமயச் சின்னங்களை அணிகின்றவர்க்கு உள்ள பெரும்பொறுப்பினையும் அவர்கள் உணர்தல் வேண்டும். திருநீறு, திருமண்காப்பு இடுபவருடைய வாழ்க்கையை உலக மக்கள் ஆய்ந்து பார்க்கிறார்கள் என்ற எண்ணம் அவர்க்குச் சிறிதாவது உண்டு என்றால், அவர்கள் தம்முடைய பல்வேறு செயல்களை ஒழுங்காக வகுத்து அமைத்துக் கொள்வர் என்பதில் ஐயம் இல்லை. புறவேடம் தாங்கிக் கோயில் வழிபாடு மாத்திரம் செய்துவருகின்ற காரணத்தால், ஒருவர் உயர்ந்துவிடுதல் இல்லை என்ற கருத்து வற்புறுத்தப்பட வேண்டும். கோயில் வழிபாட்டில் ஒருவர் ஈடுபடும் நேரம் ஒரு நாளில் அரை நாழிகையோ கால் நாழிகையோ ஆகும். கோயிலுக்குப் புறம்பாகவும் கடவுள் உள்ளார் என்பதை மதித்து ஒருவர் நடக்கின்றாரா என ஓர்ந்து உடன் உணரும் ஆற்றல் படைத்தவர் கடவுள். அதனால் கோயிலுக்கு வெளியே உள்ள இருபத்து மூன்று மணி நேரங்களில் ஒருவர் நினைவிலும் கனவிலுமாக எவ்வாறு வாழ்கின்றார் என்பது அவர் அறிய முடியாதது ஒன்றன்று. அந்த வாழ்க்கையை மதிப்பிட்டுக் கடவுள் ஒருவர்க்கு நல்லதோ அல்லதோ செய்வார் என்ற நம்பிக்கை பெருகுதல் வேண்டும். அதனால்தான், திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார்.

கல்வி கற்றவர்களின் கடமைகளில் ஒன்று இறைவனை வழிபடுதல் என்பது. இறைவனுடைய

3650—4

நற்றுளைத் தொழாமல் இருப்பாராஞல் ஒருவருடைய கல்வியாலான பயன் யாது என்று திருவள்ளுவர் கேட்டார்.

> " கற்றதனுல் ஆய பயன்என்கொல், வாலறிவன்
> நற்றுள் தொழாஅர் எனின் "

என்பது கடவுள் வாழ்த்து அதிகாரத்திற் காணப்படுகிறது. கடவுளைத் தொழுதல் என்ருல், மூவாத சாவாத யாவர்க்கும் மேலான ஒரு பரம்பொருளைத் தொழுதல் என்பது கருத்து. தம்மால் தம்மால் வழிபடப்படும் கடவுளே கடவுள், பிற எல்லாம் கடவுள் அல்ல என்பதுபோலச் சிலர் கருதுகின்ற கருத்து பொருந்தாது. ஒவ்வொரு சமயத்தினரும் தம்மால் தம்மால் வணங்கப்படும் கடவுளே தக்க கடவுள் என்றும், மற்ற கடவுளரை வழிபடுகிறவர்கள் உய்வே அடையார் என்றும் கருதுகிருர்கள். அக்கருத்து தவறுடைத்து. ஓர் ஊரும் ஒரு பெயரும் ஓர் உருவமும் ஒரு நிறமும் கூறவொண்ணுத முழுமுதல் குறித்த ஒரு சமயத்தார்க்கே உரியராகிவிட்டார் என்று கொள்ளுகின்ற கருத்து தவறுபட்டதே என்பது இக்காலப் பேரறிஞர்களுக்கு ஒப்ப முடிந்தது. கடவுளை முற்றமுடியக் கண்டுகொள்ளமாட்டாமல், முற்றமுடிய அறிந்துகொள்ளமாட்டாமல் அறிந்த அறிந்த ஒவ்வொருவர் அளவுக்கேற்ப ஒவ்வொரு சமயத் தலைவரும் கடவுட் பண்பினை விளக்கிப் போயுள்ளனர். நம் எதிரே மணம் உடைய மலர்மாலை ஒன்று இருப்பதாகவைத்துக்கொள்வோம். அதன் மணத்தை மாத்திரம் மூக்கு முகருகிறது; அதன் நிறத்தை மாத்திரம்

கண்கள் அறிகின்றன ; அதனுடைய மெல்லியலை மாத்திரம் உடம்பு உணர்கிறது. மாலை ஒன்றே யானாலும், நுகருகின்ற பொறிகளின் இயல்புக்கு ஏற்ப ஒரோ ஒரு புலன்தான் ஒவ்வொரு பொறிக்கும் ஏற்படுகிறது. அதுபோலக் கடவுள் ஒருவரே யானா லும், பற்றுபவர் திறத்திற்கு ஏற்ப ஒரோ ஒரு பெற்றிதான் ஒவ்வொரு ஞானிக்கும் புலனாகிறது. இந்த ஞானிக்கு மற்ற சமயத்தாரைவிட அதிக மாகக் கடவுளை உணரும் திறம் இருந்தது என்று சொல்லுவதன் காரணமாகத்தான் வாதமும் பிடி வாதமும், கலாமும் பூசலும் உண்டாகின்றன. யாவர்க்கும் மேலாம் ஒருவரான முழுமுதலை எவ் வேடத்திலும் வழிபடலாம், எவ்விதத்திலும் வழிபட லாம், புறத்தேயும் வழிபடலாம், அகத்தேயும் வழி படலாம் என்ற பரந்த நோக்கம் மக்களிடம் பெருகு தல் வேண்டும். மரத்தாற் செய்யப்பட்ட ஒரு யானை யைப் பார்ப்பவர்க்கு அது மரமாகவும் இருத்தல் கூடும் ; யானையாகவும் இருத்தல் கூடும். பார்க் கின்றவர்களின் பார்வைக்கேற்ப மரக்காட்சியில் யானை மறைந்துவிடுதலும், யானைக்காட்சியில் மரம் மறைந்துவிடுதலும் உண்டு. சலவைக் கல்லினலான நல்ல நாயுருவத்தை நோக்குகின்ற ஒருவர் கல் உணர்ச்சியினின்று விடுபட்டு நாய் அழகிலேயே ஈடுபட்டு இருப்பர். அதுபோல உருவங்களை வழி படும்பொழுது கல் என்றும், செம்பென்றும், மண் என்றும் கருதாமல், அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் பேரொளியின்கண்ணே நம் மனம் செல்லு தல் வேண்டும். இந்தப் பழக்கம் கைகூடுதற்கு

உருவ வழிபாடு சாதனமே அல்லாது முடிவன்று. இதனை நன்கு உணருவோமானால் அரன் அதிகம் என்றும், அரி உயர்வு என்றும், அயன் நய முடையன் என்றும் கூறமாட்டோம். பசுக்கள் வெவ்வேறு நிறம் உடையனவானாலும், அவை கறக்கும் பால் வெண்மை நிறமே உடையதுபோல, பல்வேறு சமயங்கள் !சொல்லும் கடவுளர் பல்வேறு உருவினரானாலும், முடிவில் கடவுள் ஒரே இயல்பு உடையவராக இருப்பர் என்பது நாம் கேட்டறிந்தது ஒன்றன்றோ? விறகுகள் வெவ்வேறு விதத்தினவாக இருந்தாலும், அவற்றினின்று எழுந்து எரியும் தீ ஒரே வகையாக இருத்தல் போலப் பல்வேறு சமயங்கள் கூறிய கடவுள் பலவிதமாக இருந்தாலும், இறுதியில் உறுதியாகக் கடவுள் ஒரே விதமாக இருப்பர் என்பதில் ஐயம் இல்லை எனக் கூறப்படும் கருத்து பலர் அறிந்ததே. அதனால், இக்கடவுளை வழிபடுதலால் நாம் பெரியோம் என்ற செருக்குக் கொள்ளாமல், அக்கடவுளை வழிபடுதலால் அவர் இழிந்தவர் என இகழ்ந்துரையாமல், அவரவர் வழிபடும் கடவுள் காரணமாக அவரவர்க்கு உய்தி உண்டு என்ற பரந்துபட்ட எண்ணத்தொடு நாம் செயல் ஆற்றுவதே, வழிபடுவதே இக்காலத்தில் விரும்பப்படுவதாகும். இம்முறையில் வழிபாடு செய்யப்படுவது ஓர் அறமாகிறது.

பொருள்கொண்டு அறங்கள் இயற்றப்படுகிற பொழுது, அப்பொருளின் பயனைப் பெறுபவர்கள் பொருள் அற்றவராய் வறியவராய் இருப்பின், அவ்வறம் விழுமியதாக மதிக்கப்படும். வறியவர்

களுக்குக் கொடுப்பதே கொடை எனப்படும். மற்றவை எல்லாம் ஒன்று கொடுத்து மற்றொன்று பெறும் பரிவர்த்தனை என்று சொல்லத்தகும் என்பது திருவள்ளுவர் கருத்து.

" வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என்றார் திருவள்ளுவர். ஆய் என்ற வள்ளலைப் பற்றிப் பேசிய ஓடைகிழார் என்னும் புலவர், "எமக்கு ஈவோர் பிறர்க்கு ஈவோர், பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈப" என்றார். ஓடைகிழாருக்கும் அவருடைய சுற்றத்தாருக்கும் கொடுக்கிறவர்களே பிறர்க்குக் கொடுத்தவர்கள் என்று அவர் சொன்னதன் கருத்து வறியவராகிய அவர்க்கும், வறியவராகிய அவருடைய சுற்றத்தார்க்கும் கொடுக்கிறவர்கள் தாம் உண்மையில் கொடையாளர்கள் என்பதாகும். வறியவரல்லாத பிறருக்குக் கொடுக்கிறவர்கள், செல்வர்களுக்கே யாதானும் ஒரு காரணத்தால் கொடுக்கிறவர்கள், மறுபயன் கருதிக் கொடுக்கிறவர்கள் என்பதால் தங்கள் தங்களுக்கேகொடுத்துக் கொண்டவர்கள் ஆவர் என்பது அவர் கருத்து. இவ்வாறு இயற்றப்படும் ஈகை ஈகை ஆகாது, அறமாகாது என்பது அவரது கருத்து.

கொடுக்கும்பொழுது இன்ன சாதியார் இன்ன இனத்தவர் என்ற நோக்கத்தால் அல்லாமல், பொதுவாக இதனையின்றி வாழ முடியாதவர் இவர் இவர், இதனால் பெரிதும் பயன் அடையக்கூடியவர் இவர் இவர் என்று கண்டு, அவரவர்க்குத் தருதல் மிகவும் விரும்பத்தக்கது. "யார்க்கும் இடுமின், அவர்

இவர் என்னன்மின்'' என்று திருமூலர் கூறிய பொழுது, இன்ன இன்ன சாதியார்க்குக் கொடுத்தல்தான் உயர்வு என்ற கருத்திஞல் கொடுக்கப் பெறுது எல்லாச் சாதியாரும் எல்லா இனத்தவரும் தத்தம் நிலைமை காரணமாகப் பெறுதற்கு உரியராய் இருத்தல் கூடும் என்ற கருத்திஞற் கூறிஞர் போலும்!

கொடுக்கிற பொழுது அக்கொடையிஞல் மறு உலகத்தில் நன்மை உண்டு எனக் கருதிக் கொடுப்பதைவிட "செல்வத்துப் பயன் ஈதல்'' என்ற கருத்திஞலும், "பொருள் அற்றவரின் வைப்புழியாகச் செல்வம் என்பால் தரப்பட்டுள்ளது'' என்ற கருத்திஞலும் ஒருவர் கொடுத்தல் நல்லது. இதனைத் தான் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்பார்கள். ஆய் போன்ற வள்ளல்கள் அறவிலை வாணிகர் அல்லர் என்று கூறப்பட்டிருத்தல் இக்காரணத்தால் ஆகும். எனினும், கைம்மாறு கருதாமற் கொடுக்க விருப்பம் இல்லாதவர் பயன்கருதிப் பிறர்க்கு ஒன்று தருவாராஞல், கொடாதவரைவிடச் சிறந்தவர் என்பதில் ஐயம் இல்லை. ஒருவர் அறம் செய்கின்ற பொழுது மேலுலகத்தில் நல்ல இன்பம் துய்க்கலாம் என்ற காரணத்தால் ஒருவேளை அறம் இயற்றுவர் என்றும், மறுபிறப்பு எய்தவில்லை என்ருலும் இப்பிறப்பில்தானே பெரும்புகழை நிலை நிறுத்தலாம்' என்ற காரணத்தால் இயற்றுவர் என்றும் எயிற்றியஞர் என்ற புலவர் கூறிச் சென்ருர் என்ற செய்தி புறநானூற்ருல் அறியப் படுகிறது. எளியோர் இரத்தலும் செல்வர் கொடுத்

தலும் ஆகிய செய்திகள் தேவர் உலகத்தில் இல்லை என்பார்கள். தேவர் உலகத்தில் எல்லாரும் செல்வர்கள் என்பது கருத்து. கொடை நிரம்பக் கொடுக்கிறவர் ஒரு காலத்தில் தேவர்தலைவனாக ஆதலும் உண்டு என்ற நம்பிக்கை "மணிமேகலை"யில் காணப்படுகிறது. ஆபுத்திரன் என்ற ஒருவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளில் வைத்து இது காட்டப்பட்டிருக்கிறது. மதுரையில் பலர் இடத்தும் பிச்சை ஏற்று, காணாதாரையும் கேளாதாரையும் கால்முடப்பட்டவரையும் பிறரையும் அழைத்து அவர்களுக்கு ஊட்டித் தானும் உண்டு, ஓட்டினைத் தலையின்கீழ் வைத்து உறங்குவது அவனது வழக்கம். அவன் பிறர்க்கு உதவி செய்யும் பான்மையன் என்பது அறிந்து அவனுக்கு அரும்பெறல் பாத்திரம் ஒன்று அளிக்கப்பட்டது. எடுக்க எடுக்கக் குறையாத அப்பாத்திரத்திலிருந்து மக்கள், மா, பறவை முதலியோரை யெல்லாம் அவன் ஊட்டினான். அப்பயன் மிகுதி ஆயிற்று. உடனே இந்திரன் அமர்ந்திருந்த ஆசனம் நடுக்கம் உற்றது. "எவனோ ஒருவன் சிறந்த அறங்களைப் பூவுலகத்தில் இயற்றி இருக்கவேண்டும்; அதனால் அன்றோ அவன் இவ்வாசனத்திற்கு உரியவன் ஆகின்றான்;" என்று இந்திரன் கலங்கினான். ஏதாவது ஒரு வரத்தை நல்கி அவனை விடுத்துவிடலாம் எனக் கருதி இந்திரன் ஆபுத்திரன் முன்னிலையில் வந்து, "உன் அறத்தினால் விளையும் பயனைத் தருவேன், வரம் கேட்க" என, ஆபுத்திரன் "எனக்கு வரம் வேண்டாம், நான் இவ்வுலகத்திலே

இருந்து வருந்தி வந்தோர் அரும்பசி களைவேன்" என்று சொன்னான் என அறிகின்றோம். ஆபுத்திரன் "தேவர் உலகில் இன்ப நிகழ்ச்சிதானே உண்டு! இவ்வுலகத்தில் அறங்கள் செய்கின்ற மக்கள், பிறரைப் பாதுகாக்கின்ற மக்கள் உண்டு; இவர்கள் இல்லாத தேவர் நன்னாட்டிற்கு இறைவனாகிய பெரு விறல் வேந்தே? இந்தப் பாத்திரத்தால் எளியவர் களை நான் ஊட்டினால் அவர்கள் முகத்தில் ஒரு மலர்ச்சி உண்டாகின்றது, அந்த மலர்ச்சியைக் காண்பதே என் விழைவு" என்று கூறி இந்திர னுக்கு வருத்தம் தந்தனன் என இவனைப்பற்றி மணிமேகலை பகருகிறது. இதனால் அறியப்படுவது எளியவர்களை இவ்வுலகம் பெற்றிருப்பதால்தான் உயிருள்ளதாக அஃது இருக்கின்றது என்பதாகும். திருவள்ளுவரும்,

> "இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
> மரப்பாவை சென்றுவந் தற்று"

என்று கூறினர். அவர் கருத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுப் போல ஆபுத்திரன் செய்தி அமைந்திருக்கிறது.

ஆயினும், உலகத்திற் பெரியவர்கள் மக்களிற் சிலர் செல்வரென்றும் ஏழைகள் என்றும், உயர்ந்த வர் என்றும் அடிமைகள் என்றும் இருத்தல் ஒவ் வாது என முன்னரும் கருதியுள்ளார்கள்; இப் பொழுதும் கருதுகின்றார்கள். செல்வர்கள் வறிய வர்களுக்குக் கொடுக்கின்ற பொழுது, "நாம் கொடுக்கக்கூடிய உயர்ந்த நிலையில் இருக்கின் றோம், அவர்கள் வாங்கக்கூடிய தாழ்ந்த நிலையில்

இருக்கின்றார்கள்'' 'என்று மகிழாமல், உலகத்திற் சிலர் பிறர் கையையே எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்களே என வருந்திய உள்ளத்தோடு தருவார்களானால், அவர்கள் மிகவும் பாராட்டப்படுவார்கள் என்பது உறுதி. சேர மன்னன் ஒருவன் தான் பிறர்க்கு நிறைய நிறையக் கொடுத்தான் எனினும், கொடுக்குந்தொறும் கொடுக்குந்தொறும் மகிழ்ந்திலன் என்பது பதிற்றுப்பத்தால் அறியப்படுவது. காந்தியடிகளும் அண்மையான காலத்தில் இக்கருத்தினை வற்புறுத்தியுள்ளார் என்பது பலர் அறிந்த செய்தி.

பொருளை உடையவர்கள் பொருளைப் பிறர்க்கு ஈயும் கடமை உடையவர்கள் என்றாலும், பொருள் அவர்களிடத்து ஒப்படைக்கப்பட்டு இருக்கின்ற பெரும் பொறுப்பு என்றாலும், அதனைப் பிறர்க்குத் தரும்பொழுது அது காரணமாகச் செல்வர்கள் செருக்குக் கொள்ளுதல் கூடாது என்றாலும், அதன் பயனைப் பெறுகின்றவர்கள் நன்றி உடையராய் இருத்தல் வேண்டும் என்பது மாத்திரம் வற்புறுத்தத்தக்கது. "அவன் சொத்து எல்லாம் என் சொத்து; எனக்காக அவன் அதனைப் பாதுகாத்து வருகின்றான்; வேண்டும்பொழுது அதனைப் பெற எனக்கு உரிமை உண்டு; தராவிட்டால் உதைத்தோ அடித்தோ பெறுவேன்'' என்பது போல நினைக்கின்ற கருத்து ஒரோ ஒரு இடத்தில் இப்பொழுது காணப்படுகிறது. எனினும், தமிழ் அறங்களுட் சிறந்த நன்றியுடைமை என்பதொன்று உண்டு. அதனால், பிறரிடமிருந்து ஒரு நன்மை பெற்ற

வர்கள் அவர்க்கு நன்றி காட்டவேண்டிய அறம் உடையவர் என்பது அறியப்படல் வேண்டும். தமக்கு நன்மை செய்த வள்ளல் ஆதனுங்கன் என்பவனை நெஞ்சில் பதித்துக்கொண்டு இருப்பதாகவும், தம் உயிர் நீங்குங்கால் தம்மையே மறந்தால் அன்றி அவனை மறத்தல் இயலாது என்பதாகவும் ஆத்திரையனுர் என்ற புலவர் கூறினுர். பிட்டங்கொற்றன் என்ற தலைவனைப் பாடிய காரிக்கண்ணனுர் என்ற பெரும்புலவர் அவனுக்குச் சிறு துயரமும் உண்டாகக் கூடாது என்றும், அவன் ஈடுபடும் தொழில்கள் எல்லாம் வெற்றியுடன் முடிய வேண்டும் என்றும் விரும்பி வேண்டினுர் என்பது புறநானூற்றுப் பாடல் ஒன்ருல் அறியப்படுகிறது. அவன் நடந்த வழிகள் அக்காலத்தில் முட்களும் கற்களும் நிரம்பியனவாக இருந்தமையின், அவன் அடியில் முள்ளும் பொருந்தாமல் இருப்பதாகுக என்று வேண்ட வேண்டிய நிலையில் அப்புலவர் அக்காலத்தில் இருந்தார். அவனிடத்து வைத்த மதிப்பினுல் அவனைத் தந்தை போன்றவனுகக் கருதினுர். அதனுல்,

“ யாம்வேண்டி யாங்குளம் வறுங்கலம் நிறைப்போன்
தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
அருந்தொழில் முடியரோ, திருந்துவேற் கொற்றன்
* * * *
....எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உருற்க ”

என்று பாடினுர்.

எனவே, அறங்கள் இயற்றுபவர்கள் இன்ன

வர்தாம் என்ற வரையறை இல்லை என்பதும், ஈகைக்கு உரியவர்கள் இன்னின்ன சாதியினர் என்ற வரையறை கூடாது என்பதும், மனத்தில் மாசு நீக்கிச் செய்யப்படும் அறமே தலையாய அறம் என்பதும், புற வேடங்களுக்கு மதிப்புத் தருதலை விட அக ஒழுக்கத்திற்கும் அக நிலைக்கும் கொடுக்கப்படும் மதிப்பு சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதும், அறம் செய்வோர் செருக்குக்கு இரை ஆதல் கூடாது என்பதும், அறப்பயன் பெறுபவர் நன்றி உடையவராக இருத்தல் வேண்டும் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டன.

6. திருக்குறளும் சிலப்பதிகாரமும்

தமிழர்களுடைய அருங்கலமாகத் திருக்குறள் 1900 ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்த நூல் என்பது அறிஞர் பலருக்கு ஒத்த கருத்து. அந் நூல் அன்றுதொட்டு இன்றுகாறும் கவிஞர்கள் பலர் நூல் செய்யும் நேரங்களில் உதவியாக இருந் துள்ளது என்பது வெளிப்படை. திருவள்ளுவ ருக்கு அடுத்த காலத்திலேயே வாழ்ந்த சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் இயற்றிய மணிமேகலை யில் திருக்குறளின் அடிகள் உள்ளவாறே எடுத்து அமைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு, மணிமேகலை திருக்குறட் காலத்திற்குப் பின்னதாக எழுந்த நூல் என்பதை ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டி வருவது பலர் அறிந்ததே.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை" (55)

என்ற திருக்குறளை அவ்வாறே எடுத்துப் "பெய் யெனப் பெய்யும் பெருமழை" என்றவாறு ஒரு சிறு அசையைச் சேர்த்துச் சாத்தனுர் அமைத் துள்ளார் என்பதை உற்று நோக்கிஞல், சாத்தனுர் காலத்தில் திருக்குறட் பயிற்சி நிரம்ப வந்து விட்டது என்பது அறியப்படும். அதைப் போலவே சிலப்பதிகாரத்திலும்,

> "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
> பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்"

என்றவாறு கண்ணகியின் கூற்ருக வஞ்சினமாலை யில் வருவது திருவள்ளுவர் இயற்றிய

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (369)

என்ற திருக்குறளை அடியொற்றி உளது என்பதைக் காண்டல் கூடும். கண்ணகி தன் கணவனுக்குத் தீமையிழைத்தோர் உடன்கெடுவர் என்பதைப் பாண்டியன் மனைவிக்குக் குறிப்பிடும் இடம் இது. இந்தக் குறட்கருத்தே செயற் பட்டமை சிலப்பதிகாரத்தால் நன்கு அறியப்படுகிறது. சென்ற பிறப்பைப் பற்றிய பகுதிகள் சிலப்பதிகாரத்தில் நிறைய வருகின்றன. கோவலன் சென்ற பிறப்பில் பரதன் என்னும் பெயர் உடையவனாக வாழ்ந்துவந்தான் என்பதும், அக்காலை அவன் பணியாற்றிய வேந்தனிடத்தில் வணிகன் ஒருவனைப் பிறநாட்டு ஒற்றன் எனக் காட்டித் தண்டிக்கச் செய்ததால் மறு பிறவியில் அவனும் கள்வன் என ஏசப்பட்டுக் கொல்லப்படுகிறான் என்பதும் சிலப்பதிகாரத்துள் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கொல்விக்கப்பட்ட சங்கமன் என்பான் மனைவி நீலி என்பவள் இட்ட சாபம் வந்துபட்ட காரணத்தால் கண்ணகி கோவலனை இழந்து கடுந் துயருற்றாள் என்று சிலப்பதிகாரம் காட்டுகிறது. இது திருக்குறளின் கருத்தினைத் தழுவி வந்த ஒரு நிகழ்ச்சியைக் காட்டுவது ஆகும். திருக்குறள் முற்பகலில் ஒருவன் பிறனுக்குத் தீமை செய்தால் பிற்பகலில் அது தானே வந்து விளையும் என்று கூறுகிறது. சிலப்பதிகாரத்திலிருந்து இப்பொழுது சொல்லப்பட்ட நிகழ்ச்சியோ சென்ற பிறவியில் ஒருவன் பிறனுக்குத் தீமை செய்தால் அது

மறுபிறப்பில் அவனுக்கு வந்து துயர்விளைக்கும் என்பதைக் காட்டுகிறது.

“ தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை ”

என்பது மற்றொரு திருக்குறள். கடவுளைத்தொழுது கணவனையே கடவுள் எனக் கொண்டு வழிபட்டு அவனுக்கு ஆவன செய்து உதவுகின்ற மனைவி இட்ட கட்டளை இயற்கையுலகில்கூட நடைபெறும் என்பது போன்ற கருத்து இத் திருக்குறளில் அமைக்கப்பட்டு இருப்பதாகப் பன்னெடுங்கால மாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இக்குறளுக்கு ‘இத்தகைய பத்தினிப் பெண்ணொருத்தி பெய் யெனப் பெய்கின்ற பெருமழையைப் போன்றவள்’ என்று கொண்டு அறிஞர் சிலர் பொருள்கூறி வரு கின்றனர்கள். எவ்வாறாயினும், இந்தக் குறளின் கருத்து சிலப்பதிகாரத்தில் செவ்வன் அமைக்கப் பட்டிருக்கிறது என்பது போதரும். கண்ணகி திருமணம் ஆன நாள்தொட்டுக் கணவனிடத்தில் சிற்றின்பத்தில் ஈடுபட்ட நேரம் அல்லாத பிற காலங்களில் அவனைத் தலைவன் போல், கடவுள் போல் கருதி வந்தாள் என்பது ஊகிக்கப்படுகிறது. மனையறம்படுத்த காதையில் கண்ணகியும் கோவ லனும் எவ்வாறு இல்லறம் நடத்தினர்கள் என்பது சொல்லப்படும் என எதிர்பார்த்தல் இயல்பு. ஆயினும், அக்காதையில் அவ்விருவரும் இன்ப வுலகில் எவ்வாறு திளைத்தனர் என்று காட்டப்பட் டிருக்கிறதே அன்றிக் கண்ணகி வீட்டில் உள்ள பணிகளை எவ்வாறு இயற்றினள் என்பது சொல்

லப்படவில்லை. பின்னர்க் கொலைக்களக் காதையில் வருகின்ற செய்திகளைக் கொண்டுதான் அவள் முன்னர்ப் புகார் நகரத்தில் கணவனோடு வாழ்ந்த காலையில் எங்ஙனம் இல்லறம் நடத்தி இருப்பாள் என்பதை ஒருவாறு ஊகித்தல் கூடும். மதுரையில் மாதரி என்ற இடைக்குல மகள் வீட்டில் தங்கி இருந்து சமைத்துக் கணவனை உண்ணும்படி அழைக்கின்றவள் "அமுதம் உண்க அடிகள்" என அழைத்தாள் என்பதாகவே உணர்கிறோம். அதற்கு முன்னதாக, அவள் அவனுடைய அடிகளைத் தொழுது வணங்கினாள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

"கடிமலர் அங்கையிற் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி,"
(16 : 38—39)

என்று வருவதைக் காண்க. இவ்வாறு கணவனை வழிபட்டு வந்த அவள் சொற்கள் பொன்னேபோல் போற்றப்பட்டுச் செயற்பட்டன என்பது சிலப்பதிகாரத்தால் அறியக்கிடக்கின்ற செய்தி. இத்தகைய பெருமையை உடைய காரணத்தால் இவள் தேவர்களையும் ஏவல் கொண்டாள் என்பது கூறப்பட்டு இருக்கிறது. குற்றம் ஒன்றும் செய்திலாத தன் கணவன் கொல்லப்பட்டானே என வருந்தி ஞாயிற்றை நோக்கி, "என் கணவன் கள்வன் தானோ?" என்ற வினவை இவள் எழுப்ப, ஞாயிறும் "கள்வன் அல்லன் உன் கணவன்", என்று விடை இறுத்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பின்னர் அவனுக்குத் தவறு இழைத்த மதுரை மாநகரத்திடம்

சீறி மதுரைக்குத் தீ ஊட்ட இவள் முற்பட்ட பொழுது இவளது ஏவலைக் கேட்க அங்கியங் கடவுள் எதிர்வந்தான் என்பது சொல்லப்பட்டுள்ளது. "இந்நகரைத் தீப்பற்றுக," என அவள் உரைத்தவுடன் அங்கியங் கடவுள் எதிரிலே வந்து, "யார் நீங்கலாக?" எனக் கேட்டான். இவ்வாறு ஞாயிற்றையும், அக்கினியையும் ஏவல் கொண்ட இவள்முன்னர் மதுரைக்குரிய கடவுள் கூட தோன்றுதற்கு நாணுகின்ற நிலை அக்கட்டுரை காதையில் காணப்படுகிறது. மதுரையை எரித்த சீற்றத்தோடு செல்லுகின்ற இவள் முன்னர்த் தோன்றி மதுரையை அழலினின்று விடுதலை செய்துகொள்ள வேண்டும் என விரும்புகின்ற மதுராபுரி யென்னும் தெய்வம், இவள் முன் தோன்ருது பின்னுலேயே தோன்றி இவள் செவ்வியறிந்து பேசுதற்கு முயன்றது எனச் சொல்லப்பட்டுள்ளது. அத்தெய்வம் "முன்னிலை ஈயாள் பின்னிலை தோன்றி", "மாதராய்" என்றும், "அணி இழாய்" என்றும், "நங்கை" என்றும், 'பைந்தொடி' என்றும், 'பெருந்தகைப் பெண்' என்றும், "தோழி" என்றும் பலவாறு விளிக்க இவள், "என் பின் வருகின்ற நீ யார்?" என்று திரும்பிப் பாராமலேயே கேட்க, இவள்மாட்டுத் தன் குறையைச் சொல்லலுற்றது எனப் படிக்கிறோம். மதுராபுரித் தெய்வத்தின் குறை வேறொன்றுமில்லை. மதுரையின் எஞ்சிய பகுதிகளையாவது தீக்கிரையாகாமல் பாதுகாக்க வேண்டும் என்பது அதனுடைய நோக்கம். அன்றியும், கண்ணகிக்குக் கோவல

னுடைய பண்டை ஊழ்வினை வந்து உருத்து ஊட்டிய விதத்தை விளங்கச் சொல்லவேண்டும் என்பதும் நோக்கம். இதனை இவளுடைய செவ்வி நோக்கிச் சொல்வதற்காக அத்தெய்வம் காத்திருந்தது என்றால்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்",

ஆகிய ஒரு பெண்மகளுடைய ஏவலைச் செய்தற்குத் தேவரும் முனிவரும், பிறரும் எவ்வாறு காத்துள்ளனர் என்பது நன்றாக விளங்கும் அன்றோ?

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு" (642)

என்பது மற்றொரு திருக்குறள். 'ஒருவர்க்குச் செல்வம் விளைவதும், கேடு வந்து உறுவதும் அவர் கூறும் சொற்களால் ஆகும்' என்பது இக் குறளின் கருத்து. இதைப் பொதுமக்கள், "ஆவதும் சொல்லாலே அழிவதும் சொல்லாலே" என்ற பழமொழி வாயிலாக அறிந்துள்ளார்கள். அல்லாமலும், "யாரால் கேடு? வாயால் கேடு" என்ற பழமொழியும் இதனையே விளக்குவது. சிலப்பதிகாரத்தில் இக்கருத்து தெளிவுபடுத்தப் படுகின்ற இடங்கள் சில உள. பாண்டிய மன்னன் குற்றம் செய்திலாத கோவலனைக் கொன்றதற்குக் காரணம் அவனுடைய சொல்லின்கண் சோர்வு என்பது அறியப்படுகிறது. இதனை இளங்கோவடிகள் அழகாக அமைத்துள்ளார்.

"தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென," (16 : 151-3)

என்ற அடிகளில், "கொன்றச் சிலம்பு" என வருவது "கொல்லச் சிலம்பு" என்றதற்குப் பதிலாக அவனால் கூறப்பட்டது என்பது அறிஞர் துணிவு. தன் மனைவியின் காற்சிலம்பைக் கவர்ந்து கொண்ட கள்வன் அகப்பட்டுள்ளான் எனக் கேள்வியுற்றதும் அரசன் "அச்சிலம்பு கூறப்படும் அம் மனிதன் கையில் உளதாயின், அவனைக் கொல்லும்பொருட்டு இவ்விடம் கொண்டு வருக", எனச் சொல்லக் கருதினான். ஆயினும், "கொல்லச் சிலம்பைக் கொணர்க" என்பதற்குப் பதிலாக, "கொன்று அச் சிலம்பைக் கொணர்க" என்று கூறிவிட்டான். இதனால் பெருந்தீமை விளைந்தது. கொன்றச் சிலம்பு கொணர்க என்பதற்கும், "கொல்லச் சிலம்பு கொணர்க" என்பதற்கும் பெரிய வேறுபாடு உண்டு என்பது வெளிப்படை. "கொன்றச் சிலம்பு கொணர்க" என்றால், மனிதனைக் கொன்றுவிட்டுச் சிலம்பினைக் கொண்டு வருக என்பது பொருள். "கொல்லச் சிலம்பு கொணர்க" என்றால், அம் மனிதனைக் கொல்லும் பொருட்டுச் சிலம்பினைக் கொண்டு வருக என்பது பொருள். பாண்டியனுடைய சொற்சோர்வு காரணமாக அவனுக்குப் பெருங்கேடு நேர்ந்தது என்பது இச் செய்தியால் நன்கு உணரப்படும். இது, மேலே குறிப்பிடப்பட்ட திருகுறளுக்குத் தக்கதொரு சான்றாகும்.

அன்றியும், வட நாட்டில் ஆண்டுவந்த பால குமரன் என்பான் ஒருவனுடைய மக்கள் கனகன், விசயன் என்ற இருவர் சொல்லின்கண் சோர்வு பட்ட காரணத்தால் செருக்கடக்கி முடித்தலை நெரிக்கப்பட்டு உணரும்படி செய்யப்பட்டனர் என்பது சிலப்பதிகாரம் காட்டுகின்ற மற்ருெரு செய்தி. எவரோ ஒருவரது திருமண வீட்டிலே இருந்தவண்ணம் பொழுதுபோக்காக, கனகவிசயர் பேசிய பேச்சிலே தமிழ்நாட்டு மன்னர் அருந் திறனைக் குறைகூறிப் பேசினர். இச்செய்தியைக் கேள்வியுற்ற செங்குட்டுவன் சீற்றங்கொண்டு எழுந்து அந் நாடு சென்று அவரை வென்று அவர் முடித்தலை நெரியும்படி கல் ஒன்றைச் சுமத்திக் கண்ணகியின் படிமத்திற்கெனக் கொண்டு வந் தான் எனச் சிலப்பதிகாரம் சொல்லுகிறது. கால் கோள் காதையில் செங்குட்டுவன் சஞ்சயன் என்பானிடம் கூறுவதாக வருகின்ற பகுதியில்,

" பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றம் கொண்டுஇச் சேனை செல்வது "

என்பது உரைக்கப்படுகிறது. இவ்விடத்தில், கன கனும் விசயனும் தம் நாவினை வாளா வைத்திருந் தால் செங்குட்டுவனுடைய சீற்றத்திற்கு ஆளாகி இருக்கமாட்டார்கள் என்பது இளங்கோவடிகளால் காட்டுப்பட்டுள்ளது. எனவே, ஆக்கமும் கேடும் அதனுல் வருவதால் சொல்லின்கண் சோர்வினை

ஒருவர் காத்தோம்பல் வேண்டும் என்ற திருக்குறள் அழகுபட ஈண்டு எடுத்துக் காட்டப்பட்டமை அறியப்படும்.

" இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் " (314)

என்னும் திருக்குறள் சிலப்பதிகாரத்தால் ஒளி பெற்றுள்ளது. கண்ணகிக்குக் கோவலன் இன்னாமை செய்தான் என்றே ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். மணந்த அவளோடு சில ஆண்டுகள் கூடி வாழ்ந்து பிற்பாடு அவளினின்று நீங்கிக் கணிகையர் குலத்து மாதவிமாட்டுப் பெரு நட்புப் பூண்டு, விடுதல் அறியா விருப்புடையன் ஆயினான். இல்லினுள்ளே கண்ணகி வருத்தம் உற்று இருந்தாலும், அவளைப்பற்றிக் கோவலன் கவலை கொண்டான் அல்லன். கண்ணகிக்குத் தன் கணவன் தன்னுடன் இல்லையே என்றதனால் வருகின்ற வருத்தத்தைக்காட்டிலும், அவன் இவளைப் பிரிந்து வேறொருத்தி மாட்டு நட்புப் பூண்டுள்ளான் எனப் பிறர்கூறும் ஏச்சுரையே பெரு வருத்தத்தைத் தந்திருத்தல் வேண்டும். அத்தகைய இன்னாமைகளைக் கோவலன் அவளுக்குச் செய்திருந்தானே ஆனாலும், கண்ணகி அவனிடம் முழு அன்போடு நடந்து வந்துள்ளாள் என்பதே சிலப்பதிகாரம் காட்டும் செவ்விய நிலை. வேறொரு மகளாயின், ' கணிகை வீட்டிலிருந்து வருத்தத்தோடும், ஏமாற்றத்தோடும் கணவன் திரும்பி வந்தபொழுது முகம் சுளித்து வெறுத்து ஒதுக்கியிருப்பாள். கண்ணகியோ கோவலன் தன்

னுடைய குன்றம்போன்ற பெரும்பொருள்கள் எல்லாம் தொலைந்தனவே என வருந்தி உரைத்த வேளையில், மேலும் மாதவிக்குப் பொருள் கொடுக்க இயலாது கணவன் வருந்துகின்றானே என நினைந்து, அவனுக்குத் தன்னுடைய சிலம்புகளை அவன் கேளாமலே எடுத்துத் தந்தாள் என்பது வியக்கத்தக்கது. அவ்வாறு கொடுத்தபொழுது உள மகிழ்ச்சியோடு அவள் தந்தாள் எனக் கூறப் பட்டுள்ளாள்.

"நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி" (9 : 73)

என்று இதனை அடிகள் கூறுகின்றார். அன்றியும், அச் சிலம்புகளை எடுத்துக்கொண்டு மதுரை மாநகர் புகுந்து அந்தச் சிலம்பின் விலைப்பொருளை முதலாகவைத்து வாணிகஞ் செய்ய எண்ணி யுள்ளேன் எனக் கோவலன் கூறி, உடன் வருக என்றவுடன் அவளும் புறப்பட்டுவிட்டாள். அவள் மாட்டு அன்பிலாதவனும் தன்னைப் பல்லாண்டுகள் பிரிந்து இருந்தவனும் ஆகிய கணவன் "உடன் புறப்பட்டு வருக" என்றவுடன் மறுத்து உரை ஒன்றும் சொல்லாமல் அவள் அவனோடு புறப் பட்டுச் சென்றமை அவளுடைய பெருமையை விளக்குகின்றது. அவள் இவ்வாறு அவனிடம் அன்பு செலுத்துதற்கு உரிய பெற்றியன் கோவலன் அல்லன் என்பது நூலினால் அறியப் படுகிறது. கோவலனே இதனைப் பிறிதோரிடத்தில் ஒப்புக்கொள்கிறான். கொல்லப்படப்போகிறான் என் பது தெரியாமலே வீட்டினின்று வெளியாகின்ற

கோவலன் கடைசிமுறையாக மனைவியிடத்திலிருந்து பிரியா விடை பெற்றுச் செல்ல இருக்கின்ற கோவலன் இவளால் அமுதூட்டப்பட்டுப் பிறகு மகிழ்ச்சியோடு உரையாடிக் கொண்டிருக்கின்ற வேளையில்,

"சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய் என்செய்தனை!" (16 : 68-70)

என்று கூறி அவளிடம் ஒப்புக்கொள்கிறான். "உனக்குப் பெரிய தீமை செய்தேன். அதனால் வரக்கூடிய குற்றங்கள் தீமைகள் ஆகியவற்றை ஒருசிறிதும் எண்ணிலேன். 'மதுரைமாநகருக்கு நீ எழுக என்னுடன்' என்றதும் என்னை நம்பி எழுந்து வந்துவிட்டாயே. உன் அன்பு இருந்தவாறு என்னே!" என்றவாறு கோவலன் கூறினான் என்பதே கருத்து. இந்த இடத்தில் கண்ணகிக்குத் தான் இன்னாமை செய்தவன் என்பதை அவனே ஒப்புக்கொள்கிறான். அதற்குரிய தண்டனை கோவலனைக் கண்ணகி வெறுத்தல் என்பதுதான் ஆனால் அந்தத் தண்டனையை அவள் தராது அவன் நாணும்படி அவனுக்கு இனிமை செய்துவிட்டாள் என்பது அவனோடு அவள் உடன் வந்தமையால் அறியப்படும். இதனால்,

"இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற திருக்குறளுக்கு அழகிய இலக்கியமாக இச்செய்தி அமைதலை அறிதல்கூடும்.

கோவலன் மதுரைக்கண் மாதரி வீட்டில்

கண்ணகி சமைத்து அன்புடன் உணவு ஊட்டிய பிற்பாடு அவளைநோக்கித் தான் முன்னர்ச் செய்த தற்கு இரங்கி வருத்தத்தைத் தெரிவிக்கின்றான். "என் தாய் தந்தையர் கூறிய சொற்களைக் கேளாது போயினேனே! வறுமொழி பேசிய மாக்க ளோடும், பயன் இல சொல்லிய பரத்தரோடும் கூடி, நன்னெறியில் செல்லாது நாளைக் கழித் தேனே! உனக்குப் பெருத்த தீமை இழைத் தேனே!" என்று எல்லாம் கூறி உளைந்து, நைந்து உருகுகிறான் என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறி கிறோம். இது நமக்கு எதனை நினைவுபடுத்து கின்றது என்றால் திருக்குறளில் வரும்,

> " எற்றென் றிரங்குவ செய்யற்க, செய்வானேல்
> மற்றன்ன செய்யாமை நன்று "

என்ற அடிகளையே ஆகும்.

> " செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
> செய்யாமை யானும் கெடும் "

என்ற திருக்குறள் சிலப்பதிகாரத்து ஊர்காண் காதையில் வரும் கோவலன் செய்தியால் நன்கு விளங்குகிறது. கோவலன் மதுரைக்குப் புறத்தே வந்து தங்கி இருந்தவன், கவுந்தி அடிகளையும் கண்ணகியையும் புறச்சேரியிலேயே தங்கவிட்டு மதுரையை நோக்கிச் செல்கிறான். அவ்வாறு செல் வதன் நோக்கம் மதுரையில் தன் இனத்தவர் வாழுகின்ற இடத்தினைக் கண்டறிந்துவருதல் என்பது ஆகும். இதனை அவன்,

> " தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
> என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்

பாதக் காப்பினள் பைந்தொடி ஆகலின்
ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு ?''

என்றமையால் அறியலாம். உண்மையில் மதுரையைச் சுற்றிச் சுற்றித் திரிந்து வந்தவன், போன செயலை மறந்துவிட்டு வறிதே மீண்டுவிட்டான் என்பதாகவே சிலப்பதிகாரம் காட்டுகின்றது. தன் இனத்தார் எங்குளர் எனக் கண்டு திரும்பி வருவதாகச் செப்பிப் போனவன் தெருவெல்லாம் உள்ள அழகுகளைக் கண்டு கண்டு மயங்கி நின்று முச்சந்தியிலேயும், நாற்சந்தியிலேயும், முடுக்குத் தெருக்களிலேயும் திரிந்து, காவலன் பேரூரைக் கண்டு மகிழ்வெய்தி, போன செய்தியை மறந்தே மீண்டு விட்டான் எனவே சிலப்பதிகாரம் சொல்லுகிறது. இந்த இடத்தில் செய்யத்தக்கதை அவன் செய்யாதுவிட்டான் என்பது அழகுபடக் காட்டப் பட்டுள்ளது. ஒருவேளை, தன் இனத்தவர் வாழும் வீட்டைக் கண்டறிந்து, அவர் வீடுகள் ஒன்றனுள் கோவலன் மனைவியோடு புகுந்து இருப்பானேயாயின், அவர்கள் வழியாகவே சிலம்பினை விற்றிருத்தல் கூடும். சிலம்பினை எடுத்துக்கொண்டு தெருவழியே வாங்குவார் இன்றிப் போகவேண்டிய அவசியம் இருந்திராது. இஃது இல்லை எனில், தெருவில் பொற்கொல்லன் அவனைக் காணப் போவதும் இல்லை; கண்டு பொய்க்குற்றம் சார்த்துவதும் இல்லை. எனவே, கோவலன் தன் பணியைச் செய்யாததனாலேயே சாவ வழி தேடிக்கொண்டான் என்பது தோன்றுகிறது. திருக்குறளில் வருகின்ற

"செய்தக்க செய்யாமை யானுங் கெடும்"

என்ற பகுதி இச் செய்தியால் வலியுறுதல் காண்க.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் உறையூரை நண்ணுதற்கு முன்னர் ஓரிடத்தில் தங்கி இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் எதிரே வந்த பரத்தர் இருவரும் சில சொற்கள் தவறுதலாகச் சொல்லி விட்டனர். கோவலன் கண்ணகி ஆகியோரை நோக்கி, கவுந்தியடிகள் மாட்டு "யாரிவர்" என்ற வினவை இப் பரத்தர் எழுப்ப, அவரும், "அவர் எம் மக்கள் ஆவர்" என்றார். இந்த இடத்திற் கோவலன் கண்ணகியை அவர் 'மக்கள்' என்றது பொதுவாகத் தவம் உடையாருக்கு யாவரும் மக்கள் என்ற கருத்தினால் ஆகும். ஆனால், அப் பரத்தரோ இவ்விருவரும் உடன்பிறந்தவர்கள் எனத் தவருகக் கருதிக்கொண்டனர். அக் காரணத்தால் அவர்கள், "உடன் பிறந்தவர்கள் இவ்வாறு ஒன்றிய வாழ்க்கையுடையவராக இருத்தல் உண்டோ?" எனக் கேட்டுவிட்டனர். அடிகளால் அவர்களது கூற்றினைப் பொறுக்க முடியவில்லை. கோவலன் கண்ணகியை அண்ணன் தங்கை எனத் தமது சொல்லைக் கொண்டே தவறுதலாக உணர்ந்து கொண்டார்கள் என்று அடிகளார் நினைக்கவில்லை. பரத்தர்கள், "உங்கள் ஊரில் சோதரர்கள் கணவன் மனைவிபோல இருத்தல் உண்டோ?" எனக் கேட்டுவிட்டார்களே என்பது போன்ற கருத்தினால் அடிகளார் வெகுளிவாய்ப்பட்டார்.

ஆதலால், அப் பரத்தர் இருவரையும் நரி ஆகுக எனச் சபித்துவிட்டார். அவ்வாறு அவர் இருவரையும் சபித்தது . பெருமையுடையது ஆகாது என்றும், அவர் செய்த குற்றத்தைப் பொறுத்தலே பொருந்துவது ஆகும் என்றும் கோவலனும் கண்ணகியும் அவ்வடிகளாருக்கு எடுத்துக் கூறினுர்கள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

" நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்று அறிதல் வேண்டும்"

என்று கோவலனும் கண்ணகியும் கவுந்தி அடிகளுக்கு எடுத்துக் கூறினுர் என அறிகிறேம். இதனுல், கோவலன் கண்ணகியினுடைய பெருமை துலங்குகின்றது ; அதே நேரத்தில் " குணமெனும் குன்றேறி நின்ற" அடிகளாரின் சினத்தின் கொடுமை அறியப்படுகிறது. அதனுல் அன்றே,

" ஒறுத்தாரை ஒன்ருக வையாரே ; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து "

என்று கூறினுர் திருவள்ளுவர் ? எனவே, பரத்தரை உடனே ஒறுத்துவிட்ட கவுந்தியடிகளேப் பொதுவாக மக்கள் பெரிதும் மதிப்பதில்லே. அவர்களேப் பொறுக்க வெண்டுமென்று கூறிய கோவலன் கண்ணகி ஆகியோருடைய திறத்தைத்தான் பலர் பாராட்டுகின்றனர் என்பது வெளிப்படை.

வழியே சென்றுகொண்டிருந்த பரத்தர்கள் தம் வேலேயைப் பாராமல் வீணுக வழிப்போக்கர்கள் செய்தியில் தலேப்பட்டு " உடன் வயிற்றேர்கள் ஒருங்குடன் வாழ்க்கை கடவதும் உண்டோ, கற்று அறிந்தீர் " எனப் பயனில் சொற்களேக் கவுந்தி

யடிகள் இடத்தில் சொல்லிய காரணத்தால் அன்றோ ஓர் ஆண்டிற்காவது நரிகளாக இருக்கும்படி சபிக்கப்பட்டனர் !

“ சொல்லுக சொல்லிற் பயனுடைய ; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்”

என்ற திருக்குறளில் வருகின்ற பயனில்லாத சொற்களைச் சொல்லக்கூடாது என்ற கருத்து இங்கு வலியுறுகிறது அன்றோ ?

“ மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை”

என்றார் திருவள்ளுவர். “ வாய்மையைப் பேசுகின்றவர் தவமும் தானமும் செய்வாரைக் காட்டிலும் சிறந்தவர் ” என்பது கருத்து. இக் கருத்தே சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் வற்புறுத்தப்படக் காண்கிறோம். சேர நாட்டிலுள்ள மாங்காடு என்ற ஓர் ஊரிலிருந்து வந்த மறையவன் ஒருவன் மதுரைக்குப்போகும் வழிகளுள் ஒன்றில் மூன்று பொய்கைகள் உள என்றும், அவற்றுள் ஒன்றில் நீராடினால் ஒருவருடைய மன விருப்பம் நிறைவேற்றப்படும் என்றும் கூறினான்.

“ இட்ட சித்தி எய்துவிர் ஆயின்
இட்ட சித்தி எய்துவிர் நீரே”

என்பது அவன் கூற்று. அதனை மறுத்துக் கூறும் கவுந்தியடிகள், “ வாய்மை பேசுவதினின்று நீங்காமல் உயிர்களைப் பாதுகாத்து வருகின்றவர்கள் இந்த உலகத்தில் அடைய முடியாத பொருள்கள் இருக்கின்றனவோ ? வாய்மையை உரைக்கின்றவர்கள் தம் விருப்பம் நிறைவேற்றப் பெறுவார்கள் ”

என்று பதில் இறுத்தார் எனக் காண்கிறோம். தவத்தையும், தானத்தையும் ஒருவர் செய்வதன் நோக்கம் அதுகொண்டே தாம் விரும்பியதை அடையலாம் என்பதுதானே? வாய்மை ஆகிய பேரறத்தை மேற்கொண்டால் தான் விரும்பியது தானே கையுறும் என்று சிலப்பதிகாரத்தில் வருகின்ற கருத்து திருக்குறட் கருத்தோடு ஒன்றி வருதல் அறியலாம். திருக்குறளிலும்,

> " யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற"

என்பதும்,

> " கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும் "

என்பதும் கூறப்பட்டிருக்கின்றன. இத் திருக்குறளின் கருத்து வாய்மையே பேரறம் என்பதும், அது கொல்லாமையோடு இயையின் உலகில் ஆகாதது ஒன்றும் இல்லை என்பதும் ஆம். இக் கருத்துக்களே சிலப்பதிகாரத்திலும்,

> " வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
> யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்?"

என்ற இடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

> " தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார் "

என்பது திருக்குறள். தமிழ்மக்கள் சிறு நன்றியையும் பேருதவியாக எப்பொழுதும் பாராட்டி வந்துள்ளனர். சிலப்பதிகாரத்தில் வருகின்ற ஒரு கதை நிகழ்ச்சி இதனை எடுத்துக்காட்டுகின்றது. அடைக்கலக் காதையில் வருகின்ற சாயலன் மனைவி

யால் பேணப்பட்ட ஒரு குரங்கின் நன்றியுடைமை விளங்குகிறது. சாயலன் என்னும் செட்டி ஒருவனுடைய மனைவி தன் வீட்டிற்கு வந்திருந்த தவ முதல்வன் ஒருவனுக்கு உண்டி தந்தனள் என்பதும், அவ்வுண்டியில் எஞ்சியதை ஒரு குரங்கு உண்டு மகிழ்ந்தது என்பதும், அக்குரங்கினை "உன் குழந்தைபோல் பாதுகாக்க" என அம் மாதவன் கூறிச் சென்றான் என்பதும், அது காரணமாக அவள் அக்குரங்குக்கெனப் பெரும் பொருள் ஒதுக்கி அது மாண்ட பின்னரும் அதன் நினைவின் அறிகுறியாகச் செலவு செய்தாள் என்பதும், அக் காரணத்தால் அக் குரங்கு பின்னர் நினைத்ததை எய்திற்று என்பதும் அதனை உணர்ந்த அக் குரங்கு, பின்னர்த் தேவனாய் மாறியபொழுதும் தன்னுடைய பழைய குரங்குக் கையை வைத்திருந்தது என்பதும் சிலப்பதிகாரத்துள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் குரங்கின் நன்றியுடைமைதான் எடுத்துக்காட்டப் படுகின்றது. தேவனாகப் பிறப்பெடுத்துங்கூட, ஒன்று அல்லது இரண்டு பிறவி முன்னர்த் தனக்கு இருந்த கைகளில் ஒன்றினைத் தன்னைப் பாது காத்த சாயலன் மனைவியின் நினைவு காரணமாக அக்குரங்கு வைத்துக்கொண்டு இருந்தது என்பதிலிருந்து அதனுடைய நன்றியுள்ளம் எத்துணைப் பெரியது என்பதாகவே கருதி இந் நிகழ்ச்சியை உற்றுநோக்குதல் வேண்டும். ஒருவர் மற்றொருவரால் பேருதவி கிடைக்கப் பெற்றிருந்தாலும், இப் பிறவியில்தானே சொல்லிக் கொள்ளக்கூடக்

கூச்சுவது பெரும்பான்மை வழக்கு. அதற்கு எதிரே இக்குரங்கின் செய்தி கூறப்பட்டுள்ளதனுல் "திணைத்துணை நன்றி பனைத்துணையாக"ப் பெரியோரால் மதிக்கப்படும் என்ற குறட் கருத்து வற்புறுத்தப்பட்டதாயிற்று.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்ற திருக்குறள் 'நேற்று உயிருடன் இருந்தவர்கள் இன்று இறந்துவிட்டனர் என்று சொல்லக் கூடிய பெருமையை இவ்வுலகு உடையது' என்று கூறுகிறது. கோவலன் நேற்று இருந்தவன் இன்று இல்லையே என்று கூறுகின்ற இடமொன்று சிலப்பதிகாரத்தில் வருகிறது. அதனை இத் திருக்குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். காலை நேரத்தில் கோவலன் கண்ணகியோடு இணங்கி இருந்தவன் அன்போடு அவளுடைய தலையிற் பூச்சூட்டினுன். அன்றே மாலை நேரத்திற்குள்ளாக அவன் கொல்லப் பட்டுவிட்டான். காலையில் இருந்தவன் மாலையில் இல்லையே எனக் கூறுவதுபோல் அமைந்த ஒரு பாட்டு சிலப்பதிகாரத்தில் காணப்படுவது திருக்குறட் கருத்தினை நமக்கு நினைப்பூட்டுகிறது.

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்தன்னைக் காணுக் கடுந்துயரம்"

என்று ஊர்சூழ் வரியில் வரும் பாட்டு, கண்ணகி காலை நேரத்தில் தன் கணவனைத் தழுவி அவன் கையால் தலையிலே மாலைசூட்டப்பட்ட செய்தியை

யும் மாலையில் கொல்லப்பட்ட அவன் அவளைக் காண முடியாது படுத்துக் கிடக்கின்ற கடுந் துயரத்தையும் தெரிவிக்கிறது. இந்த இடத்தில் "நெருநலுளனொருவன்" எனவரும் திருக்குறள் அழகிய இனிய வகையில் வேறொரு விதமாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது என்று ஒருவர் ஒப்புக்கொள்ளுதல் கூடும்.

சிலப்பதிகாரத்திற் கானல் வரியில் கூறப்படும் தலைமகன் ஒருவன் தன்முன்னர்த் தோன்றிய ஒரு பெண்ணின் கண்கள் ",கண்கள் அல்ல, அவை கூற்றம் ஆகும்" எனக் கூறுகிறான் என அறிகிறோம். அவளுடைய பார்வையில் அருள் இன்மையாலும் கடுமை உண்மையாலும் இவ்வாறு கூறுகிறான் என்பது கருத்து.

"புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கொடிய கூற்றம்"

என்று வருகின்ற சிலப்பதிகார அடிகள் ஒருவர்க்கு,

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து"

என்ற திருக்குறளை நினைவிற்குக் கொண்டுவருதல் இயல்பு.

கானல்வரியில் வருகின்ற இனிய பாடலில் தலைவி ஒருத்தி தன்னைப் பிரிந்திருக்கின்ற தலைவன் தன்னை மறந்துங்கூட தன்னால் அவனை மறக்க முடியவில்லையே என வருந்தினாள் எனக் காண்கிறோம்.

"தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்"

என்ற பாட்டில், "தலைவன் நம்மை நினைக்க வில்லை. அவரும் தேரோடு அவர் இடத்திலேயே தங்கிவிட்டாரோ? தங்கி இருப்பினும் இருக்கட்டும், பூங்கொடிகளே! அடும்புகளே! அன்னங்களே! என்னை அவர் மறந்தார் ஆயினும் அவரை என்னால் மறக்க முடியவில்லையே!" என்று அவள் சொல்லிப் புலம்பியது புலப்படுகிறது. இதனைப் படிக்கும் பொழுது ஒருவர்க்கு அடியில் வரும் திருக்குறட் பாக்கள் நினைவிற்கு வருதல் இயல்பே.

"நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை,"

"யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எந்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்."

திருவள்ளுவரால் காட்டப்படுவது தலைமகள் ஒருத்தி தலைவனைப் பிரிந்திருக்கிற வேளையில், தலைவன் வரவில்லையே என வருந்துகின்றவள் உரைத்த உரையில், "என்னை இன்றியும் என் மனத்தில் எப்படியோ அவர் ஒட்டிக் கொண்டுள்ளார். ஆனால், அவர் நெஞ்சத்தில் என்னை வைத்துக் கொண்டு இருக்கிறாரோ, இல்லையோ என்பது தெரியாது. "அவர் என்னை மறந்தாலும் நான் அவரை மறவேன்" என்பதாகும். இத் திருக்குறட் பாக்களுக்கும் சிலப்பதிகாரப் பகுதிக்கும் எத்துணைப் பொருத்தம் என்பதை ஒருவர் எளிதில்

கண்டறியலாம். ஒன்றற்கு ஒன்று அணிகலம் போன்று அன்றோ இவ்விரண்டு நூல்களும் இயைபு படக் காணப்படுகின்றன ?

தலைவனைப் பிரிந்திருக்கின்ற தலைவி ஒருத்தி மாலை நேரம் வந்துற்றபொழுது அதனை நோக்கி, " நீ மாலை நேரம் அல்லை ; மணந்துகொண்ட மகளிருடைய உயிரை உண்ணும் காலமாய் உள்ளாய்" எனக் கூறியதாக ஒரு திருக்குறள் அமைந்துள்ளது.

" மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது "

என்பது அது. இதனை அடி ஒற்றி இளங்கோவடிகள் அழகுபடச் சொல்லிய பாடல்கள் கானல்வரிப் பாடல்கள் ஆகக் காணப்படுகின்றன.

" இளி கிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை
... ...
கொளை வல்லாய் என் ஆவி கொள்வாழி மாலை "

என்றும்,

" மாலை நீஆயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந்தது வாழி மாலை "

என்றும் வருகின்ற சிலப்பதிகார அடிகளில் அக் குறட் கருத்து வருதல் காண்க.

" கண்டுகேட் டுண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்னும் திருக்குறள் பலர் அறிந்தது. காண்டல் இன்பமும், கேட்டல் இன்பமும், உண்டல் இன்பமும், உயிர்த்தல் இன்பமும், உறுதல் இன்பமும் ஆகிய ஐவகை இன்பங்களும் பெண்ணிடத்தே

3650—6

உண்டு என்பது இக்குறளின் கருத்து. மலர் களிற் சில காண்பதற்கு இனியனவாகவும், சில காண்பதற்கும் மோப்பதற்கும் இனியனவாகவும் இருக்கும். மலர்களின் ஒலியை நாம் கேட்டு மகிழ் தல் இல்லை. சில பொருள்கள் காண்பதற்கும் உண்ப தற்கும் இனியனவாக இருக்கும். அவற்றின் ஒலி களை நாம் கேட்டல் இல்லை. நறுமணம் உடைய பலவேறு பொருள்கள் பார்ப்பதற்கு இனியனவாக இருந்தாலும் உண்ணப்படா; கேட்கவும்படா. தொட்டால் இன்பம் தரக்கூடிய பலவேறு பொருள் கள் உண்டக்கால் மகிழ்ச்சி தருதல் இல்லை. அவற் றின் ஒலியைக் கேட்டல் என்பது அறவே இல்லை. எனவே, ஒரு பொருளின்கண்ணே இந்த ஐவகைப் புலன் உணர்ச்சியும் உண்டு என்றால், அப் பொருள் பெண்தான் என்பது இக்குறள் கருத்து. இதற்கு அழகிய விளக்கம்போல் சிலப்பதிகாரத்தில் ஓர் இடம் அமைந்துள்ளது. கோவலன் மணத்தின் பின் கண்ணகியைப் பாராட்டிய பலவகைகளில்,

> " மாசறு பொன்னே வலம்புரி முத்தே
> காசறு விரையே கரும்பே தேனே "

என்பது ஒருவகை. இவ்விடத்திற் கண்ணகியைப் பொன் என்றும், முத்து என்றும், விரை என்றும், கரும்பு என்றும், தேன் என்றும் பாராட்டியதன் உட்கருத்து என்ன? அவள் பார்ப்பதற்கு இனிமை யாக இருத்தலின் அவளைப் பொன் என்றான். அவளைத் தொட்டால் இனிமை உண்டாதலின் வலம்புரி முத்து என்றான். அவளுடைய உயிர்ப்பு (மூச்சு) மணம் உடையதாக இருத்தலின் விரை

(வாசனைப் பொருள்) என்றான். நாவால் சுவைப் பதற்கு உரிய இதழ்களைப் பெற்றுள்ளமையால் அவளைக் கரும்பு என்றான். அவள் சொற்கள் கேட்பதற்கு இனியனவாக இருக்கின்றன என்ற காரணத்தால் தேனே (வண்டே) என்றான். இதிலிருந்து அறியப்படுவது அவளுடைய ஐம்புலனும் திருக்குறளிற் கூறப்பட்டவாறே மிக்க இனிமை பயப்பன என்பதே ஆகும்.

இவைபோன்ற பல இடங்களில் திருக்குறளிற்கும் சிலப்பதிகாரத்திற்கும் உள்ள பொருத்தங்களைக் கண்டு ஒருவர் மகிழ்தல் இயலும்.

7. பூத்த வேங்கை

எட்டு வயது சிறுமி ஒருநாள் தோழியர் சில ரொடு விளையாடிக் கொண்டிருந்தாள். அவர்கள் தமக்குள் ஒருத்தியை முருகன் என்றும், ஒருத் தியை வள்ளி என்றும் பெயரிட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். வள்ளி தினைப்புனங் காப் பதுபோன்ற நிலையில், ஆலோலம் பாடப்படுகிறது, முருகன் வயதுகிழவனாகத் தள்ளாடி வருகிறான். மற்ற தோழிமார் வள்ளியின் தந்தையாய்த் தம ராய்த் தோற்றம் அளிக்கிறார்கள். இப்படி அவர் கள் விளையாடிக்கொண்டு இருக்கும் வேளையில் யாரோ ஒருவன் அவ்வழியே பூவும் கையுமாகப் போய்க் கொண்டிருந்தான். வள்ளிவேடந் தாங்கி யவள் முருகனுக்குப் புனைய வெனச் சில பூக் களைக் கேட்டாள்; பெற்றாள். அப்பூக்கள் பொன் போன்ற வேங்கைப் பூக்கள். நறுமணமும் நன் னிறமும் வாய்ந்த அப்பூக்களை வாங்கிய வள்ளி, முருகன் வேடந்தாங்கிய பெண்ணிற்கு அவற்றைச் சூட்டி வணங்கினாள். இஃது அன்று நடந்த நிகழ்ச்சி.

அவளுக்கு வயது பன்னிரண்டு ஆகிறது. எவர் எவரோ பெரிய இடத்து மாப்பிள்ளைகள் அவளை விரும்புவதாகக் கேள்வி. அவர்களுடைய தந்தை "அடுத்த ஆண்டு பார்க்கலாம்" என்று எத்தனை பேருக்குத்தான் சொல்லுவார்! இதற் கிடையே, அச்சிறுமிக்கோ காய்ச்சல் கண்டுவிட் டது. சூடியிருந்த பூக்களோ காய்ந்து தீய்ந்து

விட்டன. தாயோ மகள் பயந்திருப்பாள் என அஞ்சிப் பூசாரிக்குச் சொல்லி அனுப்பியிருக்கிருள். அவனும் மறுநாள் வருவதாகத் தெரிவித்து விட்டான்.

இவ்வேளையில், சிறுமியின் தோழி நினைக்கிருள்: "இவளுக்குக் காய்ச்சலா, பேய்ச்சலா! பேயா, பிசாசா இவளைப் பிடித்திருக்கிறது! வீணுகப் பூசாரி ஏதாவது உளறி வைப்பான்? முருகக் கடவுளால் இந்த நோய் வந்தது என்பான்! கோழிப்பலி வேண்டும் என்பான்! என் தோழியோ அன்று பார்த்த அவரையே யல்லவா நினைத்துக் கொண்டு உருகுகிருள்! 'சின்ன வயதில் அவருக்கு உள்ளத்தைக் கொடுத்தேன்; வேறு எவரையுஞ் சிந்தியேன்' என்கிருள். அவளும் தப்புச் செய்யவில்லையே! அவரும் தப்புச் செய்யவில்லையே! ஏதோ விளையாட்டில் பூவினை வேண்டினுள். அவரும் விளையாட்டாகக் கொடுத்துவிட்டு ஒன்றும் நினைக்காமல் அன்று போய்விட்டார். ஏன் நாங்கள் அங்கே விளையாடப் போயிருக்க வேண்டும்? ஏன் அவர் அந்த வழியே வந்திருக்க வேண்டும்? பூ வேறு கையிற் கொண்டிருக்க வேண்டும்? தாய்தானே விளையாடி வாருங்கள் என்று அனுப்பினுள்! ஏன் அன்று அந்த வேளையில் அனுப்பியிருக்க வேண்டும்? பதில்சொல்ல முடியாத கேள்விகள்—விடிந்தால் என்ன ஆகுமோ?" என நினைத்து விழித்துக் கொண்டிருந்தவள் உட்கார்ந்தபடியே ஓரிடத்தில் தூங்கிவிட்டாள்.

கனுப்போலும்! உளறிவிட்டாள், "நாடன்—

மயில்நாடன்—மயிலினம் அகவும் நாடன்'' என்று. அவள் தாயோ ''இது எத்தனை நாளாக, பெண்ணே! யாரடி! அந்த நாடன்! என்று வினவி எழுப்பினாள். தோழியும் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''நான் இல்லை, அவள்'' என்றாள். ''அவளாகவே இருக்கட்டும்; அந்த நாடன் யார்?'' என்றாள் தாய். தோழி கூறினாள்:

''பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.''

அவளுடைய சொல் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அழகு, ஒவ்வோர் நயம், ஒவ்வோர் இனிமை உண்டு. ''பூக்கள் நிரம்பிய வேங்கை மரத்தின் பெரிய கொம்பில் ஏறி மயில்கள் கூவும் நாடராகிய அத்தலைவர் என் தோழியின் மனத்தகத்தைவிட்டு அகலார். அவரையே அவள் கனவிற் காண்கிறாள். நனவில் காணத் துடிக்கிறாள். சில வேளை கண்ணைப் பிசைகிறாள்; அழுகிறாள். இதுதான் காய்ச்சல். வேறொன்றும் இல்லை'' என்பதே அவள் கருத்து.

''வேங்கை வியன்சினை'' என்றதால் அத்தலைவரின் வீட்டடையாளம் கூறிவிட்டாள். அந்த ஊரிலேயே மிகப் பெரிய வேங்கைமரம் பக்கத்தில் இருப்பதாக ஒரே ஒரு வீடுதான் உண்டு. சில வீடுகளின் பக்கத்தில் தேக்குமரமோ சந்தன மரமோ அகிலோதான் உண்டு. இன்னும் சில வீட்டுப் பக்கம் மூங்கில் நிற்கும். வேறு சில வீட்டோரம் வேங்கை மரம் இருந்தாலும், அத்தலைவர் மனையருகே உள்ள மரம் மிக மிகப் பெரிது. அது

பெரியது என்பது அதன் இலையாலேகூடத் தெரியும். அந்த மரத்தில் ஒவ்வொரு கொத்தும் ஏழு இலைகூடப் பெற்றிருக்கும். ஒவ்வொரு இலையும் ஐந்து அங்குல நீளமாயிருக்கும். அகலமோ நீளத்திற் பாதி. இந்த அடையாளங்களால் அந்த ஊரில் "வேங்கை வீடு" என்றுலே ஒருவர் வீடு தான் என்பது பொருளாகும்.

அந்த வேங்கை மரத்தின் பெரிய கொம்புகளில் மயிலினம் "ஏறின" என்றமையால், அந்த மரம் மிகவும் உயரமானது என்பதும் குறிப்பிடப்பட்டது. "மயிலினம் தாவின்" என்று அவள் கூருதது நோக்கத் தக்கது. அந்த மயில்கள் சிறகினுல் பறந்து செல்வதை விரும்பாமல் காலால் ஏறிச் செல்வதையே விரும்புகின்றன என்பதை அவள் அறிந்து வைத்திருக்கிருள். அத்தலைவர் முல்லை, மருத நிலங்களுக்குத் தாவிப்போய்ப் பெண்ணைக் கொண்டுவர நினைக்காதவர் என்பதைக் குறிப்பாக உணர்த்திவிட்டாள்.

அந்த மரத்தில் ஏறி வாழும் மயில் ஒன்றன்று, பல என்ருள். அதனுல் "மயிலினம்" என்ருள். பத்து, பன்னிரண்டு மயில்கள் மிகவும் ஒற்றுமையாக அந்த மரத்தில் இருப்பதைப் பார்த்து, அவ் வீட்டில் உள்ள சுற்றத்தார் எவ்வளவு ஒற்றுமையாகவும் அன்பாகவும் உள்ளார் என்பதை ஊகித்துக்கொள்ள வைத்துவிட்டாள்.

"மயிலினம் அகவுகின்ற நாடன்" என்ருள். அவற்றுள் ஓர் ஆண்மயில் ஒலிக்கும் ஒலி கொம்பு ஊதுவதுபோல் அந்த ஊரையே அழித்துவிடும்

போலிருக்கின்றது. வஞ்சப்பூனை ஒன்று அங்குச் சுற்றுவதை அம்மயில் பார்த்துவிட்டதாற் போலும் மற்றப் பறவைகளுக்கும் குஞ்சுகளுக்கும் முன்னறிவிப்பாகக் கூக்குரல் இட்டுக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே அத்தலைவர் வஞ்சப் பூனைகட்கு இடந்தரார் எனச் சுட்டிக்காட்டிவிட்டாள். தாய் தந்தையரிடம் நாள்கோள் சொல்லிப் பிறர் எவராவது தம் காதலியைப் பெறுதற்கு வஞ்சனை செய்வாராயின் அவர் வாளா இரார் என்பதையுஞ் சுட்டி விட்டாள்.

“வேங்கையோ பூத்துவிட்டன. இது கூதிர்க் காலம் அன்றோ? மணவினைக்கு ஒத்தகாலம் ஆயிற்றே! இந்த ஐப்பசி, கார்த்திகையிலேயே திருமணத்தை முடிக்க வேண்டும்” என்று கூறுபவளாய்ப் “பூத்த வேங்கை” எனக் கூறிவிட்டாள்.

அந்தத் தலைவர் அவளுடைய மனத்தில் உள்ளார். அவர் தம்முடைய மனத்தில் அவளுக்கே இடம் தந்துள்ளார் என்பது தோன்ற, அத்தோழி கூறிய நயம் வியக்கத் தக்கது. “நாடன் கொடிச்சி மனத்தகத்தோன்” என்று சொற்களை அமைத்த திறம் உன்னியுன்னி மகிழத்தக்கது. நாடன் கொடிச்சியினுடைய மனத்தகத்தோன் என்றும் கொள்ளத்தக்க வகையில் சொற்கள் கிடக்கின்ற அழகு என்னே!

“கொடிச்சி” என்றாள் தன் தோழியை. அவள் கொடிபோலத் தவழ்ந்து தவழ்ந்து விளையாடிய மென்பருவத்தில் அன்றோ அத்தலைவர்

வந்து அன்றொருகால் வேங்கை மலர்கொடுத்தார்! அந்த அசைநடைக் கொடிச்சி இந்த மயில் அனையானுக்குத் தகும் என்பதே தோழி கருத்து. தோகையோடு சேர்த்து ஆறடி உள்ள ஆண் மயிலைப் போன்று அழகாக இருக்கும் அத்தலைவர், வாலோடு சேர்த்து ஐந்தடி உயரமுள்ள பேடையைப் போன்று இனியளாய் உள்ள தன் தோழிக்குத் தக்கவரேயாம் எனக் கருதினாள் போலும்!

"இவ்வாறு மனத்தால் ஒன்றாகிவிட்ட இவ்விருவர்க்கும் திருமணம் காண்பது அன்றோ அழகு! பூசாரியை நாளை வரவேண்டாம் என்று சொல்லுங்கள். தாயரே, விரைவிற் சொல்லியனுப்புங்கள்" என்று வேண்டினாள் தோழி.

> "பூத்த வேங்கை வியன்சினை ஏறி
> மயிலினம் அகவும் நாடன்
> நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

என்ற மூன்றடிகளை விளக்க முந்நூறு வரிகள் போதா. பாடின புலவருடைய பெயரோ ஊரோ அறியோம்.

இது, சில இலக்கண நூல்களில் மோனை எதுகை நயம் அமையாத பாட்டிற்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும், இது பொருளாழம் வாய்ந்த பாட்டிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கதென்பது மேற்கூறிய விளக்கத்தான் ஓரளவு அறியப்படும்.

8. உலகத்தார்க்கு ஆணி

தொழுது உண்ணுஞ் சுவை நிரம்பிய பொருளை விட, உழுது உண்ணும் சுவையில்லாத பொருளும் இனியது என்பது தமிழர் கொள்கை. சிறிதளவு கூழே பெறினும், அவரவரது முயற்சியாலும் அவரவரது உழைப்பாலும் பெற்ருல், தன்முயற்சியின்றிக் கிடைக்கும் அமிழ்தத்தினும் அது சிறந்தது என்பது தொன்றுதொட்டு வரும் தமிழர் கருத்து.

> "தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
> உண்டலி னூங்கினிய தில்"

என்ருர் திருவள்ளுவர். உழுது உண்டு வாழ்கின்றவரே "வாழ்பவர்" எனச் சிறப்பித்துச் சொல்லத் தக்கவர் என்பது அவர் கருத்து. உழுதொழிலைச் செய்து, தாம் உண்ணுமல் பிறர்க்கே அளிக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்தன்று. இஃது அவர் உழுது வாழ்வாரே வாழ்வார் என்று கூறுததாலே விளங்கும். அவர் கருத்துப்படி, உழ வேண்டும், உழுது உண்ணவேண்டும், உண்பதோடன்றிப் பிறர்போல உடுக்கவும் வேண்டும், உறைவிடம் பெறுதலும் வேண்டும், தாம் உண்டலேயன்றிப் பிறர்க்கும் கொடுத்தலும் வேண்டும். இக் கருத்துக்கள் அனைத்தும் அவர் கூறிய "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்னும் பகுதியில் அடங்கியுள்ளன. உழவுத் தொழில் கடினமாயினும் மேற்கொள்ளத் தக்கது. அத்தொழிலின் கடுமை "உழவு" என்ற சொல்லாலே விளங்குகிறது. உழத்தல் என்ருல் வருந்தி வேலை செய்தல் என்பது

பொருள். உழவு என்ற சொல்லிலும் உழத்தல் என்ற சொல்லிலும், வருந்தி வேலை செய்தல் என்ற பொருளுடைய அடிவேர் இருக்கிறது. "நெல்லரியும் இருந்தொழுவர்" என வருகின்ற புறநானூற்றுப் பாடலிலும் உழவர் "தொழுவர்" எனப்பட்டனர். தொழுவர் என்பர் தொழில் ஆற்றுவார், வேலை செய்வார் ஆவர். உழுதொழிலின் கடுமை உழவேண்டிய முறையைப்பற்றி அறிந்தோர்க்கும் உழுவோர்க்கும் நன்கு புலனாகும். ஒரு நிலத்தை நான்கு முறை காயப்போட்டு, மறுபடியும் மறுபடியும் மேல்மண் கீழ்மண் ஆகும்படியும், கீழ்மண் மேல்மண் ஆகும்படியும் உழவேண்டும் என்ற கருத்துப்படத் திருவள்ளுவர் மொழிந்துள்ளார். ஒரு பலப் புழுதி காற்பலப் புழுதி ஆகும்படி உழவேண்டும் எனத்

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

என்ற இடத்திற் கூறியுள்ளார். இவ்வாறு உழுதால், புன்செய் நிலத்திற்கு எரு நிரம்பப் போடாமலே விளையும் என்றாரே ஆயினும், எருவின் இன்றியமையாமையை அவர் உணராதவர் அல்லர். அதனால்தான் "ஏரினும் நன்றால் எருவிடுதல்" என்றார். நான்குமுறை உழுவதைவிட, கலப்பு எருப்போடுதல் மிகவும் நல்லது என்று கருதினார். அதன்பிறகு, வித்தி நாற்று நட்டபொழுது வயலிற் படும் களைகளைக் களைந்து எறியவேண்டும் என்றார். அல்லாதுபோனால், பயிர்க்குப் போகவேண்டிய நீரும் உரமும் களைகளாற் கவரப்பட்டுவிடும்.

அன்றியும், களைகள் பயிருக்கு வேண்டிய இடத்தைப் பற்றிக்கொண்டு காற்றேட்டத்தையும் பகலவனெளியையும் குறைத்துவிடும். அங்ஙனம் களைகட்ட பிற்பாடு, நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். வேண்டிய அளவு வயலுக்கு நீர்ப்பாய்ச்சியபின், அந்நீரைப் பிறர் பக்கத்து நிலத்துக்குக் கொண்டு போய்விடாமலும், மாடோ மக்களோ இறங்கிச் செடிக்குச் சேதம் விளைத்துவிடாமலும் பாது காக்கவேண்டும். இவற்றை எல்லாம் எண்ணித் திட்பமாக,

> "ஏரினும் நன்ருல் எருவிடுதல்; கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு"

என உரைத்துள்ள திறம் பாராட்டுதற்கு உரியது.

தமிழர்கள் உழவுத் தொழிலுக்கு இட்ட பேர்களுள் ஒன்று "ஏர்". அவர்க்குச் சிறந்த தொழிலாக அமைந்ததொன்றை "ஏர்" எனவே செப்பினர். அதனுல், ஏர் என்பது அழகு என்னும் பொருளை நாளடைவிற் பெறுவதாயிற்று. "ஏரின் உழாஅர் உழவர்" என்ற இடத்தில், ஏர் என்பது கலப்பை என்னும் பொருளில் உள்ளது. "ஏரினும் நன்ருல் எருவிடுதல்" என்றவிடத்து அஃது உழுதல் என்னும் பொருளில் அமைந்துள்ளது. "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று இரப்பும் ஓர் ஏர் உடைத்து" என்ற திருக்குறளில், "ஏர்" என்பது அழகு என்னும் பொருளிற் காணப்படுகிறது. இவற்றிலிருந்து ஏர்த்தொழில் எத்துணைச் சிறப்புடைத்தாக மதிக்கப்பட்டது என்பது அறியப்படும்.

மேலும், ஏர் என்னும் சொல் "எருது" என்னும் பொருளிலும் வழங்கப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். "நல்லேர் நடந்த நசைசால் விளை வயல்" என்ற மதுரைக்காஞ்சி அடியில், ஏர் என்பது எருது என்னும் பொருளுடையது. உழவர் "ஏரோர்" எனப்பட்டனர். நெற்களம் "ஏர்க் களம்" எனப்பட்டது. ஏர்த் தொழிலுக்குத் தொடர்புடைய உரம் "எரு" எனப்பட்டது. அது குவிக்கப்பட்டிருந்த பொதுவிடம் "எருமன்றம்" எனப்பட்டது. ஏர்த் தொழில் செய்வதற்கு உதவுவதாலும், எருவினைத் தருவதாலும் ஒரு விலங்கு "எருது" எனப்பட்டது. இக்காரணங்களால் உழுதொழிலைத் தமிழர் சிறப்புடையதாகக் கருதினர் என்பது போதரும். ஆயினும், நச்சினார்க்கினியர் அந்தணர்க்கும் அரசர்க்கும் உழுதொழில் ஆகாது என உரையெழுதி, வணிகர்க்கும் வேளாளர்க்குமே அதனை உரியதாக்கினார். பிற தொழில்களை மேற்கொண்டவர்களையும் உழவர் என்றே பல பழந்தமிழ் நூல்கள் மொழிவதால், அத்தொழிலை மேன்மையுடையதாகவே தமிழர் மதித்தனர் என்பது தெள்ளிதின் அறியப்படும்.

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"

என்று திருவள்ளுவர் கூறிய இடத்தில், சொல்லேர் உழவர் என்பார் மதிநலம் படைத்த சொல்வல்லார் என்று அறிகின்றோம். இவ்விடத்தில், வீரமும் சொல்வன்மையும் உழவாக உருவகிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். "வில்லேர் வாழ்க்கைச்

சீறூர் மதவலி'' எனப் புறநானூற்றிலும் (செய்-331), ''மாரி வளம்பெரு வில்லேர் உழவர்'' எனச் சிலப்பதிகார நாடுகாண் காதையிலும் வந்திருப்பன இக்கருத்தை வலியுறுத்துவன. புறநானூற்றுப் பாடல் மற்றொன்றில் கோவூர்கிழார் புலவரைப் ''புலனுழுதுண்மார்'' என்றார். புலன் என்பது அறிவு. அறிவினால் உழுது உண்ணும் கற்றோர் என்றால், அறிஞர் என்பதே பொருள். எனவே, புலமையை உருவகித்த விதத்தை அறியலாம்.

தொல்காப்பியர் புறத்திணையியலுள் வாகைத் திணையின் இலக்கணத்தைக் கூறுகின்ற இடத்துள் ''ஏரோர் களவழியன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்'' என ஒன்று கூறியுள்ளார். உழவர்கள் ஏர்க்களத்தில் செய்யும் செய்கைகள் இங்கே சிறப்பிக்கப்பட்டுள. அச்செயல்களாவன நெற்கதிரைக் கொண்டு களத்திற் குவித்தலும், நெற்போர் அழித்தலும் முதலியன ஆம். அச்செயல்களைப் போன்ற சிலவற்றைச் செய்யும் அரசனும் உழவன் எனவே அந்நாளில் மதிக்கப்பட்டான். பகைவருடைய நாற்படைகளைக் கொன்று போர்க்களத்திற் குவித்தலும், குவித்த பிணங்களை அதரி திரித்தலும் ஆகியவற்றை அரசன் செய்தலால், அவன் ''வாள்ஏர் உழவன்'' எனப்பட்டான். வாளையே கலப்பையாகக் கொண்டு வெற்றியாகிய பயிரை விளைப்பவன் என்பது கருத்து. வாயினை வாளா வைத்திருக்க மாட்டாது, வண்டமிழை இகழ்ந்த ஆரிய அரசர் பலரைச் செங்குட்டுவன் செருக் களத்தில் அழித்தான். அவனை ''வாளேர்

உழவன்" என்றனர் இளங்கோ அடிகள். அவன் யானையாகிய எருதினைப்பூட்டி, வாளாகிய கோலினால் ஆட்களாகிய போரை இறங்கவிட்டு அதரி திரித்தவன் எனப் பேசப்பட்டுள்ளான். சிலப்பதிகாரக் கால்கோட் காதையில் இச்செய்தி

> "ஆரிய அரசர் அமர்க்களத் தழிய
> நூழில் ஆட்டிய சூழ்கழல் வேந்தன்
> ....
> ....
> கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
> ஆளழி வாங்கி அதரி திரித்த
> வாளேர் உழவன் மறக்களம் வாழ்த்தி"

என்ற இடத்திற் கூறப்பட்டுள்ளது.

அரசனைக் காவலன் எனக் கூறுவதும், ஒரு வகையான் நோக்கினுல் உழவின் அடியாகப் பிறந்தது எனத் தோற்றும். "நீரினும் நன்றதன் காப்பு" என்றவிடத்துத் திருவள்ளுவர் வயல்களை நன்ருகப் பாதுகாக்கும் கடமையுடையவன் உழவன் என்ருர். வயல்களிற் பயிர்களை உழவன் பாதுகாத்தலைப்போல அரசன் குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு உடையவன். வயல்களில் உள்ள பயிர்களுக்குத் தன்னுலும், தன் சுற்றத்தாராலும், பகைஞர்களாலும், திருடராலும், பிற உயிர்களாலும் வரக்கூடிய தீமை இல்லாமல் பாதுகாக்கும் கடமை உடையவன் உழவன். அவனைப்போலவே, அரசனும் தன் குடிமக்களைப் பாதுகாக்கும் பொழுது இவ்விடையூறுகள் நிகழாதவாறு பாதுகாக்கும் கடமை உடையவன். இக்கருத்து,

“ மாநிலங்கா வலன்ஆவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ ”

எனச் சேக்கிழாராற் கூறப் பெற்றுள்ளது. கம்பரும் தசரதனைப்பற்றிக் குறிப்பிடும் இடத்தில் “வறிஞன் ஓம்பும் ஓர் செய்யென வையக முழுவதும் காத்தினி தரசு செய்கின்றான்” என்றார். ஒரே வயலையுடைய வறிய உழவன் ஒருவன் எத்துணைக் கவலையொடு தனது வயலைப் பாதுகாத்து வருவானோ அத்துணைக் கவலையொடு அரசன் தனது நாட்டைப் பாதுகாத்துவருதல் வேண்டும் என்ற கம்பர் கருத்தை அறிக.

முன்றுறையரையனார் என்னும் புலவர் நம்மையெல்லாம் உழவர்களாகப் பயிர் செய்யும்படி பணிக்கின்றார். அவர் கருத்துப்படி மக்கள் எல்லாம் உழவர்கள் ; இன்சொல் உழுநிலம் ; ஈகை விதை ; வன் சொற்கள் களைகள் ; உண்மையே எரு ; அன்பு பூணுதலே நீர்ப்பாய்ச்சுதல் ; அறமே கதிர். விரையொன்றுபோடச் சுரையொன்று முளைக்காதன்றோ ? அதனால், ஈகையென்னும் வித்துக்கேற்ப, ஈகையென்னும் பொருளுடைய அறமே கதிராக வைக்கப்பட்ட நயம் அறியத்தக்கது. இக்கருத்தமைந்த பாடலை,

“ இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

என அறநெறிச்சாரத்துட் காணலாம்.

பயிர்த்தொழிலோடு தொடர்புடைய பொருள்கள் பல கருத்துக்களை விளக்குதற்குத் திருவள்ளுவரால் முன்னரே பயன்படுத்தப்பட்டுள.

“ இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது ”

என்ற இடத்தில் இன்சொல் ஆகிய பயிர் இனிமை ஆகிய கதிரை ஈனுதல் சுட்டப்பட்டது.

“ நாண்வேலி கொள்ளாது மன்னோ ! வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர் ”

என்ற திருக்குறளில் ஞாலம் பயிராகவும், நாணம் அதனைக் காக்கும் வேலியாகவும் உருவகிக்கப் பட்டன.

“ கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் ”

என்ற குறளில், குடிமக்களைப் பயிர் எனவும், அவரை வாழாமல் தடுக்கும் கொடியாரைக் களைகள் எனவும், அவர்களைத் தண்டித்தலைக் களைகட்டல் எனவும், அரசனை உழவன் எனவும் உருவகித்தவாறு அறிக.

களவொழுக்கத்தில் தலைவனொடு ஒழுகிய தலைவியை இன்னும் திருமணஞ் செய்துகொள்ளாது உள்ளான் தலைவன் ஒருவன். அவன் அவளோடு பழகியதை அரைகுறையாகக் கண்டவர் ஊரில் அலர் எழுப்புகிறார்கள். தலைவன் வரக்காணமை யால் தலைவிக்கு நோய் எழுகிறது. இந்நிலையில் அவள் தாய் அவளிடம் சிறிது ஐயமுற்று “வெளியே செல்லலாகாது” எனக் கூறுகிறாள். இதனைத் தலைவி தன் தோழிக்குத் தெரிவிப்பதாக

ஒரு குறள் உண்டு. அக்குறளில், தலைவியின் நோய் பயிராகவும், ஊரார் ஏச்சுரை அந்நோயை வளர்க்கும் எருவாகவும், தாயின் பேச்சு பயிரை வளர்க்கும் தண்ணீராகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

"ஊரார் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்"

என்பது அது.

உழவுத் தொழிலிற் பயன்படும் எருது புறநானூறு, திருக்குறள் முதலிய புராதன நூல்களில் நன் மக்கட்கு உவமையாக எடுத்தாளப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தன்னலம்பேணுத் தகைமையாளனும் பிறர்நலம் பேணும் பெற்றியாளனும் ஆக உள்ள ஒருவன் தன் ஊதியத்திலிருந்து சிறிதளவு தான் துய்ப்பதற்கு எடுத்துக்கொண்டு பிறருக்குப் பெரிதும் வழங்குவன் என்ற கருத்தைப் புலப் படுத்த வந்த பெருஞ்சாத்தனர் என்னும் புலவர் எருதினை உவமையாக்கினர். உழுத வலிமை யுடைய எருது நெற்கதிர்களைப் பிறர்க்கு விட்டு விட்டுத் தான் வைக்கோலைத் தின்றற்போல எனச் சொல்லவந்தவர், "உழுத நோன்பகடு அழிதின் றங்கு" எனக் கூறினர். ஔவையார் அதிக மானைப் புகழும்பொழுது, "நீ போர்க்களத்திற் புகுந்தால் உனக்கு எதிரே போர் செய்வோரும் இருக்கின்றீர்களா?" என்றார். அந்நேரத்தில், பண்டப் பொதிகளைச் சுமந்துபோகும் வண்டியைக் கல்லும் பிளந்துபோகும்படி இழுத்துப்போகும் எருதிற்குப் போகமுடியாத இடமும் உண்டோ"

எனக் கேட்கின்றுர். அதுபோல, மனவுரமும் உடல் வலிவும் உடைய ஒருவன் தனக்கு வந்த இடுக்கணைப் பொடியாக்குவன் என்ற கருத்துப்படத் திருவள்ளுவர் ஒரு குறள் தந்தார். அதனுள், இடுக்கணுக்கு அஞ்சாத மனிதன் எருதினைப் போன்றவன் என இயம்பப்பட்டுள்ளான்.

" மடுத்த வாயெல்லாம் பகடன்ஞன் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து "

என்றதை நோக்குக.

இதுகாறும் கூறியவாற்ருல், உழுதொழிலைத் தமிழர்கள் சிறந்த தொழிலாக மதித்தார்கள் என்பதும், " உழந்தும் உழவே தலை " எனக் கருதினர் என்பதும், உழுபடையாககிய " ஏர் " என்பதன் அடிப்படையில் பல்வேறு கிளைச்சொற்கள் எழுந்தன என்பதும், பிற பிற தொழில்களை இயற்றுவோரும் ஒவ்வோர் வகையான் உழவரெனவே உருவகிக்கப்பட்டனர் என்பதும், உழவிற்குரிய எருவிடுதல், களைபறித்தல், நீர்ப்பாய்ச்சுதல், பகட்டின் இயல்பு என்பன உருவக வணியிலும் உவமையணியிலும் எவ்வெவ்வாறு ஆளப்பட்டுள என்பதும் அறிந்துகொள்ளப்படும். இக்காரணங்களால், " உழுவார் உலகத்தார்க்கு ஆணி " என்பது மெய்யே.

9. திருவள்ளுவர் அருங்கருத்துக்கள்

திருவள்ளுவராற் சிறப்பாகக் கருதப்பட்ட அணியும் நலனும் எவை? அணி என்ற உடனே பொன்னாலும் மணியாலுஞ் செய்யப்பட்ட பல வகைக் கலன்களையே நினைத்தல் இயல்பு. ஆனால், வள்ளுவர் கருத்துப்படி நோக்குவோமாயின் அக் கலன்களையன்றி வேறுபல கலன்கள் சிறந்தனவுள என்பது புலப்படும்.

> " பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
> அணிஅல்ல மற்றுப் பிற "

என்னுங் குறளிற் குறிக்கப்படுங் கலன்கள் பணிவுடைமையும் இன்சொல்லுடைமையும் ஆம். பணியத் தக்காரைக் கண்டுழிப் பணிதல் என்பது மாந்தர்க்கு ஏற்ற அணியாகும்; பணியாது செருக்கித் தருக்கித் திரிவோர் எத்துணைக் கலன்களைப் பூண்டிருப்பாராயினும் அணியுடையராகமாட்டார். பணியத்தக்கார் இன்னாரென்பது மாந்தர் தம்முள் ஆராய்ந்து முடிவு செய்துகொள்ள வேண்டிய தொன்று. தாய், தந்தை, அரசன், ஆசிரியர், குரு எனப்படுவார் வணங்கற்குரியர் எனக் கூறப்படுதலுமுண்டு. ஆனால், இன்சொல் கூறத்தக்காரைக் கண்டு கூறவேண்டும் என்பது நியதியன்று. இன்சொல் யாவர்மாட்டும் வழங்கற்குரியது. எனவே, பணியத் தக்கார்மாட்டுப் பணிவுடையரா யிருத்தலும், யாவர்மாட்டுங் கூறும் இன்சொல்லுடையரா யிருத்தலும் மாந்தர்க்குச் சிறந்த அணிகள் என்ற வள்ளுவர் கருத்தைக் காண்க.

இனி, கண்ணிலா மாந்தர் நலனிலாராயின், கண்ணோட்டம் இல்லாத கண்கள் அணிகலம் அற்றவை யாகும். இவ்வழியே நோக்கின், கண்ணோட்டம் இல்லாத மாந்தர் எத்துணைப் பூணாரம் பூட்டினும் அணியுடையராக மாட்டார் என்பது பெறப்படும். அதுபற்றியே, திருவள்ளுவர் "கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்" எனக் கூறினார். தம்மொடு பழகினவர் கண்முன் நின்று கூறும் மொழிகளை மறுக்க மாட்டாமையே கண்ணோட்டம் எனப்படும். அக்கண்ணோட்டம் என்பது ஒன்று இருப்பதால்தான் உலகு நடைபெறுகின்றது. ஆயினும், அது அளவோடு இசைந்ததாக இருக்கவேண்டும். கருமங் கெட்டுப் போகாதவாறு அளவோடு செலுத்தப்படுங் கண்ணோட்டமே மாந்தர்க்குரிய சிறந்த அணிகளுள் ஒன்றாகத் திருவள்ளுவரால் கருதப்பட்டது.

கண்ணோட்டம் இல்லாதவர் அணியுடையராகார் என்பது போலவே நாணுடையரல்லாரும் அணியுடையரல்லர் என்க. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐம்பெரும் சால்புக் குணங்களை உடையவரே சான்றோர் எனப்படுவர். அச்சான்றோர்க்குச் சிறப்பாக அணி செய்வன கண்ணோட்டமும் நாணுடைமையும் எனப்படும். "அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு" என்ற குறட்பகுதியை நோக்குக. இழிந்த கருமங் காரணமாக, பழிபாவங் காரணமாகப் பிறக்கும் நாணே சான்றோர்க்கு அழகு செய்தலின், அதனையும் அணி என்றார் திருவள்ளுவர்.

உயிர் உடம்போடு கூடியல்லாமற் பயன் அடைய மாட்டாதவாறுபோலச் சால்பு நாணோடு கூடியல் லாமற் பயனடையாது ஆதலின், நாணுடைமை யின் சிறப்புப் பெறப்படும். அந்நாணுடைமையே மாந்தர்க்குச் சிறந்த அணிகலனாகக் கருதப் பட்டது. தை, காலர் முதலானவற்றால் தம்மை அழகுபடுத்திக் கொள்வாரிடம் நாணுடைமை யின்றேல், அவையெல்லாம் பிணிகளாமேயன்றி அணிகள் ஆகா என்பது இதனான் அறியப்படும். இதுபற்றியே,

> "குணநலஞ் சான்றோர் நலனே; பிறநலம்
> எந்நலத் துள்ளதூஉ மன்று."

என்றார் திருவள்ளுவர். நல்லனவாய இனங் களின் அழகே சான்றோரது அழகு. அஃதில்வழி, அவர்தம் உடலழகும் உடையழகும் அழகெனற்பால அல்ல என்க. நல்ல குணங்கள் எனற்பால எல்லாம் சான்றோரிடத்து ஒருதலையாக இருக்க வேண்டும் என்பது "கடனென்ப நல்லவை யெல் லாம்" என்னுங் குறட்பகுதியான் அறியப்படும். அக்குணங்களெல்லாம் பொருந்தி யிருந்தால்தான் சான்றோர் அழகுடையர் எனப்படுவர். மாந்த ரெல்லாம் சான்றோர் ஆதற்கு உரியராகலானும், சான்றோர் ஆக முயலுதல் அவர்தம் கடமையாக லானும், எல்லா மாந்தரும் குணநலன்களை நல னாகப்பெற முயலுதல் வேண்டும். குணநலம் இல்லாத விடத்து எழினலம் சிறக்காது என்க. "உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலுமரிதோ" என்பது உண்மையே ஆயினும், அதனிலும் அரிது

குணநலன்கள் எல்லாம் வாய்த்தல். அரியதனுள் அரிதாய் இருக்கும் ஒன்றே மிகச் சிறந்த அணி யெனப்படுமாகலின், குணநலன் மாந்தர்க்கு மிகச் சிறந்த அணியாதல் பெறப்படும். இக்கருத்தினை உட்கொண்டே பிறிதோரிடத்தும் வள்ளுவர்

> “ நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்
> மண்மாண் புனைபாவை யற்று ”

எனக் கூறியுள்ளார். பொருள்களை விரைவிற் கண்டு அவற்றை மறவாதிருக்கக் கூடிய நுண்ணிய நூலறிவு இல்லாத மாந்தர் எவ்வளவு வனப்பும் எழிலும் உடையரேயாயினும், உண்மையில் நலனுடையர் ஆகார் என்பது ஈண்டுச் சொல்லப் பட்டமை யுணர்க. மாட்சிமைப்பட மண்ணாற் செய்யப்பட்ட பதுமையினது வனப்பு உண்மை யின்பத்தை அளிக்கமாட்டாதவாறுபோல உறுப்பு நலனே பெற்று நுழைபுலம் அற்றிருக்கின்றாருடைய நலன் மெய்யாக இன்பம் அளிக்க மாட்டாது என்று வள்ளுவனார் வைத்துரைத்தது காண்க.

எனவே, பணிவுடைமை, இன்சொல்லுடைமை, கண்ணோட்டமுடைமை, நாணுடைமை, குணநல முடைமை, நுன்மாணுழைபுலமுடைமை ஆகிய இவையும் இவைபோல்வனவுமே அணிநலன் எனத் தக்கன என்பதும், பொன்னும் மணியாலும் ஆய அணிகள் அணிகளாகா என்பதும், உறுப்பு நலன் நலன் எனத்தக்கதன்று என்பதும் வள்ளுவர் வாய்மொழிகொண்டு அறியப்படும்.

உண்டுடுத்து உறங்குவதோடு வாழ்க்கை முற்றுவதில்லை யென்றும், விருப்பம் செயலறிவுகளால் வாழ்க்கை மதிக்கப்படும் என்றும் உலகிற் பெரியார் பலர் கூறிப் போயுள்ளனர். பெயிலி (Bailey) என்னும் புலவர் ஒருவர் உரைத்திருப்பதைக் கீழே காண்டல் கூடும். அவ்வுறுதிமொழி "செயலால் வாழ்கிறோம்; ஆண்டினால் அன்று. உள்ளத்தால் வாழ்கிறோம்; உயிர்ப்பினால் அன்று. உணர்ச்சியால் வாழ்கிறோம், நாழிகையால் அன்று" என்பதாகும். இதனால், அரும்பெருந் தகைமையை உடையவன், உள்ளத்தால் உயர்பொருளை உள்ளுபவன், சிறந்தவை செய்பவன் வாழ்கிறான் எனற்குரியான் என்பது தேற்றம். இவ்வுண்மையினை நம் அரும்பெருந் திருவள்ளுவர் தமது நூலில் அழகுடன் திகழுமாறு அமைத்துத் தந்துள்ளார். உணர்ச்சி, சிந்தை, செயலாகியவற்றால் வாழ்க்கை நோக்கப்படும் என்னும் அவரது கருத்து பல இயல்களிற் பரவி வருவதைக் காணலாம்.

அன்பென்னும் யாக்கை யகத்துறுப்பில்லாதவர்க்குப் புறத்துறுப்பாகிய மெய் வாய் கண் மூக்குச் செவியும், பொன் வெள்ளி முதலானவையும் எப் பயனைத்தரும் என வினவுகின்றார் வள்ளுவனார். தாய் தந்தை மனைவிமக்கள் முதலான தொடர்புடையார் மாட்டு நிகழுங் காதலின்றேல், நட்பேது, நாட்டுப்பற்றேது, மொழிப்பற்றேது? மன்பதைக்குத் தரவேண்டிய அருட் பொருள்தான் ஏது? உயிர்க்கு உறுதிதான் ஏது? அன்பு என்னும் நெகிழ்ச்சி உண்டாயின், ஒருவர் வாழ்கிறார்;

இல்லையேல் அல்லர் என்பதே வள்ளுவனார் கருத் தென்பதைப்

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில் அவர்க்கு"

என்ற அவர்தம் உரை துணையாக அறிக. அன் பென்னும் உணர்ச்சியோடு கண்ணோட்டம் என் பதும் ஒருவர்பால் இருத்தல் வேண்டும். பழகினா வர்கள் குற்றஞ் செய்தவழியும், துன்புற்றவிடத் தும், இயல்பாக அவர்கள்பால் கண்ணோடிக் குற் றத்தைப் பொறுத்தலும் துன்பத்தைக் களைதலும் வாழ்கின்றார் இயல்பு. கண்ணிற்கு அணிகலமாகிய கண்ணோட்டமில்லாதார் கண்ணுடையார் எனப் படார். அவர்தங் கண்ணுக்கும் மரக்கணுவுக்கும் பெரியதோர் வேற்றுமையில்லை. மரம் துன்புறு வோரைக் கண்டு இளகுதலில்லாதவாறுபோல ஒருவர் வருந்துவோரது துயரைக்கண்டு இரங்கா ராயின், மரம் பெயருக்கே கண் (கணு) பெற்றிருப் பதுபோல அவர் பெயருக்கே கண் பெற்றிருக் கின்றார் என்றும், கண்ணின் தொழிலைக் கண் செய் யாததால் அவர் கண்ணிருந்தும் குருடரே என்றும், பிறவிக் குருடரல்லா இக்குருடர் மனிதராக வாழ் கின்றார் என்றல் வாய்மையாகாது என்றும், அன் னார் மரத்தையே யொத்தாரென்றும் வள்ளுவனார் கருதினாரென்பதை

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்து கண்ணோடா தவர்"

என்னும் வாய்மொழியான் உணர்க. அன்புங் கண் ணோட்டமும் உடைய ஒருவர் நாணுடையராகவும்

இருத்தல் வேண்டும். நாண் என்றவுடன் மகளிர்தம் நற்குணங்களுள் ஒன்றை நினைத்தல் இயல்பு. ஆனால், ஈண்டுச் சுட்டப்படும் நாண் பழிபாவத்திற்கு அஞ்சுதலால் ஏற்படும் ஒருணர்ச்சியேயாம். அஃது இருபாலர்க்கும் வேண்டியதொன்றே. பழியொடு வருவதானால் உலகு கையகப்படுதலாயிருப்பினும் வேண்டா என்று விளம்பத்தக்க விழுமிய விறல் படைத்தவருக்கே வாழ்வதாகச் சொல்லிக் கொள்ள ஒருரிமை உண்டு. அஃதில்லாதவருக்கும் மரப்பாவைக்கும் பெரிதும் வேற்றுமையில்லை. உயிரில்லா மரப்பாவை ஆட்டப்பட்டு ஆடி உயிருடையதென நினைக்குமாறு மக்களை எவ்வாறு மருட்டுகின்றதோ, அவ்வாறே நாண் என்னும் அருங்குணமில்லாதவர் நடமாடுவதுபோல் நடமாடி உயிருள்ளவர் போலப் பிறரை மயக்குகின்றனர். நாணுணர்ச்சியற்ற இவர் வாழ்கின்றாரல்லர். இக்கருத்தை

> “ நாணகத் தில்லார் இயக்கம், மரப்பாவை
> நாணால் உயிர்மருட்டி யற்று ”

என்ற அருங்குறளால் அறிக. எனவே, அன்பு, கண்ணோட்டம், நாண் என்றிவ் வுணர்ச்சிகளான் வள்ளுவனாரும் வாழ்க்கையை மதிப்பிடுதலைக் காண்க.

இனி, ஒருவரது சிந்தையினாலும் வாழ்க்கை அளந்தறியப்படும் என்பதற்குரிய குறட்பாக்களைக் காண்பாம். ஊக்கமும், உயர்வுள்ளலும், ஒப்புரவறியும் ஆற்றலும் உடையவரே வாழ்கின்றார் எனத் தக்கார் என்பது வள்ளுவனார் கருத்தென்பதை

"உரமொருவற்குள்ள வெறுக்கை அஃதிலார்
மரம் மக்கள் ஆதலே வேறு"
"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"
"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்னும் குறட்பாக்களால் உணரலாம். ஆக்கம் தரும் ஊக்கம் ஒருவரிடத்து இல்லையானால், அவர் மரத்தோடு பொதுத்தன்மை பொருந்தியவரே யன்றி மக்கட் பண்புடையர் ஆகார். மரமேனும் பழ முதலியன வழங்குகின்றது; வீடு, படகு, தேர், கோயில், கல்லூரி முதலியன அஃமக்கப் பயன்படு கிறது. ஊக்கமிலா ஒருவரோ அம்மரம் தரும் பய னும் தாரார் ஆதலின், மரத்தினும் இழிந்தார் அல்லரோ? மரம் மர வடிவுடையதாயிருத்தலும், இவர் மனிதத்தோல் போர்த்தியிருத்தலுமன்றி வேறு என்னே இவர் தம்முள் வேற்றுமை?

அங்ஙனம் ஊக்கமுடையார் ஊக்குவதெல்லாம் உயர் பொருள்களின் பொருட்டாயின் அஃது ஓர் ஏருடைத்து. தமது நிலையின் மேன்மேலுயர்த்து நிற்க விழையும் ஒவ்வொருவரும் குறிக்கோளை உய ரியதாக அமைத்துக் கொள்வதால் வருவது பெருமையே யொழிய வேறன்று. சுண்டெலியைப் பிடித்திடுவதிலும் ஆளியொடு பொருது அடலின்றி மீளல் தாழ்ந்ததேயோ? கைகூடுவது *சிறியதேயா யினும் கைகூடாப் பெரியதினும் சிறந்ததேயன்றோ என வினவுவார் இருப்பர். ஒவ்வொருவரது முயற் சியும், நினைப்பும், செயலும் எல்லாம் ஒன்று

சேர்த்து வெற்றி அறியப்படுமேயன்றிச் செயலொன்றினுல் அன்று என்பதை மனத்தில் முதற்கண் நிறுத்தல் வேண்டும். எதை வென்ருர் என்ற விஞ எழுமுன், எத்துணை இடுக்கணைப் பொடியாக்கி வென்ருர் என்றும், எத்தகைய முயற்சியால் வென்ருர் என்றும் கேட்டல் பெரியோர் இயல்பு.

"முயல்க, நன்ருக முயல்க; சிறந்ததில் முயல்க; மிகச் சிறந்ததில், மிகமிகச் சிறந்ததில் முயல்க. வெற்றியென்பது ஒரு பொருளன்று; முயற்சியே எப்பொருளும்" என்று இராபர்ட்டு பிரௌனிங்கு என்ற பெரியார் உரைத்திருக்கும் உயர்மொழியை வள்ளுவர்தம் திருக்குறள் மொழியோடு இணைத்துப் பொன்னெழுத்துக்களால் வெள்ளித்தகட்டிற் பொறித்து வைத்துச் செயற்படுத்த முற்படுதல் எவ்வளவு நல்லது!

உலகம் எங்ஙனம் நிகழ்கிறது என்றறிந்து அங்ஙனம் நடத்தலை மேற்கொள்ளாதவருக்கும் செத்தாருக்கும் பெரியதோர் வேறுபாடில்லை. செத்தவர் அறிதலுமில்லை, செயல்புரிதலுமில்லை; இருவரும் அறிவிருந்தும் அறிகின்ருரில்லை, செயல் புரியும் ஆற்றல் இருந்தும் ஆற்றுகின்ருரில்லை. அதனுல், இவர் உயிர்ப்பிருந்தும் அவிந்தாருள் வைத்து எண்ணப்படுவரேயன்றி வாழ்வோர் எனப்படார்.

மேல், செயல்கொண்டு உயிர்வாழ்தல் உய்த்துணரப்படுகின்றது என்ற உரைக்குப் பொருந்திய வள்ளுவர் கூற்றினை நோக்குவாம். கல்வி, கேள்வி, கற்றவற்றைச் சொல்லுந்திறன் ஆகிய இவற்றை

யுடையவரே வாழ்கின்றவராவர் ; அல்லாதார் இருந்தும் உலகிற்கு யாதோர் பயனின்மையின் இல்லாதவரே என்று இயம்புகின்றார் திருவள்ளுவர். கல்லாதவனுக்கும் களர்நிலத்துக்கும் ஒப்புமை சுட்டுகின்றார் அவர். களர்நிலத்தைப் போற்றுவார் இல்லாதவாறேபோலக் கல்லாதவரை நன்கு மதிப்பாரும் இல்லை. களர்நிலம் பிறர்க்கு உணவு முதலாயவற்றை உதவாதவாறேபோலக் கல்லாத மாக்களும் பிறர்க்கு அறிவு' முதலானவற்றை உதவ மாட்டார். பின் என் பயன் உலகுக்கு அவராலே? ஒரு சிறிது பயனுள்ளதெனினும், அப்பயன் விலங்கினால் விளைவதினும் வேறன்றே? அன்றியின், கல்லாத நல்லாரை மக்கட்குழுவில் வைத்து எண்ணுவது எங்ஙனமாம்? மகனாதல் மகளாதல் வாழாத ஒருவரை வாழ்வதாகச் சொல்லுவது எப்படி?

அவிச்சுவையன்றிக் கவிச்சுவை அறியா வாயினையும், நல்ல பொருள்களைக் கேட்டுக்கேட்டுத் துளைபடா இரண்டு ஓட்டைச் செவிகளையும் உடையவர் இருந்தால் உலகத்தார் பெறுவதும், இறந்தால் இழப்பதும் இல்லையெனச் சற்றுக் கடுமையாகவே திருவள்ளுவர் உரைத்திருக்கின்றார். அதனை,

> " செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என் "

என்னும் அவர் மொழியான் அறிக. அங்ஙனமே, பயனில சொல்வானையும் அச்சொல்லைப் பாராட்டு

வாளையும் வாழ்கின்றாராகத் திருவள்ளுவர் மதிக்கின்றாரில்லை.

> " பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
> மக்கட் பதடி எனல் "

என்னுங் குறளான், பயனில்லாச் சொல்லைப் பெரிதும் மேற்கொள்வானை மகனென்று சொல்லற்க, மக்களுட் பதரென்றே சொல்லுக என்று அவர் உரைத்ததன் காரணம், அறிவிருப்பின் அங்ஙனம் செய்யாரென்றும், அறிவிலார் வாழ்கிறார் என்றல் ஏலாது என்றும் அவர் கருதியமையே ஆம். கல்வி கேள்விகளையுடையார் வாளா இருப்பின் பெரியதோர் பயனைத் தருகின்றாரில்லை. அவர் கற்றார்முன் தாம் கற்றவற்றைச் சொல்லும் வகையில் சொல்ல வல்லார் ஆகவேண்டும். இல்லையேல், தாம் புரிந்த கல்வி கேள்விகளாற் பயன்பெறாது, பிறரைப் பயனெய்துவிப்பதுஞ் செய்யாது கழிகின்றாராவர். அங்ஙனம் கழிகின்றவர் கல்லாதவரினுங் கடையரேயாவர். " கல்லாதவர் பயவாக் களரனையர் " என்பது முன்னரே காட்டப்பட்டதாகலின், அவரினுங் கடையார் களரினுங் கடையார் அல்லரோ ? இவற்றை யெல்லாம் உன்னியே திருவள்ளுவர்

> " உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
> களரனையர் கல்லா தவர் "

என்று கல்லாமை என்னும் அதிகாரத்தின்கண்ணும்,

> " கல்லாதவரிற் கடையென்ப கற்றறிந்து
> நல்லா ரவைஅஞ்சு வார் "

" உளரெனினும் இல்லாரோடு ஒப்பர்; களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார் "

என்று அவை யஞ்சாமை என்னும் அதிகாரத்தின் கண்ணும் உரைத்தார் என்றுணர்க. எனவே, கற்லுறம் கேட்டலும் கற்றவற்றைச் சொல்லலும் ஆகிய செயல் புரிவாரே வாழ்கின்றவர் ஆகின்ருர் என்பது வெளிப்படை. அறவினையைச் செல்லும் வாயெல்லாம் ஒல்லும் வகையான் ஓவாது செய்தல் வேண்டும் என்று வள்ளுவனர் வற்புறுத்துகின்ருர். ஆகலானும், அறத்தின் மிக்கதோர் ஆக்கமும் அதனை மறத்தலின் பெரியதோர் கேடும் மக்கட்கில்லை என்று அவரே அறைகின்ருராகலானும், கேடு என்பது அழிவு என்னும் பொருட்டு என்ப ஆகலானும், அறவினை செய்யார் அழிந்தாரேயன்றி உள்ளார் எனப்படார் என்பது ஊகித்தறியப்படும். எனவே, சிந்தை செயலுணர்ச்சிகளால் மக்கள் வாழ்க்கை உறுதி செய்யப்படுதலை உணர்தல் இயலும்.

3

திருவள்ளுவர் கருத்தின்படி பெரியாரும் சிறியாரும் யாவர் என்பதையும், அவர்தம் இயல்புஞ் செயலும் இன்னின்ன என்பதையும் அறிந்து கொள்ள முற்படுவதே இப்பகுதியின் நோக்கம்.

செய்தற்கு அருமையான செயல்களைச் செய்தலும், பொறையுடையராய் இருத்தலும், தருக்கில்லாமல் வாழ்தலும், பிறருடைய குற்றங்களைக் கூருமல் தவிர்த்தலும் பெரியாரின் பெற்றி எனக் கூறப்படும். முயற்சி பெரிதில்லாத மக்களாற்

செய்தற்கு அருமையான செயல்களைச் செய்வார் பெரியர் எனவும், அச்செயல்களைச் செய்ய இயலாதவர் சிறியர் எனவும் திருவள்ளுவர் கூறினுர்.

> " செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்
> செயற்கரிய செய்கலா தார் "

என்ற திருக்குறளைக் காண்க.

உண்ணு நோன்புடன் வாழ்ந்து தவம் இயற்றுகின்ருரைவிடப் பிறர் கூறுகின்ற கடுஞ் சொற்களைப் பொறுக்கின்றவர்கள் பெரியவர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து. தவம் இயற்றுகின்றவரோ வெயிலையும், குளிரையும், பனியையும், பிற இன்னுமைகளையும் பொறுப்போம் என உறுதி செய்துகொண்டு முயலுபவர்கள். ஆனுல், இல்லறத்தில் வாழ்கின்ற ஒருவனே தானென்றும் தனதென்றும் கருதிப் பற்றுள்ளம் செய்பவன். பிறர் கடுஞ்சொல் சொன்னுல் அவன் வெகுளும் இயல்பினன். அவன் வெகுளாமற் பொறுத்திருந்தால் பாராட்டுதற்கு உரியவன். அதனுல் அன்றே திருவள்ளுவர்

> " உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
> இன்னுச்சொல் நோற்பாரிற் பின் "

என்ருர் ?

உண்மையாகப் பெரியர் எனப்படுவோர் அவர் அமர்ந்திருக்கும் இடத்தை வைத்து மதிப்பிடப்படார் ; அவர் செய்யும் செயலைப் பொறுத்தும் அவர் உள்ளத்தின் உரத்தைப் பொறுத்தும் மதிப்பிடப்படுவர். அவ்வாறே சிறியவர்களும் மேலிடங்களில் உட்கார்ந்திருந்தாராயினும், அதுகாரண

மாக உயர்ந்தவர் எனக் கருதப்பட மாட்டார். பழிக்கத்தக்க இழிசெயலைச் செய்கின்ற ஒருவன் இழிந்தவன் என்றும், பிறரால் பாராட்டத்தக்க நற்செயலைச் செய்கின்ற ஒருவர் உயர்ந்தவர் என்றும் சொல்லப்படுவர். இழிசெயலைச் செய்து விட்டும் ஒரு நிவந்த ஆசனத்துள் ஒருவன் அமர்ந் திருப்பின், அவனை மேலோன் என நல்லோர் மதிக்கமாட்டார்கள். பிறரால் செய்வதற்கு அரிய உயரிய நல்ல செயலைச் செய்த ஒருவன் தாழ்ந்த இடத்துள் உள்ளான் எனினும், அவனை உயர்ந் தோன் எனவே நன்மக்கள் மதிப்பார்கள். இக் கருத்துக்கள்

" மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர் "

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்ற குறட்பாக்களில் அடங்கிக் கிடக்கக் காண் கின்றோம்.

குணங்களாலும் பிற சிறப்புக்களாலும் பெரிய ராய் உள்ளவர்கள் செருக்கின்றிப் பணிவுடையராய் இருப்பார்கள். குணங்கள் நிரம்ப இல்லாத சிறியரோ செருக்கித் தருக்கித் தம்மையே வியந்து தமக்கே பெருமையை ஏற்றிக்கொள்வர். இக் காரணங்களால்,

" பணியுமாம் என்றும் பெருமை - சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து "

என்றும்,

3650—8

> " பெருமை பெருமிதம் இன்மை ; சிறுமை
> பெருமிதம் ஊர்ந்து விடல் "

என்றும் செந்நாப்போதார் செப்பினர்.

பெரியாருடைய இயல்புகளில் இன்னென்று ஏனையோருடைய குணங்களைச் சொல்லிவிட்டுக் குற்றங்களை மறைப்பார் என்பது. ஆனல், சிறிய வரோ பிறர் குற்றங்களையே சொல்லி மகிழ்ந்து குணங்களை எடுத்துச் சொல்லாமல் மறைத்து விடுவார். இதனை விளக்க,

> " அற்றம் மறைக்கும் பெருமை ; சிறுமைதான்
> குற்றமே கூறி விடும் "

என்ற திருக்குறள் எழுந்தது.

கற்றுத் தேர்ந்த பெரியவர்களும், அறிவு நிரம்பிய பெரியவர்களும், ஞானம் முற்றிய பெரிய வர்களும் தம்மைக் காட்டிலும் பெரியராய் உள்ளார் தொடர்பினை விரும்பிப் பெற முயல்வார்கள். சிறியவரோ தம்மினும் மிக்காரிலை எனக் கருதித் தம்மையே வியந்துகொண்டு பிறரையும் வியப்பிக்க முயலுவர். அதனல்,

> " சிறியார் உணர்ச்சியுள் இல்லை ; பெரியாரைப்
> பேணிக்கொள் வோம்என்னும் நோக்கு "

என்பது கூறப்பட்டது. ஒருவன் தன்னைவிடப் பெரியவர்கள் தனக்கு உறுதுணையாக வாய்க்கும் படி நடந்துகொள்வான் ஆனல், அவன் பெறும் நலங்கள் பல. அறிவினுலும் ஒழுக்கத்தினுலும் உயர்ந்தவர்களைத் தனக்குத் துணையாகப் பெற்று வாழ்கின்ற ஒருவனைப் பகைவர்கள் அழித்து விடுதல் இயலாது. இவைபோன்ற கருத்துக்கள்

"பெரியாரைத் துணைக்கோடல்" என்னும் அதிகாரத்துள் உரைக்கப்பட்டுள்ளன.

ஒருவன் உயர்ந்தவனுவது அவனுடைய மன நலத்திஞல் ஆகும். "மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்". ஒருவன் மனத்திலே மாசற்றவனுய் ஒழுகுவாஞயின் அறத்திஞல் உயர்ந்தவனுய் மதிக்கப்படுவான். ஒருவனுக்கு மன நலத்திஞல் மறுமை கூட நல்லதாய் அமையும். ஆயினும், அந்த மன நலம் ஒரோவொரு வேளையில் வேறுபடுமாயின், அதனைத் தக்க வழியில் நிறுத்துதற்குப் பெரியார் தொடர்பு பயன்படும். அதஞல்தான்,

"மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து"

எனத் திருவள்ளுவர் செப்பிஞர்.

10. குறுந்தொகை

பழந்தமிழ்ப் புலவர்கள் பாடிய செய்யுட்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என மூன்று பெருந்தொகுதிகளாக அமைத்திருக்கக் காண்கிறோம். குறுந்தொகை அத்தொகுதிகளில், எட்டுத் தொகையில் அடங்கும். இதனை 'நல்ல குறுந்தொகை' எனப் பழமையோர் பாராட்டியிருக்கிறார்கள். இந் நூலில் நானூறு பாடல்கள் உண்டு. நானூறு பாடல்களையும் ஒரு வரே இயற்றவில்லை; பலர் இயற்றியுள்ளனர். வேலினையும், சேவற் கொடியினையும் உடைய முருகக் கடவுள் பாதுகாப்பதால், உலகம் இடையூ றின்றி இருக்கிறது என்ற கருத்தமைந்த கடவுள் வாழ்த்துச் செய்யுளை முதற்கண் வைத்து இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது.

இந்நூல் முழுதும் அகத்திணைச் செய்திகளே கூறப்படுகின்றன. காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபடும் இன்பமும், அவ் வின்பத் திற்கு இடையூறாய் இருப்பனவும், காதல்வெற்றி யும், இல்லற வொழுக்கமும் தலைவன் தலைவியிடைப் பிரிவும், பிரிவில் ஆற்றியிருத்தலும், பிரிவில் துயர முறுதலும், ஊடலும், கூடலும் ஆடவர் மகளிர் மனவுறுதியும் இந்நூலிற் கூறப்படும் சிறந்த செய்திகள். இதனுள் உள்ள பாக்கள் எல்லாம் நான்கு முதல் எட்டடிக்குள் அமைந்தவை. பதின் மூன்றடி முதல் முப்பத்தோரடி வரையில் அமைந்த

பாக்களைக் கொண்ட அகநானூறு "நெடுந் தொகை" எனக் கூறப்படுவதை நோக்கிக் குறுகிய அடிகளையுடைய இந்நூல் குறுந்தொகை எனப் படுவதாயிற்று. அளவில் இது குறுந்தொகை யாயினும், சுவையில் நற்றொகையாம். இது நற் றொகையாதலை இனிக் காண்போம்.

ஓர் ஆடவனை ஒரு மகள் காதலிக்கிறாள். மகள் காதல்நோய் உற்றிருப்பதை அறியாமல், பெண்ணின் தாய் குறிபார்த்துக் கடவுளுக்குப் பூசை போட நினைக்கிறாள். குறிசொல்லும் கட்டுவச்சி யைப் பார்த்து அப்பெண்ணின் தோழி 'அந்தப் பாட்டைப் பாடு, இன்னும் பாடு, அவர் மலையைப் பாடிய பாட்டை இன்னும் பாடு' எனக் கூறுகிறாள். பல மலைவளங்களைப்பற்றிப் பாடிய கட்டுவச்சி அப் பெண்ணின் காதலனுடைய குற்றத்தைப்பற்றி இப்பொழுது பாடினாளாக, அந்தப் பாட்டை இன்னும் பாடு என்று கேட்குந் தோழி தாயா ருக்குக் குறிப்பாகத் தெரிவிக்குஞ் செய்தி ஒன்று இப்பாட்டில் இருக்கிறது. அவர்தாம்·தன் அருமைத் தோழிக்குத் தலைவர்; அவராலேயே நோய் உண்டா யிருக்கிறது; அவ்விருவருக்கும் விரைவில் மணம் நடத்துக, வீணைகப் பலியிட வேண்டா என்ற குறிப்பினைத் திறம்படத் தோழி அறிவிப்பதுபோல ஔவையார் பாடியுள்ளார்.

"அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே,

இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

என்பதே அச்செய்யுள். அகவன் மகள் என்பவள் குறிசொல்லுங் கட்டுவச்சி. அவள் வயதுமுதிர்ந் தவளாய் இருந்ததால் நரைத்த கூந்தலே உடையவள். அந்த நரைத்த கூந்தலுக்குக் கூறிய உவமை அழகுடையது. அவள் கழுத்திற் போட் டிருக்கும் சங்குமணிக் கோவைபோல வெண்மையாய், அழகாய் அந்நரை இருக்கிறது என்பதைக் கூறுகின்ற தோழி 'மனவுக் கோப்பன்ன கூந்தல்' எனக் கூறுகிருள். "நரைத்த கூந்தலேயுடையவளே" என இகழ்ந்ததாகக் கட்டுவச்சி கோபிக்காமல் இருக்கும் பொருட்டு, அடுத்து "நல்ல நெடிய கூந்தலேயுடையாய்" எனக் கூறிவிடுகிருள். 'பாட்டி! அந்தப் பாட்டை இன்னுங் கொஞ்சம் பாடு, இன்னும் ஒருமுறை பாடு' எனத் தோழி கெஞ்சுகிற குறிப்பு பாட்டிலே காணப்படுகிறது. இளம் பெண்ணுயிருந்தால், நடுத்தர வயதுடைய பெண்ணுயிருந்தால், தான் பாடிய பாட்டை இன்ஞெரு முறை உடனே திருப்பிப் பாடத் தயங்குதல் இயல்பு. வந்த கட்டுவச்சியோ வயதுமுதிர்ந்தவள், பாடிய பாட்டினைத் திரும்பவும் பாட அருமை காட்டாதவள் என்பதைப் புலப்படுத்தவே, 'மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் அகவல் மகள்' எனக் கூறப்படுகிருள். இதைப்போன்ற அழகுடைய செய்யுள் பல குறுந்தொகையிற் காணப்படும்.

அக்காலக் காதலர் ஒருவரை ஒருவர் விட்டு

விடுதலை அறியார். தலைமகன் ஒருவன் 'கடல்சூழ் உலகத்தை நான் பெற்றாலும், இவளை விட்டு விடுதலை நினைக்கமாட்டேன்' என்கிறான். அவன் காதலியும் 'நிலம் புடைபெயர்ந்தாலும், நீர் நெருப்பாகி, நெருப்பு நீரானாலும் என் தலைவனை விடேன்' எனக் கூறுகிறாள்.

தலைவன் தலைவியைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போகிறான். அந்நேரத்தில், தலைவியின் தோழி தலைவனைப் பார்த்து, 'இவளை நன்றாகப் பாதுகாக்க வேண்டும்' என வற்புறுத்துகிறாள். "பெற்று அருமையாக வளர்த்த தாய்தந்தையரை விட்டு இவள் உன்னோடு வருகிறாள். நீ நல்லது செய்தாலும், கெட்டது செய்தாலும், உன்பால் வைத்த அன்பால் உன்னையே நம்பும் இவளைக் கைவிடாதே. அவளுக்குத் துயரம் நேரிட்டால் அதனை உன்னையன்றிப் போக்குவார் வேறு எவரும் இல்லை. ஆதலால், உன் வீட்டில் அவளை நன்றாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்," என்று வற்புறுத்த விரும்புகிறவள்,

"இன்னா செய்யினும், இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே"

எனக் கூறியதாக, அம்மூவனார் ஒரு செய்யுளிற் கூறியுள்ளார்.

தலைவனுடைய வீட்டிற்குப் போன பிற்பாடு ஒருநாள் தலைவி சமையல் செய்கிறாள். பக்குவம் கெடாமல் மோர்க்குழம்பை வைக்க விரும்பிய விருப்பத்தால் தயிரைப் பிசைந்த கை என்றும்

பாராது புதிய புடவையில் துடைத்துக்கொண்டு, தாளிப்பு வேலையைச் செய்து, துழாவி யெடுத்துத் தயிர்க் குழம்பைக் கணவனுக்குப் படைக்கிருள். அவனும், ‘இனிதாக இருக்கிறதே, இக்குழம்பு அமிழ்தம்’ எனக் கூறி உண்கிருன். அவள் முகத்தில் மகிழ்ச்சி நிலவுகிறது. இக் காட்சியை எல்லாம் அங்கு அப்பொழுது வந்து சேர்ந்த தலைவியின் தாய் அவ்விருவரும் அறியாமற் கண்டு மகிழ்கிருள்.

சில ஆண்டுகள் கழிந்தன. சில நாட்களாகத் தலைவன் வீட்டிற்கு வருவதில் காலந் தாழ்த்தான். தலைவிக்கும் தோழிக்கும் அவனிடத்திலே ஐயம் ஏற்பட்டது. ஒரு நாள் தோழி அவனைப் பார்த்து, “முன்னெல்லாம் தலைவி வேப்பங்காயைக் கொடுத்தாலும்கூட வெல்லக்கட்டி என்று பாராட்டினீர்! இப்பொழுதோ, குளிர்ந்த இனிய தண்ணீரைத் தந்தாலும் வெந்நீரெனக் கூறி வெறுக்கின்றீர்! உம் அன்பு இவ்வாறிருந்தது!” எனக்கூறி அவனை நல்வழிப் படுத்துகிருள் என்பதுபோல் ஒரு பாட்டு காணப்படுகிறது.

> “வேம்பின் பைங்காய் என்தோழி தரினே
> தேம்பூங் கட்டி என்றனிர்; இனியே,
> பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
> தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
> வெய்ய உவர்க்கும் என்றனிர்,
> ஐய! அற்ருல் அன்பின் பாலே!”

என்பதே அது.

“பல நாள் என்னேடு பழகினதால் நான் உமக்குப் புளிப்பு ஆனேன் போலும்! என்னை

வெறுப்பதாய் இருந்தால் என் தாய் வீட்டிலே கொண்டுபோய் விட்டுவிடுக" என்று கேட்க விரும்புகிருள் இன்னெரு தலைவி.

"நீர் நீடாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை யாயின்எம் இல்லுய்த்துக் கொடுமோ"

என்றதாக அப்பாட்டு வருகிறது. இத்தலைவி நீ கோபித்தால் நான் தாயார் வீட்டுக்குப் போவேன் என்று சொல்லவில்லை. எங்கள் வீட்டிலே கொண்டு போய்ச் சேர்ப்பாயாக எனக் கூறுகிருள். உய்த்தல் என்ற சொல்லிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தல் என்பது பொருள். வீடு வரையிற் கொண்டு போய் விட்டுவிட்டு உட்புகாமலே தலைவன் ஓடிவருதல் முடியாது. ஏனென்ருல், தலைவி 'இல்லுய்த்துக் கொடு' எனக் கேட்கிருள். ஆதலால், வீட்டிற் கொண்டுசேர்த்து என் தந்தையிடம் என்னை ஒப்படைப்பாயாக எனக் கூறுகிறவள் 'கொடு' எனக் கூறுகிருள். இதில் எத்துணை நயம் இருக்கிறது எனப் பாருங்கள்! தாய் வீடு போகிறேன் என்ருலே "போகாதே" எனத் தலைவன் தடுத்து விடுவான். ஆதலால், தலைவி தாய்வீடு போதல் இல்லை. 'கூட வா' என்றதால் உடன் செல்லுகின்றவன் தலைவியின் மனத்திலுள்ள கோபத்தை வழியில் மாற்றிவிடக் கூடும். ஆதலாலும், தாய் வீடு போதல் இல்லை. வீட்டிற் கொண்டுபோய் விடுத்த அளவே அல்லாமல், தலைவியின் தந்தையிடம் அவளைச் சேர்ப்பித்து வரத் தலைவன் கூசுவான், நாணுவான், அஞ்சுவான். ஆதலாலும்

தாய்வீடு போதல் இல்லை. எனவே, "எம் இல் உய்த்துக் கொடுமோ' என்று தலைவி கூறியது வெறும் மருட்டல். உண்மையில், தாய் வீடு திரும்ப அவளுக்கு ஆசையில்லை. கணவனுடன் இருக்கவேண்டும் என்பதே அவள் விருப்பம். ஆனால், கணவனைத் தன்வழிப் படுத்தவே இச் சொல் எழுகிறது. "எம் இல் உய்த்துக் கொடுமோ" எனக் கூறி என்னைத் தகப்பனாரிடம் சேர்த்து விட்டுத் திரும்புக, உமக்கு அங்கு .வேலையில்லை என்பாள் போல, "எம் இல்" என வைத்துப் பேசிய இதனை நினைக்குந்தோறும், "நவில் தொறும் நூனயம்போலும்" எனத் திருவள்ளுவர் எடுத்தாண்ட உவமையின் நயம் மனத்தைக் கொள்ளைகொள்ளுகிறது.

காமங் காரணமாகவே தலைவி தலைவனுடன் இருக்க விரும்புகிருள் என்பதன்று. காம நிகழ்ச்சி கள் இல்லாதபொழுதும் கணவனுடன் இருத்தலில் ஒரு தனி உவகை மகளிருக்கு உண்டு என்பது,

> "காமம் ஒழிவதாயினும்...........எம்
> தொடர்புந் தேயுமோ நின்வயி னானே"

என ஒரு பெண் கூறியதுபோலக் கபிலர் பாடிய செய்யுளால் விளங்குகிறது.

தலைவன் ஒருவன் பொருளீட்டி வருவதாகக் கூறிப் பிரிந்து போனன். அவன் இன்ன நாளில் வந்துவிடுவேன் எனக் குறிப்பிட்ட பிற்பாடே தலைவி அவன் போக இசைந்தாள். அந்த நாள் வந்துவிட்டது; தலைவன் வரவில்லை. சாதாரண தலைவி இவ் வேளையில் அவனைக் குறித்து ஏசுதல்

இயல்பு. ஆனால், குறுந்தொகையிற் காணப்படும் தலைவியோ அவனுக்கு யாதொரு இடையூறும் வரலாகாது என வேண்டுகின்றாள். இஃதன்றோ தமிழ்நாட்டுப் பெண்களின் பெண்மை, விரும்பப் படுந் தன்மை, பெட்பு எனச் சிறப்பித்துக் கூறப் படுவது! அவ்வியல்பினை யறிந்த கபிலர், " கடவுள் கொடியோரைத் தண்டிக்கும் என்பார்கள். என் தலைவர் இந்நாளில் வருவதாக உரைத்து வராததற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும். ஆதலால் அவர் கொடியர் அல்லர். என் முகத்தில் வாட்டம் என் இயல்பால் நிகழ்ந்ததே அல்லாமல், அவர் வராததால் விளையவில்லை " என்ற கருத்தை வைத்து ஒரு செய்யுள் செய்துள்ளார்.

இன்னொரு தலைமகன் மனைவியைப் பிரிந்து கடல்கடந்து போயிருக்கிறான். அவன் மனைவி எவ்வாறு ஆற்றியிருக்கிறாள் என்பதைப் பெருஞ் சாத்தனார் என்னும் புலவர் தெரிவித்துள்ளார். அவன் போயிருக்கின்ற நாட்டது கடலின் அலைகள் தலைவி இருக்கின்ற சிற்றூரின் முன்னிடம் வரையில் வந்து படுவதாலும், நெடுந்தொலையில் அவன் இருந்தாலும் தலைவியின் நெஞ்சிற்கு அணிமையில் இருப்பதாலும் அவள் வருந்தாது இருக்கிறாள் என்ற செய்தி,

" கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரும் என்ப நத்துறந்து
நெடுஞ்சேண் நாட்டார் ஆயினும்
நெஞ்சிற்கு அணியர் தண்கடல் நாட்டே "

என்ற செய்யுட்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது.

தம்மைப் பிரித்து வைத்திருக்கும் கடலிலேயே ஓர் ஆறுதல் காணுகின்ற திறம் இங்கே நோக்கத் தக்கது. அலைகள் ஆரவாரம் செய்வதைப் பார்த்து, "நீங்கள் என் கணவனைப் பிரித்து வைத்து ஏளனஞ் செய்கின்றீர்" என வெகுளாது, அங்குப் படும் அலைகளே இப்பட்டினம் வரை வந்து திரும்பியதால், "பிரிந்துள்ள தலைவர்க்கும் எனக்கு மிடையே ஒரு தொடர்பினைத் திரும்பவும் ஆக்கி யது அலையே" என அமைதிகொள்ளும் மனநிலை பாராட்டுதற்கு உரியது: இவைபோன்ற நய முடைய செய்யுட்கள் பலவற்றைக் குறுந்தொகை யிற் படித்து மகிழலாம்.

11. மணிமேகலை

மணிமேகலை புகாரின்கண் இந்திர விழா நாளில் ஆடல் பாடல் புரியவில்லையே என ஊரார் வருந்துகின்ற நிலையில் மணிமேகலைக் காப்பியம் தொடங்குகின்றது. அவளுடைய அன்னையாகிய மாதவியைப் பெற்றெடுத்த சித்திராபதியென்னும் மூதாட்டி, 'மாதவியும் மணிமேகலையும் ஆடல் பாடல் புரிந்து மகிழ்விக்காது நற்றவம் புரியலுற்றது நாணத்தக்கது' என்று ஊரார் உரைக்கும் அலரை அறிவிக்குமாறு மாதவி தோழி வசந்த மாலையை விடுக்கின்ருள். அவளும் சென்று அதனை உரைக்கக் கேட்ட மாதவி, "கணவனுக்கு உற்ற கடுந்துயரைப் பொருதவளாய் மதுரைப் பேரூரைத் தீயூட்டிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளாம் இவள் தவவழிச் செல்வளன்றி அவவழிச் செலுத்தப் படமாட்டாள். காதலன் உற்ற கடுந்துயரைக் கேட்டும் நான் போதல் செய்யா உயிரொடு நின்று புகழுரை இழந்து நாணைத் துறந்துள்ளேன்" என்று சொல்லி, நற்றவம் புரியலுற்றது நாணத்தக்கதன்று என்பதைக் குறிப்பால் அறிவிக்கின்ருள். காதலனுகிய கோவலன் மடிய நேர்ந்தது தன்மீது அவன் வைத்த காதலாற்போலும் என்ற எண்ணம் அவளை உறுத்திக் கொண்டிருந்தது போலும்! ஒத்த நல்ல குலத்திற் பிறந்த நேரிழை கண்ணகியை மணந்து அவளொடு இன்பமும் அன்புங் கனிய இல்லற வாழ்க்கையை இனிதின் நடத்தி வந்த கோவலனைப்

பிரித்தது தனது கணிகைக் கோலமன்றே ? அவன் ஊடுதற்குக் காரணமாய் இருந்தது தன் கணிகைக் கோலக் கானல் வரியன்றே? பொருளை எல்லாம் அவன் இழந்ததற்குக் காரணம் தன் கணிகைக் கோல வேட்கையன்றே ? இழந்த பொருளை மீட்க வேண்டுமென்றும் மதுரை சென்று வாணிகம் செய்ய வேண்டுமென்றும் கோவலன் மாட்டு எண்ணம் எழுந்ததற்குத் தன் கணிகைக் கோல ஊடலன்றே காரணம் ? கண்ணகி சிலம்பை முதற் பொருளாக்கி வாணிகஞ் செய்யும் நோக்கத்துடன் அவன் மதுரை மாநகர் புக்கதும், ஆண்டுச் சிலம்பு கவர்ந்த கள்வனென்று கொல்விக்கப்பட்டதும் தனது பழைய கணிகைக் கோலத்தால் விளைந்தன அல்லவோ ? கண்ணகி அருமைக் கணவனை இழந்த தற்கும் மதுரை மூதூர்ப் பாழாய்ப் போனதற்கும் தனது முன்னைய கணிகைக் கோலமன்றே காரணம் ? இங்ஙனம் எண்ணுகின்ற காரணத்தால் " வான் துயர் உறுக்குங் கணிகையர் கோலம் மணி மேகலையைக் காணு தொழிக " என நினைத்துத் தன் அருமை மகளை அருந்தவப் படுத்த உறுதி கொண்டுள்ளாள் மாதவி. மணிமேகலையுந் தாயொடு தனியிருந்து வருகிறாள்.

" மணிமேகலை பருவம் எய்திய பெண். அவள் அழகை ஆடவர் கண்டால் அகன்று போகார், நின்று பார்ப்பர் ". அவளைத் தனியே புகார் நகர வீதியிலே விடுதலாகாது. ஆதலால் தானும் அவ ளுடன் செல்வதாகச் சுதமதி என்னும் தோழி யுரைக்கின்றாள். இஃது எப்பொழுதோவெனின்,

வசந்தமாலையிடம் மாதவி பேசிக் கொண்டிருந்தக் கால், காதலனுற்ற கடுந்துயர் பொருளாய்க் கண்ணகி இழைத்தது இன்னதெனக் குறிப்பிட்டதைக் கேட்டு மணிமேகலை கண்ணீர் அரும்ப, அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலை தூத்தகையிழந்ததால் மலர்வனம் புக்கு வேறு மலர் கொண்டு வருக என மாதவி கூறியபொழுது என்க. எனவே, இப்பொழுது மணிமேகலை மலர்வனம் நோக்கிச் சுதமதியோடு போவதைப் பார்க்கிறோம். இவளை அருந்தவப் படுத்திய தாயோ கொடியள் தகவிலள் என்பார் ஒரு பக்கம்; அம்மலர் வனத்தில் உள்ள அன்னங்கள் இம்மடந்தையின் நடை வல்லுந கொல்லோ என்பார் ஒரு பக்கம்; அவணுள்ள மாமயில்கள் இவளது சாயல் கற்பன கொல்லோ என்பார் ஒரு பக்கம்; அங்குள்ள பைங்கிளிகள் இவளுடைய இன்கிளவிக்கு இசையா என்பார் ஒரு பக்கம். இங்ஙனமாக மணிமேகலை மெல்ல நடந்து உவ வனத்தினுள்ளே புகுந்தாள்.

பூம்புகாரின் அரசனுடைய மகன் உதய குமரனென்பான் குருகுபெயர்க் குன்றம் கொன்றோன் அன்ன முருகச்செவ்வி யுடையவன், தேரூர்ந்து செல்பவன், மணிமேகலை மலர்வனம் புக்க செய்தியை எட்டிக்குமரன் என்பாணல் அறிந்து அவளைத் தன் அணித்தேரில் ஏற்றி வருவதாக உரைத்துப் புறப்படுகின்றான். வருந் தேரொலி கேட்டு அஞ்சும் மணிமேகலையைப் பளிக்கறையில் சுதமதி புகுத்துகின்றாள். உதயகுமரன் பகல் முளைத்தது போல் தோன்றி " மாதவர் உறைவிடம் நீங்கி

மணிமேகலை தமியளாய் ஈண்டுற்ற தென்" எனச் சுதமதியைக் கேட்க, அவளும் அவனுக்கு விடை இறுக்கின்றவள், மக்கள் யாக்கையின் இழிவை அறிவுறுத்துகின்ருள். இங்ஙனம் உரையாடிக் கொண்டிருக்கின்ற பொழுது மணிமேகலையின் உருவம் பளிங்கினூடே தோன்றிட, உதய குமரன் பளிங்கு மண்டபத்தைத் தடவிப் பார்க்கிருன். வாயில் யாதென அறிகிலன் ஆதலின் "எத்திறத் தாள் இளங்கொடி ?" எனச் சுதமதியை வினவ, அவள் "நின் முருகச் செவ்வியை முகந்து தன் கண்ணுல் பருகாள்; அவள் காமனைக் கடந்த வாய்மையள்; ஊழ்தரு தவத்தள்; சாபசரத்தி" எனக் கூறுகிருள். அவன் "காமங் காழ்கொண் டால் நிறையும் உண்டோ" என்றும், "அவளைச் சித்திராபதியால் அடைவேன்" என்றும் சொல்லிக் கொண்டு போகிருன்.

அவன் அவ்விடம் விட்டு நீங்கிய பிற்பாடு மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளிப் போந்து, "புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்; இதுவோ அன்னாய் காமத்தியற்கை", எனச் சுதமதியிடம் சொல்லி நின்ற எல்லையுள், மணிமேகலா தெய்வம் ஆண்டுத் தோன்றிச் சுதமதிபால் உற்றது வினவியறிந்து, "அரசிளங் குமரன், அறத்தோர் வனமென்று இப்பொழுது அகன்ருனாயினும், மணிமேகலை மீது தணியாக் காதலன் ஆதலின், புறத்தே வீதியிற் பொருந்து வன்; நீவிர் சக்கரவாளக் கோட்டம் புக்குக் கங்குற் பொழுது தங்கினுலுங் கேடுருது" என்று மொழி

கிறது. இருவரும் அவ்வாறே புக்குக் களைப்பினுல் துயில, அத்தெய்வம் மணிமேகலையை முப்பது யோசனைக்கு அப்பாலுள்ள மணிபல்லவத் தீவிடை கொண்டு சேர்க்கின்றது. மணிமேகலை அத்தீவில் துயில் எழுந்ததும் சுதமதியைக் காணுது வருந்தி, தன் ஊருங் கிளையும் ஒருவருங் காணப்பட வில்லையே எனக் கலங்கி விஞ்சைமகள் வஞ்சம் செய்தனளோவென மயங்கி, அத்தீவெங்கும் திரிந்து, கூந்தல் குலைந்து பின்னே வீழும்படி அரற்றிக் கூவியழுது ஏங்குகின்ருள். தந்தையை உள்ளி ஐயாவோ என அழுகின்ற அவள் முன்னர்ப் புத்தபீடிகை தோன்றுகிறது. தலைமேற் குவிந்த கையளாய்க் கண்ணீர் உகுத்து மும்முறை வலம் வந்து வணங்கி யெழுவோள், தன் பழம் பிறப்பை வழுவின்றி யுணர்கின்ருள். தன் முற்பிறப்புக் கணவன் யாண்டுளனே என அறிய வேண்டும் என்னும் அவாவோடு அவள் ஏங்கும் எல்லையுள் மணிமேகலா தெய்வம் வந்து புத்த பீடிகையை வணங்கியெழ, அத்தெய்வத்தை வணங்கி மணி மேகலை தன் கணவன் யாண்டுளன் எனக் கேட் கிருள். அதுவும் அவனே இப்பிறவியில் உதய குமரனுயுளன் என்பதை யறிவித்து, அவன்பால் அவள் உள்ளஞ் செல்வதைத் தடுப்பதற்கும், அவளைத் தக்கவழியில் செலுத்துதற்குங் கருதியே ஆங்குக் கொணர்ந்ததாகத் தெரிவிக்கிறது. மேலும், அவள் பிறப்பறுத்திடுதல் திண்ணமென்று சொல்லி அதற்குரிய வழியில் முயலுகவென மொழிந்து, வேற்றுருவெய்தவும் அந்தரத்து

3650—9

இரியவும் அரும்பசியறுக்கவும் உரிய மந்திரங்களைக் கொடுத்து அந்தரம் எழுந்து நெடுந்தெய்வம் நீங்குகிறது.

அத்தீவில் உள்ள வெண்மணற்குன்றம், தண் மலர்ப் பொய்கை, விரிபூஞ்சோலை ஆகியவற்றைப் பார்த்துக்கொண்டு மணிமேகலை சுற்றி வருகின்ற நேரத்தில், புத்த பீடிகையைப் பாதுகாக்கும் தீப திலகை என்பாள் வந்து தோன்றி, "யார் நீ" என்னவும், மணிமேகலை போய பிறவியிலும், ஆய பிறவியிலும் தான் யாவள் என்பதை அறிவிக்கிருள். தீவதிலகை அங்குள்ள பொய்கையில் ஆண்டிற் கொருநாள் அமுத சுரபி என்னும் மா பெரும் பாத்திரம் வந்து தோன்றுகின்ற வாற்றைக் கூறி, அந்நாள் அப்பொழுதே; அப்பாத்திரம் அன்று தோன்றும் என்றும், ஒருகால் மணிமேகலைக்குக் கிடைக்குமென்றும் கூறி அவளை அவ்விடம் அழைத்துச் செல்ல, மணிமேகலை அப் பொய்கையை வலஞ் செய்து நிற்க, பாத்திரம் எழுந்து அவள் செங்கையிற் புகுகிறது. பெற்ற பைந்தொடி மாத்திரையின்றி மன மகிழ்வு எய்திப் புத்ததேவனைப் பரவ, தீவதிலகை பாத்திரத்தின் பெற்றியை மணிமேகலைக்குக் கூறி, அதன் முழு வரலாற்றைப் புகார் நகர அறவணவடிகள்பால் கேட்டறிக என உரைக்கின்ருள்.

மணிமேகலையை உவவனத்திற்கு அனுப்பிய மாதவி, மகள் வந்திலளே என வருந்திக் கொண்டிருக்கும் வேளையில், சுதமதி வந்து, தானும் மணிமேகலையும் சக்கரவாளக் கோட்டம் புகுந்த

வரலாற்றையும், ஆண்டுத் துயிறுலுங்கால் மணிமேகலையை மணிபல்லவத்திற் கொண்டு சேர்த்துத் தன்னைத் துயிலெழுப்பி மணிமேகலை பண்டைப் பிறப்புப் பண்புற உணர்ந்து இன்னம் ஏழு நாளில் வருவாள் என்று மணிமேகலா தெய்வம் சொல்லிய செய்தியையும், தான் கந்திற் பாவையால் தனது பழம் பிறப்பையும், மாதவியின் பழம் பிறப்பையும் உணர்ந்த செய்தியையும், தானும் மாதவி மணிமேகலையாகிய தையலார் இருவரும் முற்பிறப்பில் வீரை, தாரை, இலக்குமி என்னும் பெயரொடு உடன்வயிற்ருேராய் இருந்த செய்தியையும் தெரிவித்து உயிரிழந்த யாக்கைபோல் இருக்க, மாதவி நன்மணியை யிழந்த நாகத்தைப் போன்று தனித் துயர் உழக்கின்ருள். பின்னரும், ''ஏழுநாள் வந்தது, என்மகள் வரவில்லையே'' என மயங்கிக் கொண்டிருக்கும் மாதவி முன்பு பிறப்புணர்ந்து மந்திரம் அறிந்து பாத்திரம் பெற்ற மணிமேகலை வந்து தோன்றுகின்ருள். அவ்விருவரையும் அறவணவடிகளிடம் அழைத்துச் செல்லுகிருள். அறவணவடிகளும் மாதவி, சுதமதி ஆகியோரின் பழம்பிறப்பு வரலாற்றை அறிவித்தபின், புத்ததேவன் புகழைக் குறித்துப் பேசுகின்ருர். பசிப்பிணி தீர்த்தலாகிய பேரறத்தின் பெருமையை விளக்கப் புகுகின்ருர். மணிமேகலை பெற்ற பாத்திரத்தின் பழைய வரலாற்றையும் அதனை முன்னர் ஏந்திய ஆபுத்திரன் என்பான் வரலாற்றையும் உரைக்கின்ருர். உரைத்தபின், பசியுற்ருேர் யாவரையும் மணிமேகலை அந்த அறவோட்டிலிருந்து

ஊட்டவேண்டுமென்று பணிக்கின்றார். அவளும் பிக்குணிக் கோலத்திற் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவளாய்ப் பெருந்தெருவை அடைய, மக்கள் பலர் இவள் இக்கோலம் கொண்டாளே எனச் சிந்தை நோய்கூர்ந்து நிற்க, காய சண்டிகை என்னும் ஒரு விஞ்சைமகள் யானைத் தீப் பசியுடையாள் ஆதிரை என்னும் கற்பரசியிடம் முதற் பிச்சை பெறுக எனக் கூறுகின்றாள்.

மணிமேகலை கற்பரசி ஆதிரைபால் பிச்சை பெற்றுக் காயசண்டிகையின் பொல்லாத் தீப் பசியைப் போக்கி, சக்கர வாளக்கோட்டத்தில் உள்ள உலகவறவியுட் புகுந்து அங்குப் பசி தின்ன வருந்திய பைதன் மக்கள் எல்லாரையும் வம்மின் என அழைத்து ஊட்டுகின்றாள்.

மணிமேகலையை மலர்ப் பொழிலிற் கண்டு சித்திராபதியால் அவளை அடைவேன் எனக் கருதித் திரும்பிய உதயகுமரன் உறுதுயர் எய்திப் படுக்கையில் இருந்தோன் உறங்கானாய்க் கங்குல் கழியின் அவளைக் கையகப்படுத்துவேன் என நினைத்திருக்கின்றான். மணிமேகலையை மணிபல்லவத் தீவிற் சேர்த்துவிட்டு மணிமேகலா தெய்வம் இடையிருள் யாமத்தில் அவன் முன்னர்த் தோன்றிக் கோனிலை திரிந்திடில் யாவுங் கேடுறும் என்றும் தவத்திறம் பூண்டாள் மேல் வைத்த அவத்திறம் ஒழிக என்றும் அறிவுறுத்துகின்றது. அவனும் தெய்வங் கொல்லோ திப்பியங்கொல்லோ என ஐயுற்று அதிசயத்தோடு இருந்து வருகிறான்.

இப்படி நாள் சில செல்ல, மணிமேகலை பாத்

திரம் ஏந்தி உலக அறவியுட் புக்காளாக, அவளுடைய பாட்டி சித்திராபதி கொதித்த உள்ளத்தோடு விதுப்புறு நெஞ்சினளாய் வெய்துயிர்த்துக் கலங்கி, மணிமேகலை செயல் தகாதெனக் கூத்தியல் மகளிர்க் கெல்லாங்கூறி, மணிமேகலையை உதயகுமரன் பொற்றேரில் ஏற்றிச் செல்லும்படி செய்வதாகச் சூளுரைத்து, இளங்கோ வேந்தன் உதயகுமரனுடைய இருப்பிடம் குறுகுகின்ருள். பளிங்கிளுல் செய்யப்பட்ட மண்டபத்திலே தூமலர்ப் பள்ளியின்கண் இருமருங்கும் தோகையர் சாமரை கொண்டு வீச வீற்றிருக்கின்ற உதயகுமரனுடைய அடிபணிந்து சித்திராபதி நின்றேத்த, உதயகுமரன் “மாதவி மணிமேகலையரின் தாபதக் கோலந் தவறின்ருே” எனக் கேட்கிருன். அவளும் மணிமேகலை பாழம்பலம் புக்கதையும் உதயகுமரன் அவளைப் பெறவேண்டுமென்பதையும் குறிப்பாகத் தெரிவிக்கின்ருள். தன் கலக்கம் தவிர்க்கத் துணை பெற்ருன்போல் சிறிது நேரம் மகிழ்ந்து, மணிமேகலைமேல் மனம் வைத்த தனக்கு நள்ளிரவில் ஒருநாள் தெய்வம் வந்து செங்கோல்காட்டி அவள்திறம் மறக்க எனக் கூறிச் சென்றதைக் கூறி வியக்கின்ருன். அப்பொழுது சித்திராபதி சிறுநகை எய்தி, “மணிமேகலை பத்தினிப் பெண்டிர் குலத்திலே தோன்றினவள் அல்லளாதலால், அவள் படிற்றுரையை அடக்கி அவளைப் பான்மையிற் பிணித்தலன்ருே கோன்முறை?” எனக் கூறின உடன் உதயகுமரன் உள்ளம் பிறழ்ந்து தேர்மேல் ஏறி மலர்வனம் புகுந்து

பாத்திரம் ஏந்திய பாவையைக் காண்கின்றான். "நல்லாய்! என்கொல் நற்றவம் புரிந்தது? சொல்லாய்" எனக் கேட்கின்றான். மணிமேகலை அவன் தன் பழம் பிறப்புக் காதலன் என அறிந்துளாள் ஆதலின், அடிவணங்கி, "மக்கள் யாக்கை இடும்பைக் கொள் கலம் என்று உணர்ந்து தவநெறியை விரும்பி யுள்ளேன்" என உரைக்கின்றாள். உரைத்துவிட்டு, உலகவறவியிலுள்ள சம்பாபதிக் கோயிலுள் மடக்கொடி புகுந்து மந்திரமோதி, காயசண்டிகை என்னுங் காரிகை வடிவில் வந்து தோன்றுகிறாள். உதயகுமரன் அவளைக் காயசண்டிகை எனவே கருதி, மணிமேகலை யாங்கொளித்தனள் கொல்லோ என ஏங்கி, மணிமேகலையை விட்டு விட்டுப் போகேன் என்றும், பன்னாளாயினும் பாடுகிடப்பேனென்றும் சம்பாபதியை நோக்கி மும்முறை வணங்கிச் சூளுரைக்கின்றான். "நாடாது துணிந்து நா நல்கூர்ந்தாய்" எனச் சித்திரப் பாவையொன்று செப்பவும், உதயகுமரன் உள்ளங் கலங்கி, "இவையெல்லாம் வியப்பினை விளைக்கின்றன. மணிமேகலை செய்தியில் இவற்றை எல்லாம் பின்னறிவாம்" என்று பெருமூச்செறிந்து பெயர்ந்து போகின்றான்.

காயசண்டிகை வடிவில் மணிமேகலை சிறைக் கோட்டம் சென்று, ஆங்குப் பசியுற்ற ஆருயிர் மக்கள் எல்லாம் கையகம் வருந்துமாறு கொடுத்து ஊட்டுகின்றாள். கண்ட காவலர் அரசன் முன் சென்று ஐயப்பாத்திரம் ஒன்றிலிருந்து சிறையிற் பலர் மக்களை அவளூட்டுகின்ற திறத்தை வியந்

துரைக்க, அரசனும் அவளை அழைப்பித்து அவள் திறம் வினவ, தெய்வம் தந்த திப்பிய பாத்திரத்தால் மக்களுக்கு உயிர்மருந்து நல்குவதாக அவளுரைக்க, வேந்தன் செயற்பாலது யாதென வினவ, சிறையிடத்தை இடித்து அங்கு அறவோர்க்காகும் கோட்டம் ஒன்று அமைக்க என அவள் வேண்ட, அங்ஙனமே ஆகுக என ஆக்குகின்றான் அரசன்.

இச் செய்தியைக் கேள்வியுற்ற உதயகுமரன் காயசண்டிகை வடிவில் பாத்திரம் ஏந்தி நிற்பவள் தன் நெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வியே என நினைந்து, அம்பலம் சென்று அவளைப் பற்றித் தனது பொற்றேரில் ஏற்றிவர எண்ணங்கொண்டு உலக அறவிக்குப் போகின்றான். அவ்வேளை ஆண்டு வருகின்றான் காயசண்டிகையின் கணவனாகிய காஞ்சனன். சாபம் ஒன்றினால் பன்னீராண்டு கழிபெரும் பசியுற்ற காயசண்டிகையைப் பிரிந்து போன இவ்விஞ்சை மகன் அவ்யாண்டு கழிந்ததறிந்து அவளையழைத்துப் போக வருகின்றான். அவளோ தீப்பசி மணிமேகலையால் நீங்கப் பெற்றுப் புகாரை நீங்கிச் சென்றுவிட்டாள். இதனையறியாத காஞ்சனன் காயசண்டிகைவடிவில் அம்பலத்துள்ள மணிமேகலையைத் தன் மனைவியென்றே கருதி, அவளொடு பழமைபாராட்டிப் பேசத்தலைப்படுகின்றான். மணிமேகலை அவனைப் புறக்கணித்து உதயகுமரன் அருகிற் சென்று, நரை மூதாட்டியொருத்தியைக் காட்டி இளமை நிலையாமையை அறிவுறுத்துகின்றாள். வந்த விஞ்சையனோ தன் மனைவி அயலான் ஒருவன்பால் நேயங்கொண்டு

தன்னை வெறுக்கிருள் எனத் தவருக நினைத்து வெகுளியொடு ஒருபுறத்தே ஒளிந்திருக்கிருன். உதயகுமரனே, வந்து பழமை பாராட்டிய இப் புதியவனோடு இவள் இன்றிரவு என் செய்கின்ருளென வந்தறிகுவன் என நீங்கி, பிறகு ஊர்துஞ்சு யாமத்தில் தனியாக வருகின்ருன்.

பதுங்கி இருக்கும் விஞ்சையனே பின்புறம் சென்று உதயகுமரனுடைய தோளைத் துணிக்கின்ருன். சம்பாபதிக் கோயிலிலிருந்த மணிமேகலை இச் செய்தியைக் கேள்வியுற்றதும் தன்னுருவில் வெளிப்போந்து, வெய்துயிர்த்துப் புலம்பி அழுது ஏங்குகின்ருள். இங்ஙனம் முடிகின்றது இவள் காதலின் கதை.

மணிமேகலையும் உதயகுமரனும் முதன் முறை சந்திக்கின்ற பொழுது, மணிமேகலை அச்சம் உடையாளாகக் காணப்படுகிருள். அவ்வச்சத்திற்குக் காரணம் தன்னைத் தாய் தவநெறிப் படுத்த நினைத்திருப்பதற்கு மாருக அவன் ஏதேனும் செய்து விடுவனே என்பது. அவனைப்பற்றி முன்னரே அவள் கேட்டுள்ளாள். அவள்மேல் அவன் உள்ளம் வைத்துள்ள செய்தியைச் சித்திராபதியிடம் அவன் ஒரு நாள் கூறினதாக வசந்தமாலை மாதவிக்குத் தெரிவித்திருக்கிருள். தெரிவித்தகாலை மணிமேகலையும் உடனிருந்தாள் ஆதலின் அதனை அவள் அறிவள். எனவே, பிறர்க்கரிய உவவனத்தின் அருகே தேர் வர, அத்தேரொலி அவன் தேரொலியே போலும் என மணிமேகலை நினைத்து, ''என்செய்க'' எனச் சுத

மதியை அஞ்சிக் கேட்க, அவளும் இவளைப் பளிக் கறையில் புகுத்துகின்றாள். இவளுருவைப் பார்த்து உதயகுமரன் வியந்து பல உரைக்கின்றான். இவளோ சொல்லொன்றும் உரைக்கவில்லையாயி னும், புன்முறுவல் பூக்காது செல்லவில்லை. இச் செய்தி, பின்னர்ச் சித்திராபதியோடு உதயகுமரன் உரையாடுங்கால் வெளிப்படுகிறது. அவன் சித்திரா பதியிடம் பின்வருமாறு கூறுகின்றான் :—

“ மேவிய பளிங்கின் விருந்திற் பாவை இஃது
ஓவியச் செய்தியென்று ஒழிவேன் முன்னர்
... ...
அருந்த ஏமாந்த ஆருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூரல் அரும்பியது.”

பளிங்கினுட் காணப்பட்ட மணிமேகலையின் உருவம் ஓவியமே போலும் எனக் கருதி உதய குமரன் நீங்கும் எல்லையுள், அவளுடைய காந்தளஞ் செங்கை சிறிது அசைந்ததையும் பவளவாய் மூரல் அரும்பியதையும் அவன் கண்டதாக உரைக் கின்றான். பளிக்கறையினுள்ளே இருந்த துணிவி னால் மணிமேகலை மூரல் அரும்பியிருக்கக் கூடும். அவனை எள்ளுதற் பொருட்டு அங்ஙனம் செய் தனள் எனக் கூறுதல் ஒண்ணாது. ஏனெனில், தன் மனம் அவன்பின் சென்றது என அவளே சுதமதிக்கு அறிவிக்கின்றாள். உதயகுமரன் திரும் பிப் போனபின், சுதமதி பளிக்கறை திறந்தாளாக, அவள்பால் மணிமேகலை கூறியது யாது?

“ புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை”

என்பது அன்றோ? பின்னரும், உதயகுமரன்

காஞ்சனன் வாளால் துணிந்து கிடப்ப, அவள் வருந்திக் கிடக்கின்ருள்:

"உவவன மருங்கில் நின்பா லுள்ளம்
தவிர்விலேன் ஆதலின் தலைமகள் தோன்றி
மணிபல் லவத்திடை என்னையாங் குய்த்து"

என்பதால் இதனை அறியலாம்.

அவள் சிந்தை சிறிது திரிந்ததாலே மணிமேகலா தெய்வம் அவளை அப்புறப் படுத்திற்று. அவள் பண்டைப் பிறப்பு உணர்ந்த பிற்பாடு இதனை அத் தெய்வம் அவளுக்குத் தெரிவித்திருக்கிறது. அது கூறியதாவது,

"ஆங்கவன் அன்றியும் அவன்பால் உள்ளம்
நீங்காத் தன்மை நினக்கும் உண்டாகலின்
...................................உன்னையோர்
திறப்படற்கு ஏதுவாய்ச் சேயிழை செய்தேன்"

என்பது.

இங்ஙனம் அவளது உள்ளம் அவன்பாற் சென்றதற்குக் காரணம் உதயகுமரன் பழைய பிறவியில் அவள் கணவனுய் இருந்தமைபோலும்! பழம் பிறப்புணர்ச்சி மாத்திரம் பெற்ற அளவில் நின்று தன்வழி நடக்க அவளுக்கு உரிமை உண்டாயின், அவள் உதயகுமரன் எண்ணத்திற்கு இசைந்திருப்பாள். ஆனால், அவள் தவநெறிச் செல்லவேண்டும் என்பதும், யாவருஞ் செல்லும் பொதுநெறிச் செல்லலாகாது என்பதும், அவள் புத்ததேவனுடைய திருவறம் எய்துதல் உறுதியென்பதும் அத் தெய்வத்தால் அவள்முன் வற்புறுத்தப்படுகின்றன. அவள் சிறந்த மண

முள்ள நெல்லின் பெருவித்துப் போன்றவள் என்றும், உதயகுமரனோடு ஒன்றும் வாழ்க்கை களர் நிலத்தின்கண் அவ்வித்தின் வீழ்ச்சி போன்றது என்றும் அத் தெய்வம் தெரிவிக்கிறது.

> " கந்த சாலியின் கழிபெரு வித்துஓர்
> வெந்துரு வெண்களர் வீழ்வது போன்மென
> அறத்தின் வித்துஆங்கு ஆகிய உன்னையோர்
> திறப்படற் கேதுவாய்ச் சேயிழை செய்தேன் "

என்ற பகுதியை நோக்குக.

பழம்பிறப்புணர்ச்சியினால் மணிமேகலை உதய குமரனிடம் வைக்கும் அன்பு வெளிப்படும் இடங்களும் உள. சித்திராபதியினால் தூண்டப் பட்டு அம்பலத்தில் வந்து புகுந்த அரசகுமாரன் " இவள் நற்றவம் புரியலுற்றது என்னை "? எனக் கேட்டு நிற்குந்தறுவாயில், மணிமேகலை தெய்வத் தின் சொல்லை நினைத்து அவனுக்கு விடைபகராது இருக்கின்றாள் அல்லள். முன்னைப் பிறவியில் அவனொடு கருத்தொன்றி ஆதரவு பட்டிருந்து அவன் இறந்தவுடன் தானும் இறந்த அவள் இப் பொழுது அவன் கேட்கும் வினாவிற்கு விடையும் பகராது இருத்தல் இயலுமோ? அவன் தன் பழைய நாயகன் என்ற உணர்ச்சி வந்தவுடன் அவனை வணங்கவேண்டும் என்ற எண்ணமே உண்டாகின்றது. இதனால் ஒருகால் நெஞ்சம் அறைபோய் அவன்பால் அணுகுமென்பதையும் அவனும் ஒருகால் தன் முன்கையைப் பற்றவும் பற்றுவன் என்பதையும் அவள் அறிந்தே இருக் கிறாள். இந்நிலையில் பழைய காதலனிடத்தில்

அன்பு ஒருபக்கம் உந்த, தெய்வத்தின் முன்மொழி மனத்தில் ஒருபக்கம் தோன்ற, நடுங்கி ஊசலாடு கின்ருள் நங்கை. கேட்ட விஞவிற்கு விடை இறுப் பதே தகுதியென முடிவுசெய்து அவனடி வணங்கித் தான் நல்லறம் செய்யத் தலைப்பட்டதற்குக் காரணம் இன்னதெனத் தெரிவிக்கின்ருள். இதனை நயம்படச் சாத்தனுர் பின்வரும் அடிகளில் வரைந் துளார் :—

“ என்னமர் காதலன் இராகுலன் ஈங்கிவன்
தன்னடி தொழுதலுந் தகவென வணங்கி
அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும்
இறைவளை முன்கை ஈங்கிவன் பற்றினும்
தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல்
நன்றி யன்றென நடுங்கினள் மயங்கிக்
கேட்டது மொழிவேன்...................

....
கேட்டனையாயின் வேட்டது செய்க என.”

உதயகுமரன் பழைய காதலன் என்பதனுல் மணிமேகலை அவனுடைய தாயையும் வணங்கு கின்ருள் ; அவளது வெவ்வினையைத் தீர்க்க முயலு கின்ருள் எனின், அவள் மன்னவ குமரனிடம் வைத்த அன்பு இத்தன்மைத்து என்பது புலப் படும். உதயகுமரன் வீழ்ந்தாஞகை, அரசன் அவளைச் சிறைப்படுத்திஞகை, அரசி வஞ்ச எண்ணங்கொண்டு அவளைச் சிறைவீடு செய்து துன்பம் பலவற்றிற்கு ஆளாக்க முயன்ருளாக, அப்பொழுதெல்லாம் அவள் மந்திரமோதி ஓடா திருந்ததற்குக்காரணம் தன் பழைய காதலனுடைய தாயை நன்னெறி உய்க்கவேண்டும் என்பதேயாம்.

இதனை அவளே பின்வரும் அடிகளால் அரசிக்கு அறிவிக்கின்றாள் :—

" மயற்பகை யூட்டினை, மறுபிறப்பு உணர்ந்தேன்
அயர்ப்பது செய்யா அறிவினேன் ஆயினேன்;
கல்லாக் கயவன் காரிருள் தான்வர
நல்லாய் ஆணுரு நான்கொண்டு இருந்தேன்
ஊணொழி மந்திரம் உடைமையின் அன்றோ
மாணிழை செய்த வஞ்சம் பிழைத்ததும்;
அந்தரஞ் சேறலும் அயலுருக் கோடலும்
சிந்தையிற் கொண்டிலேன், சென்ற பிறவியிற்
காதலற் பயந்தோய் கடுந்துயர் களைந்து
தீதுறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டால்."

மணிமேகலையின் மனம் பித்தேறுதற்கென மருந்து கொடுப்பித்தும், பழிச்செயல் புரிய ஆடவன் ஒருவனை அவள்மாட்டு ஏவியும், ஊணின்றிப் புழுக் கறையில் அவளை அடைப்பித்தும் பயனொன்றுங் காணாத அரசி, " என் மகனுக்கு உற்ற இடுக்கண் பொருது சிறுமை செய்தேன், பொறுக்க " என்று சொல்லித் தொழ, மணிமேகலை அதனைப் பொரு ளாய், " தகுதி செய்திலை, காதலற் பயந்தோய் " என மொழிந்து தொழுது ஏத்துகின்றாள் எனின், அவள் பழம்பிறப்புணர்ச்சியினால் உதயகுமரன் மாட்டு மட்டிலா அன்பு பெற்றிருப்பவள் எனக் கூறுவது புனைந்துரையாமோ?

அவ்வுழுவலன்பு வேறு வழியே செலுத்தப்படு கிறது. அவ்வன்பு காரணமாகவே உதயகுமர னுக்குப் பேரறிவு புகட்ட அவள் முற்படுகிறாள். தவநெறியை விரும்பியதற்குக் காரணம் யாதென வினவி நின்ற உதயகுமரனுக்குப் பிறப்பு, மூப்பு,

பிணி, சாக்காடு இவற்றையுடைய இடும்பைக்கு இருப்பிடமாகியது உடம்பெனத் தான் அறிந்தமை என்று கூறித் தன்னைப் போல அவனும் தவம் மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றாள். அதனைக் காண்க :—

“ பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன் ;
மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறிவு உண்டோ ?
கேட்டனை ஆயின் வேட்டது செய்க.”

அவனைக் காணும் நேரமெல்லாம் இதனைப் போன்ற நல்லுரை பகர்ந்து திருத்த அவளுக்கு எண்ணம் போலும்! இஃது அவள் இன்னொரு கால் அவனுக்கு அறிவுறுத்த முயல்வதாலும் வெளிப்படும். காயசண்டிகை வடிவில் தன் காதலியே ஓடு கொண்டு ஊட்டுகின்றாள் எனக் கருதி, அவளைப் பொற்றேரில் ஏற்றி வருவதாக உரைத்து, உலகவறவி புக்க உதயகுமரனுக்கு நரைத்துத் திரைத்த ஒருத்தியைக் காட்டி, அவளுடைய உறுப்புக்கள் இளமையிற் பெரிதும் பாராட்டப்பட்டவை இப்பொழுது வெறுக்கத் தக்கனவாயுள்ளவாற்றை அறியும்படியும், பெண்ணுடல் புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது என்பதை அறியும்படியும் வேண்டுகின்றாள். இங்ஙனம் கூறி அவனைத் தன்னைப் போலத் தவநெறி தலைப்படச் செய்யவே மணிமேகலை முயலுகிறாள்.

அறவணவடிகள்பால் கேட்ட அறவுரை எல்லாம் அவள் மனத்தில் நன்கு பதிந்துவிட்டனவாக, அவளைத் தவநெறியினின்று திருப்புதற்கு இந் நிலையில் உதயகுமரனாலும் இயலாது. எனவே, அவனையே தன்வழித் திருப்பி, தனது கருத்தின் படி நல்லறம் புரியும்படி செய்ய விழைகின்றாள் இவ்விழுமியோள்.

தடுமாறு பிறவியை விடுமாறு முயல்கின்ற அவள் அவன் பொன்றிக் கிடக்குங்கால், அழுது அரற்றி ஏங்கி நெட்டுயிர்த்து எழுந்து அவனுடம் பருகே செல்ல நினைக்கின்றாள். ஆனால், கந்திற் பாவை யென்னும் தூணில் நின்ற தெய்வத்தால் தடுக்கப்படுகிறாள்.

இதுகாறும் பார்த்தவாற்றால் மணிமேகலை உதயகுமரன்பால் காதலுள்ளம் உடையவள் என் பதும், அக்காதலை வளரவொட்டாது தடுத்தவை மணிமேகலா தெய்வத்தின் செயலுஞ் சொல்லும் என்பதும், நாளடைவில் அக்காதல் பேரன்பாக மாறிற்று என்பதும், அவ்வன்பு காரணமாக அவனை அவள் நல்வழிப்படுத்த முயன்றனள் என்பதும் தெளிவாகும்.

12. பதிற்றுப் பத்து

1. நூல்

பதிற்றுப்பத்து என்பது பத்துப்பத்து என்று பொருள்படும். பத்துச் சேர அரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பப்பத்துப் பாடல் களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. இது ஒரு தொகை நூல். இதனைத் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும் இன்னுரென்பது அறியப்படவில்லை. இஃது எட்டுத்தொகை நூல் களுள் ஒன்ருக எண்ணப்பட்டு வருகின்றது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித் தொகை, அகநானூறு, பரிபாடல், பதிற்றுப் பத்து, புறநானூறு என்ற எட்டுத்தொகை நூல்க ளுள்ளே பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப் பொருள்பற்றிப் பாடப்பட்டுள்ள செய்யுட்களானுன தொகை நூல்கள். இவ்விரு நூல்களும் பழங் காலத் தமிழக மக்களைப்பற்றியும் அரசர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெருஞ் சான்று களாக இருந்து வருகின்றன. புறநானூற்றிற் காணப்படும் பாடல்கள் கால வரிசைப்படி அமைக் கப்படவில்லையாயினும், பதிற்றுப்பத்திற் காணப் படுஞ் செய்யுட்கள் ஏறத்தாழக் கால முறைபற்றி அமைக்கப்பட்டிருப்பது போற்றுதற்குரிய செய்தி. ஆயினும், இந்நூலின் முதற் பத்தும் பத்தாவது பத்தும் இதுகாறும் கிட்டவில்லை. எனவே, எஞ்சிய எட்டுப்பத்துக்கள் மாத்திரம் நமக்குக் கிடைத் துள்ளன. இவற்றை டாக்டர் உ. வே. சாமிநாத

பதிற்றுப் பத்து

ஐயரவர்கள் 1904-ஆம் ஆண்டிலும், திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 1950-ஆம் ஆண்டிலும், நல்ல முறையில் பதிப்பித்துத் தந்துள்ளார்கள். இந்நூலுக்கு அமைந்ததொரு பழைய உரை உண்டு. அவ்வுரை பொருட் செறிவோடு திட்பமாக எழுதப்பட்ட தொன்றாகும். அதனை விரித்தும் விளக்கியும் அழகுபட யாவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் தந்த பெருமை திரு. ஔவை துரைசாமிக்கு உரியது. அவ்வெளியீடு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து வெளியீடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தில் இரண்டாவது பத்தில் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனாரும் மூன்றாவதுபத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பற்றிப் பாலைக்கௌதமனாரும், நான்காவது பத்தில் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப்பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாவது பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப்பற்றிப் பரணரும், ஆறாவது பத்தில் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப்பற்றிக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாவது பத்தில் செல்வக் கடுங்கோ ஆழியாதனைப்பற்றிக் கபிலரும், எட்டாவது பத்தில் பெருஞ்சேர லிரும்பொறையைப்பற்றி அரிசில்கிழாரும், ஒன்பதாவது பத்தில் குடக்கோ இளஞ்சேர லிரும்பொறையைப் பற்றிப் பெருங்குன்றூர்க் கிழாரும் பாடியுள்ளனர். முதல் பத்து உதியஞ்சேரல் என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும், பத்தாவது பத்து

3650—10

யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும் சிலர் கருதுகின்றனர். எண்மரைப்பற்றிப் பதிற்றுப்பத்திலிருந்து கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு பழங்காலச் சேரர் பரம்பரையினரின் ஆட்சி, காலஞ்சென்ற திரு. கனகசபைப் பிள்ளையவர்களாலும், திரு. கே. என். சிவராச பிள்ளையவர்களாலும், திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளையவர்களாலும் அறுதியிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய முன்னணி ஆராய்ச்சிகள் பாராட்டுந் தகையன.

இந்நூலின் துணையாக, சேர மன்னர்களுடைய நாட்டுவளம், அந்நாட்டு மக்கள் வாழ்க்கை, அரசர்களுடைய கொடைத்திறன், படைநலம், மனைமாட்சி முதலியவை அறியப்படுகின்றன.

2. நாட்டு வளம்

சேரநாடு பொதுவாகச் சிறந்த வளம்பெற்ற நாடு என்பது அறியப்படுகின்றது. அந்நாட்டில் நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நான்கு நிலத்துப் பொருள்களும் ஒருங்கே விளைந்து மலிந்திருந்த செய்தி இரண்டாவது பத்தில் குமட்டூர்க் கண்ணனாரால் கூறப்படுகிறது.

“ கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவு அறுபறியா முழவுமிழ் மூதூர் ”

என்று சேரநாட்டினைப்பற்றி அவர் கூறுகிருர். கடலில் விளைகின்ற பொருள்களும், மலையில் விளை

கின்ற பொருள்களும், ஆற்றில் கிடைக்கக்கூடிய பொருள்களும் அந்நாட்டுப் பொருள்கள் என்பதும், பிறநாட்டுப் பொருள்களும் அந்நாட்டிலே வந்து விலைக்குக் கிடைக்கப்பெற்றன என்பதும் அவரால் "கடலவும் யாற்றவும் பிறவும்" என்ற வகையால் கூறப்படுகின்றன.

இன்னொரு சேரனைப்பற்றிப் பாடிய புலவர் அவன் நாட்டு மகளிர் அவலை எறிந்து, உலக்கையை வாழை மரத்தின் கண்ணே சேர்த்தி வைத்துவிட்டு, வள்ளைப்பூக்களைப் பறிப்பதற்கு வ்யலில் இறங்குவார்கள் என்றும், அவ்வயல்கள் பருத்த கதிர்களினால் வளைந்துள்ள தாட்கள் சாய்ந்து கிடக்கும் தன்மையன என்றும் கூறுகிறார். இதனால் அறியப்படுவது நெல்வயல்களில் வள்ளைப் பூக்கள் மலிந்துள்ளன என்பதும், நெல்மணிகள் மலிந்துள்ளன என்பதும் ஆம். நெல்மணியின் பொறையினைத் தாங்கமாட்டாமல் தாள்கள் வளைந்து கிடக்கின்றன என்பதை "முடந்தை நெல்" என்பதனால் கவிஞர் தெரிவிக்கின்றார். அந்தப் பகுதி வருமாறு :

"அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல்" (III, 9 : 1–3)

அந்நாட்டில் எல்லாக் காலங்களிலும் கரும்பு விளைக்கப்படுகிறது என்பதும், அறுவடை செய்யப் படுகின்றது என்பதும் அக்கவிஞரால் கூறப்படு கின்றன.

"காலமன்றியுங் கரும்பறுத்து ஒழியாது" (III, 10 : 14) என்று கவிஞர் கூறுகிறர்.

3. மக்கள் வாழ்க்கை

அந்நாட்டு மக்கள் பிறர்க்குரிய பொருளை விழையாதவர்களாகவும் குற்றமில்லாத அறிவுடையவர்களாகவும், செம்மையினின்று வழுவாதவர்களாகவும், அன்பு நெறியைக் கடைப்பிடிப்பவர்களாகவும், பலரொடும் பகுத்துண்டு வாழ்பவர்களாகவும் கூறப்படுகிறர்கள். செயலாற்றுமல் வீணே மூத்துப்போன யாக்கையையும் நோயையும் இல்லாதவர்களாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் எனக் கூறப்படுகிறர்கள். அக்காரணத்தால் அவர்கள் பல விழாக்களையும் கூத்துக்களையும் கொண்டாடுதற்கு வாய்ப்புக்கள் பெற்றிருந்தனர். பதிற்றுப்பத்தில் பலவிடங்களில் குரவைக்கூத்தும், துணங்கைக் கூத்தும் விளங்க உரைக்கப்பட்டிருக்கின்றன. கூத்தாடு மிடத்தில் சுரை நிறைய நெய் சொரிந்து பெரிய திரியிடப்பட்டு நெடுவிளக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பது,

> "சொரிசுரை கவரு நெய்வழிபு உராலின்
> பாண்டில் விளக்குப் பரூஉச் சுடரழல
> நன்னுதல் விறலியர் ஆடும்." (V, 7 : 5–7)

என்ற விடத்துச் சொல்லப்படுகிறது. மருத நிலத்தில் மகளிர் இரவும் பகலும் தங்களுடைய பசிய அணிகலங்களைக்கூடக் களையாமல் செல்வக் களிப்பிறல் விளையாட்டினை விரும்பிக் குரவைக்கூத்து அயர்ந்தார்கள் என்று அரிசில்கிழார் கூறுகின்றர்.

4. கொடை

சேரநாட்டரசர்கள் கொடையாற் சிறந்தவர்கள். செல்வக்கடுங்கோ ஆழியாதன் என்பவன் பெரும் பொருள்களைப் பிறருக்குக் கொடுத்ததற்காக ஒரு நாளும் வருந்த மாட்டான் எனவும், கொடுக்குந்தொறும் மகிழமாட்டான் எனவும், கொடுக்கும் பொழுதெல்லாம் நிரம்பக் கொடுப்பான் எனவும் கூறப்படுகிறான்.

> "ஈத்தது இரங்கான்; ஈத்தொறும் மகிழான்;
> ஈத்தொறு மாவள்ளியன்" (VII, 1 : 12–13)

என்று சொல்லப்படும் நல்லிசையைக் கேட்டுப் புலவர் அவன் மாட்டு வந்ததாகக் கபிலர் பாடுகிறார். இந்த விடத்தில், அவன் நிரம்பக்கொடை கொடுத்ததனால் பொருள் செலவாயிற்று என்பதற்காக வருந்தான் என்பதும், இடையறாமல் கொடுத்து வருவதால் வரும் புகழ் நிரம்புவது காரணமாக மகிழ்ச்சி கொள்ளமாட்டான் என்பதும் பொதுவாகச் சொல்லப்படுகின்றன. ஆயினும், இதன்கண்ணே ஒரு சிறப்பு இருத்தலைக் காண்டல்கூடும். அவன் பிறருக்கு ஈகின்றான் எனினும், தன்னால் ஈயப்பட வேண்டிய நிலையில் மக்கள் சிலர் இருக்கிறார்களே என நினைத்து அவன் வருந்துகிறான் என்ற குறிப்பையும் வைத்துத்தான் கபிலர் "ஈத்தொறும் மகிழான்" என்றனர்போலும் என்று கருதுகின்றேன்.

பரணர், செங்குட்டுவனைப்பற்றிப் பாடிய பாட்டிலே அவன் பெற்ற பொருள்கள் பெரியன

ஆயினவே என்றும், அரியன ஆயினவே என்றும் கருதித் தனக்கே வேண்டும் என வைத்துக் கொள்ளாமற் பலருக்கும் விருப்பத்தொடு கொடுப்பான் என்ற செய்தியைப்,

“பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய வென்னாது ஓம்பாது வீசி” (V, 4 : 3–4)

என்ற விடத்திற் கூறுகிறார்.

செங்குட்டுவன் தனக்கு என ஒருவகைச் சோறும் பிறர் சிலர்க்கு என வேறொரு வகையான சோறும் சமைக்குமாறு பணிக்கின்ற வழக்கம் இல்லையென்பது மிகவும் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது. “சோறுவேறு என்னா ஊன்றுவை அடிசில்” என்று கூறப்படுவதைக் காண்க. (V. 5 : 13).

காக்கை பாடினியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்பற்றிக் கூறும் இடத்திற் பரிசிலர் வாராராயினும் அவரைத் தேடி வலியச்சென்று அவருக்குப் பரிசில்கள் அவன் நல்குவது வழக்கம் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

பாணர் சிலர் கொடுமணம் என்ற ஊரிலே குயிற்றப்பட்ட நல்ல அருங்கலங்கள் பல பந்தர் முத்துக்களோடு பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறார்கள். நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவர் “பரிசிலர் வெறுக்கை” என்றும், “பாணர் நாளவை” என்றும் பாடுகிறார்; (IV. 8 : 9). பரிசிலருக்குச் செல்வமாக இருக்கிறவன் அவன் என்பதும், அவனுடைய நாளோலக்கம் பாணர்களுடைய இசையரங்கமாக இருக்

கிறது என்பதும் அவரால் இவ்விடத்துக் கூறப்படுகின்றன. சேர மன்னன் ஒருவன் வரையாது கொடுக்கின்ற தன்மையில் சிறந்தவனாக இருப்பதற்காக அவனை ஆற்றினைக் கடப்பதற்கு உதவுகின்ற வேழக்கரும்பினும் வல்லவன் என்று அரிசில்கிழார் பாடுகிறார். இதன் கருத்து, வேழக்கரும்பு ஒருவன் ஆற்றினைக் கடக்கும் வரைதான் பயன்படுகிறது; பிறகு அதனை அவன் விட்டெறிந்து விடுகிறான்; அதைப்போலன்றி இச்சேரமன்னன் புலவர்க்கும் புரவலர்க்கும் எப்பொழுதும் உதவி செய்பவனாக உள்ளான் என்பது. ஆதலினால், அவன் கரும்பினும் வல்லான் எனக் கூறப்படுகிறான்.

> " ஒய்யு நீர்வழிக் கரும்பினும்
> பல்வேற் பொறையன் வல்லனால் அளியே "
>
> (IX, 7 : 4–5)

என்றவிடத்து இதனைக் காணலாம் :

5. வீரம்

சேரர்கள் கடற்போரில் வல்லவர்கள் என்ற செய்தி பலவிடங்களிலும் சொல்லப்படுகிறது.

> " இருமுந்நீர்த் துருத்தியுள்
> முரணியோர்த் தலைச்சென்று
> கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின் சேரன்,"
>
> (II, 10 : 2–4)

என்று ஒரு சேரமன்னன் புகழப்படுகிறான்.

செங்குட்டுவன் பகைப்புலத்தோரது கடற்படையொடு தானும் தன் கடற்படைக்கொண்டு தாக்கி வென்று சிறந்தவன் என்பதைக் கவிஞர்,

................................" நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ" (V, 8 : 3 - 4)

என்றவிடத்துக் குறிப்பிடுகிருர்.

கடலிற் பெரிய காற்றின் அலைகள் செங்குட்டுவன் படைமேற் செல்லமாட்டாமல் தடுத்தபொழுதும் அஞ்சாமல் அப்படை நீர்ப்பரப்பில் சென்று எதிர்ப்பட்ட பகையரசர்களை வென்று அழித்துவிட்டன என்பது இவ்விடத்திற் புலப்படுத்தப்படுகிறது. கடலின்கண் படகுகளில் இருந்தவாறே பகைப் புலத்தோர் போர் செய்தனராதலின், அவர்களைக் "கடல்" எனவே இவ்விடத்திற் கவிஞர் குறிப்பிடுகின்ருர் என்பது அறியத்தக்கது. மரக்கலங்களிற் செல்லுகின்ற செம்படவர்கள்போல் மரக்கலங்களிற் சென்று பகைவர்களொடு போர் தொடுத்தமையின், செங்குட்டுவனைப் "பரதவன்" என்று கவிஞர் அழைப்பது கருதத்தக்கது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரியர் நெருங்கிய பேரிசை இமயம் முதல் தென்திசைக் குமரிவரை பல போர்களில் வென்று யானைமீது இவர்ந்து பலர் புகழச் செல்வத்தொடு செல்லுகின்ற காட்சியை இன்மையொடு காண்பதாகக் குமட்டூர்க்கண்ணனர் பாடுகிருர்.

" வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி எருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே
....
....
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்

தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே." (II, 1 : 18-25)

ஐந்தாம் பத்தில் பாடப்படுகிற கடல் பிறக் கோட்டிய குட்டுவன் இமயத்தை வடதிசை எல்லை யாகவும், குமரியைத் தென்திசை எல்லையாகவும் கொண்டு அவ்விரு எல்லைகளுக்கும் இடைப்பட்ட அரசர்களைப் பெரும்போரில் தாக்கி அவருடைய நாடுகளின் அழகினை அழித்தமை குறிப்பிடப்படு கிறது :

"கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ." (V, 3 : 6 - 11)

செங்குட்டுவனுடைய படைவீரர்கள் தம் மார் பில் அம்பு பட்டால் தளராமல் இருப்பார்கள் என்ற செய்திக்குப் பிறர் அம்பு போடப்போடக் கூசாது வாங்கிக் கொள்ளுகின்ற போர்க் கேடயத்தை உவ மையாகச் சொல்லுகின்ற வகையினுல் அவன் படைநலம் உணர்த்தப்படுகின்றது. "சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல் அனைய பண்பிற் றனை" என இப்படை சிறப்பிக்கப்படுகின்றது.

பெருஞ்சேர லிரும்பொறையைப்பற்றி அரிசில் கிழார் பாடியபொழுது அவன் போரில் 'உயிர்போத லுக்கு அஞ்சாதவன் என்பதையும், அமைதிக் காலங்களிலே இரவலர்களுக்குக் கொடை கொடுத்த லில் தயங்காதவன் என்பதையும், பெரியோரை

வழிபட்டுச் சிறியோரைக் காத்தல் செய்பவன் என்பதையும் அழகுபடக் கூறுகிருர் :

“ உயிர்போற் றலேயே செருவத் தானே
கொடைபோற் றலேயே யிரவலர் நடுவண்
பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தி.”(VIII, 9 : 1-3)

இளஞ்சேரலிரும்பொறையுடைய ஆட்கள் கணக்கில் அடங்காதவர்கள் என்பதைக் கூறக் கருதுகின்ற கவிஞர், “ செற்ருேர் கொலக்கொலக் குறையாத தானே ” என்றவிடத்து நயம்படக் குறிப்பிடுகின்ருர். 'பதிற்றுப்பத்தில் காணப்படுகின்ற சிறப்புக்களுள் ஒன்று அந்தந்த அரசர் வென்ற போர்களே அவரவர்களுக்கு உரியனவாகக் கூறி, அவர்தம் முன்னேர் இயற்றிய போர்வென்றிகளே முன்னேர்க்கு உரியனவாகப் பேசுவது என்பது. காட்டாக, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பற்றிப்பாடிய பெருங்குன்றூர்க்கிழார் அவனுடைய வென்றிகளேக் கூறுதற்கு முன்னுல், அவனுடைய மூதாதையர்கள் வென்றிகளேப் பற்றிப் பேசி அத்தகையோர் மரபில் வந்தவனே என அழைக்கின்ருர்.

“ வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்றம் எய்திய பெரியோர் மருக !”

என்று அவர் அழைத்தமை குறிப்பிடத்தக்கது.

சேர அரசர்களுடைய படையினர் வீரம் மிக்கவர்களாய்ப் போரை எதிர்பார்த்தவர்களாய்ப் பகையை அழித்தாலன்றி உண்ணுதவர்களாய் இருந்தார்கள் என்பது இப்புலவரால் மற்ருேரிடத்தில் சொல்லப்படுகிறது :

"...................................எயில் எறிந்தல்லது
உண்ணுது அடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுகல் ஊக்கத்தர்." (VII, 8 : 5 - 7)

சேரருடைய யானைப்படை மிக்க சிறப்பு வாய்ந்தது என்பது பல இடங்களிலும் சொல்லப் படுகிறது.

"கார்மழை முழக்கினும் வெளில்பிணி நீலி
நுதலணந்து எழுதரும் தொழில்நவில் யானை"

என்று கூறியவிடத்தில், மேகம் முழங்கினுல் கூட போர்முரசு கேட்டதுபோலக் கருதிக் கட்டவிழ்த் துக்கொண்டு தலைநிமிர்ந்து எழுகின்ற யானைகள் அவையெனக் கூறப்படுகின்றமை காணலாம்.

6. மனைவாழ்க்கை

சேரர்களுடைய மனைவியரது மாண்பு ஆங் காங்குப் பல விடங்களில் உணர்த்தப்படுகின்றது. காட்டாக, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மனைவி சீற்றம் கொள்ளாது அமைந்த கற்பினை உடையவள் என்பதும், இனிய மென்மை உடைய வள் என்பதும், ஊடல் காலத்திலேயும் இனிய சொற்கள் கூறுபவள் என்பதும் கூறப்படு கின்றன :

"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்துபொதி துவர்வாய் அமர்த்த நோக்கிற்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்." (II, 6 : 10-13)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் மனைவியைப்பற்றிப் பாடிய கவிஞர் அவள் மனைத் திறத்திற்குரிய அறங்கள் பலவற்றைக் கற்றுத்

தெளிந்த அறிவும் செயலும் உடையவள் என்ற கருத்தைப் புலப்படுத்துகின்ருர். அரசனை நோக்கி, "நீ ஈந்து இசைபட வாழ்தலால் பண்டுபுகழ் படைத்த வண்டன் என்பானை ஒப்பாய்; நின் மனைவியோ அறஞ்சால் கற்பினை உடையவள்; விசும்பு வழங்கும் மகளிருள்ளும் சிறந்த செம்மீன் அனையவள்" என்று கூறுகிருர். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்பற்றிப் பாடும் பாட்டையே "ஆன்ருேள் கணவ! சான்ருேர் புரவல!" என்றே தொடங்குகிருர்.

செல்வக் கடுங்கோ ஆழியாதனைக் கபிலர் பாடுகிறபொழுது. "புரையோள் கணவ! பூண்கிளர் மார்ப" என்று விளிக்கின்ருர்: (VII, 10 : 16)

இன்ெருரு கவிஞர் (பாலைக் கௌதமனுர்) அரசனை நோக்கி, "உன் மனைவியொடு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்க" எனக் கூறுகிருர் என்பது,

"வேயுறழ் பணைத்தோள் இவளொடு
ஆயிர வெள்ளம் வாழிய பலவே" (III. 1 : 37-38)

என்பதனுல் அறியப்படும். இவை போன்றவற்றிலிருந்து மனைவியருக்குச் சேர மன்னர் அளித்திருந்த உரிமையும் தகுதியும் அறியப்படும்.

7. கவித்திறன்

பதிற்றுப்பத்திற் பல விடங்களில் புலவர்களுடைய கவித்திறன் காணப்படுகின்றது. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்பான் பெயர்

பெற்றதற்குக் காரணம் களங்காயினலான தலை மாலையையும் நாரினலான முடியையும் அவன் அணிந்து கொண்டனன் என்பதுபோலும்! அவன் முன்னர்க் கூறிய சபதம் ஒன்றின் காரணமாக, தன் குறிக்கோள் நிறைவேறுங்காறும் இவற்றை அணிவேன் என்று முடிவு செய்துகொண்டான் போலும்! அவன் அவ்வாறு அமைத்திருந்த நார் முடியைப் பற்றிக் கூறுகின்ற காப்பியாற்றுக் காப் பியனர் வேலமரத்தின் உலர்ந்த கிளைகளால் சிறந்த பூச்சுத் தொடுத்து வைத்திருக்கின்ற காரணத்தால் அசையும் வலையைப் போல் விளங்குகிற இழை களுடன் கூடிய மணிகள் விளிம்பிலே கோத்துப் பசிய பொன்னல் செய்யப்பட்ட அணிகளை அணிந்து ஒளிசெறிந்த முத்து வடம் கோக்கப்பட்ட நார்முடி எனக் கூறுகிருர். பொன்னல் செய்யப் பட்ட தகடுகொண்டு அமைக்கப்பட்ட கூட்டின் மீது நாரினல் போர்வையைப்போல் பின்னி ஓரங் களிலே மணியை இழைத்து நூலினல் கோக்கப் பட்ட முத்து வடங்கள் தொங்குகின்ற அணியையே இங்கு நார்முடி எனக் கூறுகின்ருர்.

சில இடங்களிற் கவிஞர்கள் ஆண்டிருக்கின்ற உவமைகள் பொருளொடு நன்ருகப் பொருந்தி இன்பம் விளைக்கின்ற செய்தியைக் காணுதல் இயலும். இளஞ்சேரலிரும்பொறை என்பானின் இனிய தன்மையைக் காட்ட விரும்புகின்ற கவிஞர் அவனைச் சாந்துவரு வானி நீருக்கு ஒப்பிடுகின் ருர். வானி என்பது சேர நாட்டில் உள்ள ஓர் ஆறு. அவ்வாற்றில் மூங்கில் நிலைபெருத அளவிற்குத்

தண்ணீர்ப் பெருக்கு வந்தாலும், மேற்பரப்பில் அமைந்துகிடக்கும் அணிகளையும் சந்தனத்தையும் அஃது உடையது. இத்தகைய ஆற்றினைச் சேர னுக்கு ஒப்பிடுவதன் நோக்கம் சேரனுடைய பகை வர்கள் அவன் எதிரே நிற்க மாட்டார் என்பதைக் காட்டலாகும். தண்ணீர் நிறைந்திருந்தாலும் அணிகள் மேலே தோன்றுகின்றன வென்று கூறுவ தால் ஆற்றின் தெளிவு அறியப்படும். ஆற்றின் தெளிவு சேரமன்னனின் உள்ளத்தெளிவைக்காட்டு கிறது. நிலைக்கமாட்டாத ஆற்றின் நீரைப்போல நிறைந்த வீரத்தையுடையவன் அவன் ஆயினும், பாடுகின்றவர்களைக் காணும்பொழுது அன்பும் அருளும் உடையவனாக மாறுகின்றான். சேர நாட்டு ஆறுகள் மரச் செறிவினிடையே ஓடி வரு கின்ற காரணத்தால் இயல்பாகக் குளிர்ந்த தன் மையை உடையன. சந்தனத்தை மலையினின்று அடித்துக்கொண்டு வருவதால் நீரில் மணம் மிகுந்து குளிர்ச்சியும் படிகின்றது. அதைப்போலச் சேர அரசன் வள்ளல்களாகிய தன் முன்னோருடைய மரபில் வருகின்ற காரணத்தால் இனியனாக இருப்ப தன்றியும், அறிவுடையவர்களோடு தொடர்பு கொண்ட காரணத்தால் மேன்மேலும் இனியன் ஆகின்றான் என்ற குறிப்புக்களை வைத்து இக் கவிஞர் பாடிய திறமை வியக்கத்தக்கது. அப் பகுதி இது

“ கழைநிலை பெறுஅக் குட்டத் தாயினும்
புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்

சாந்துவரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே.'' (IX, 6 : 9-13)

அரிசில்கிழார் எனும் புலவர் பெருஞ்சேரலிரும்பொறையைப்பற்றிப் பாடும்பொழுது அவனை ஒரு குளவிக்கு ஒப்பிடுகிறார். குளவியினுடைய இயல்பு தனக்கு இன்னல் விளைக்காதவர்களுக்குத் தான் இன்னல் இயற்றுவதில்லை என்பதும், தன் கூட்டைச் சிதைக்கத் தலைப்பட்டோரை வருத்தும் என்பதும் ஆகும் :

'' கடுந்தேறு உறுகிளை மொசிந்தன அஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாஅரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே.'' (VIII, 1 : 6-8)

இப்பகுதியில் சேரன் குளவிக்கூட்டிற்கு ஒப்பாகவும், அவனுடைய பகைவர்கள் குறும்பு செய்யும் சிறுவர்களுக்கு ஒப்பாகவும் கூறப்படுகிறார்கள். குளவிக்கூடு பெரியது என்பது செழுங்கூடு என்ற வகையான் சொல்லப்படுகிறது. குளவிகள் வருத்தும் தன்மையுடையன ஆனாலும், தாமே சென்று எவரையும் வருத்துதலில்லை. ஆயினும், எவராவது கூட்டை அழிக்கத் தலைப்பட்டால் அங்ஙனம் அழிக்க முற்படுவோரைச் சூழ்ந்து நன்றாக வருத்தும் இயல்பினையுடையன. அதனால் முதியவர்கள் குளவிக்கூட்டைப் பார்த்தால் கூட்டிற்கு இன்னலிழைக்க நினைக்காமல் நடந்து செல்லுவர். இளஞ்சிறுவர்களோ அதன் தன்மையையும் வலியையும் அறியாதவர்களாதலால் அதனைக் கிளைக்கத் தலைப்படுவார்கள். அங்ஙனம் கிளைக்கின்ற சிறுவர்கள் அறியாது தவறிழைத்தார்கள் என அவர்களைக்

குளவிகள் விடுதலில்லை. மாருக, அவர்கள் அலறும் படி மருட்டிக் கொட்டி வருத்திவிடும். சேரனது தன்மையும் குளவியின் இயல்பினை ஒத்தது என்று குறிப்பிடுகின்ருர். அதனுல் பெறவைப்பது என்ன வென்ருல், சேரன் தன் சூழ்ச்சித் துணைவருடனும், கல்விசான்ற வயவருடனும் எவருக்கும் இன்னல் விளைவிக்காமல் தன் நாட்டிலேயே அமர்ந்து மகிழ்ந்திருப்பது வழக்கம்; ஆயினும், அவன் திறத்தையறியாமல் அவனேடு எதிர்த்துவரத் தலைப்பட்டவர்கள் செழுங்கூட்டினைக் கிளைத்த இளமகார்கள் தப்பமாட்டாதவர் ஆதலைப்போல உய்ந்து திரும்புதல் அரிது என்பது இச் செய்யுட் பகுதியில் கூறப்படுகிறது. இதனை,

“ என்உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே ”

என்று சோழன் நலன்கிள்ளி பாடிய பாட்டாகப் புறநானூற்றில் காணப்படுவதனேடு ஒப்பிட்டு மகிழ்தல் இயலும்.

8. அறவுரை

புலவர்கள் அரசரை நோக்கிப் பல வேளை களில் அறிவுறுத்தியிருக்கிருர்கள். பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பார்த்துப் பாலைக்கௌதம ஞர் கோபம், காமம், அளவிறந்த கண்ணேட்டம், அச்சம், பொய்ச்சொல், கழிபேரன்பு, அழிக்கும் மனப்பான்மை, கொடுமை ஆகிய இவை தவிர்க்கத் தக்கன எனக் கூறுகிருர்.

“ சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவும்இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும் ” (III, 2 : 1-4)

என்றவிடத்து இது சொல்லப்படுகிறது. மேலும், பிறர் பிறரை நலியாமல், வேற்றுப் பொருளை வெஃகாமல், மனைவியைப் பிரியாமல், உள்ள பொருளைப் பகுத்துண்டு வாழ்தல் வேண்டும் என்பதை அச்செய்யுளில்தானே அவர் வற்புறுத்தக் காண்கிறோம்.

9. சொல்லாட்சி

சேரநாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பண்டு தொட்டு உள்ள தொடர்பினை இன்றும் கேரள நாட்டில் வழங்குகின்ற பல்வேறு சொற்கள் பறை யறைந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, “ பனியத்துப் போகருதே ” என்ற வழக்கு இன்றும் மலையாள நாட்டிற் காணப்படுகிறது. தொல்காப்பியத்தில் “ பனி, வெயில், மழை, வளி போன்ற சொற்கள் அத்து எனும் சாரியை பெறும் ” என்ற விதி இருந்தாலும், இக்காலத்துத் தமிழ்நாட்டுப் பேச்சு வழக்கில் அத்துச் சாரியை சேர்த்துப் பேசுகிறவர்களைக் காண்டல் அரிது. ஆயினும், இக்காலப் பேச்சு வழக்கு மலையாளத்தில் அத்துச் சாரியை சேர்த்துப் பேசுகிறவர்களை நிரம்பக் காணலாம். அதைப்போலவே, “ ஆந்தை ” என்ற பொருளிற் பழங்கால இலக்கியங்களிற் காணப்படுகின்ற ‘ மூங்கா ’ என்ற சொல்லும், ‘ கிளி ’ என்ற பொருளிற் காணப்படுகின்ற ‘ தத்தை ’ என்ற சொல்லும், ‘ உணவு ’ என்ற

பொருளிற் காணப்படுகின்ற 'புகவு' அல்லது 'புகா' என்ற சொல்லும் இன்றும் மலையாள நாட்டில் நாடோறும் அமைந்த பேச்சுவழக்கில் வழங்கக் காண்கிறோம். அவ்வாறே, 'பதிற்றுப் பத்து' என்ற சொல்கூட, தெலுங்குநாட்டிலோ மலையாள நாட்டிலோ, கன்னட நாட்டிலோ எங்கே யாவது ஒரு மூலை முடுக்கிலே இன்றும் பேச்சு வழக்கில் இருந்தாலும் இருத்தல் இயலும். இவை போல்வனவெல்லாம் பழங்காலத்தில் தமிழர் களுக்கும், ஏனைய திராவிடமொழிகள் பேசிய மக்களுக்கும் இருந்த தொடர்பினைப் புலப்படுத்து வனவாகும்.

பதிற்றுப்பத்தில் வழங்கியுள்ள சில சொற்கள் நோக்கத்தக்கன. ஓரிடத்தில், "சவட்டுதல்" என்பது உருவு அழித்தல் என்ற பொருளில் வந் துள்ளது. இன்னோரிடத்தில் "கற்ப" என்ற சொல் கல்வியை உடையவனே என்ற பொருளில் வந்துள்ளது. பிறிதோரிடத்தில் "நெய்த்தோர்" என்ற பழஞ்சொல் குருதி அல்லது இரத்தம் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது : இச்சொல் தெலுங்கு, கன்னட மொழிகளில் நெத்துரு என இப்பொழுதும் வழங்கப்பெறுகின்றமை பழங்காலத் தில் திராவிட மொழிகளின் ஒற்றுமையைக் காட்டும். அப்பு, பிருதிவி, தேயு, வாயு, ஆகாசம் எனப் பிற்காலத்தவர் வழங்கிய வேற்றுமொழிச் சொற்களுக்கு மாறாகப் பதிற்றுப்பத்தில் நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்ற தூய சொற்கள் வழங்கப்பட்டிருத்தல் அறியத்தக்கது.

" நீர்நிலம் தீவளி விசும்பொடு ஐந்தும்
அளந்துகடை அறியினும் அளப்பருங் குரையே."
(III, 4 : 15 - 16)

நேர்கிழக்கு அல்லது சரியான கிழக்கு என்பதைச் செங்குணக்கு என்ற வகையால் ஒரு கவிஞர் தெரிவிக்கக் காண்கிறோம். (V, 10). ஒருநாள், இருநாள், பலநாள் எனப் புறநானூற்றில் காணப்படுகின்ற வழக்குப் போல ஒன்று, இரண்டு, பல என்றவாறு ஓரிடத்தில் வருவதைக் காண்கிறோம்.

" மழைபெயல் மாறிய கழைதிரங்கு அத்தம்
ஒன்றிரண் டலபல கழிந்து திண்டேர்
வசையில் நெடுந்தகை காண்குவந் திசினே," (V, 1 : 14 - 16)

என்றவிடத்தில் இதனைக் காணலாம்.

10. சொல்லழகு

பதிற்றுப்பத்தில் வருகின்ற சொல்நடையின் அழகு கண்டு நாம் மகிழ்தல் இயலும்.

" சிதைந்தது மன்ற—நீ சிவந்தனை நோக்கலின் "(III, 7)

என்கிறார் ஒரு கவிஞர். இன்னொருவர்,

" நிலந்திறம் பெயருங் காலை யாகினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே"

என்கிறார். மற்றொருவர்,

" ஈரம் உடைமையின் நீரோர் அனையை
அளப்பரு மையின் இருவிசும்பு அனையை
கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை" (IX, 10)

என்கிறார். அன்றியும், அக்கவிஞர்

" நின்னாள், திங்கள் அனைய வாக, திங்கள்
ஆண்டோர் அனைய வாக, ஆண்டே
ஊழி அனைய வாக, ஊழி

வெள்ள வரம்பின வாகஎன உள்ளிக்
காண்கு வந்திசின் யானே"

என்று கூறுகிருர். இதனுல், "வெள்ளம்" என்பது ஊழியைக் காட்டிலும் பெரியது என்று அறிகிருேம்.

நான்காம் பத்து முழுதும் அந்தாதித் தொடையில் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தி. முதற்பாட்டு "மாண்டனே பலவே" என்று முடிகின்றவாறே இரண்டாவது பாட்டு மாண்டனே பலவே எனத் தொடங்குகின்றது. ஏனைய பத்துக்களில் அந்தாதித் தொடை காணுதிருப்பவும், காப்பியாற்றுக் காப்பியனுர் பாடிய பத்தில் மாத்திரம் இந்நடை காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

11. பதிகம்

இந் நூலில், ஒவ்வொரு பத்துப்பாட்டின் இறுதியிற் பதிகம் என்ற தலைப்பிற் சில அடிகள் செய்யுளாகவும் சில பகுதிகள் உரைநடையாகவும் காணப்படுகின்றன. இவற்றை இயற்றியோர் இன்னுரென்பது விளங்கவில்லை. ஒவ்வொரு பத்தினையும் பாடிய புலவரே பதிகத்தையும் இயற்றினுர் என்ற கருத்து இந்நாளில் அறிஞர்களால் கொள்ளப்படவில்லை. பதிற்றுப்பத்தின் பாக்களைத் தொகுத்தவர் எவரேனும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் என்பதைப் பாடிச் சேர்த்திருத்தல் இயலும் என்பதே இந்நாள் அறிஞர் பலருக்கும் ஒத்த முடிபு. எனினும், பதிகங்கள் சங்ககாலச்

சேரர்களுடைய வரலாற்றுண்மையை அறிதற்குப் பெரிதும் பயன்படுகின்றன என்று திரு. சதாசிவப் பண்டாரத்தார் போன்ற அறிஞர்கள் கருதுகின்றார்கள். பதிகத்திற் காணப்படும் சேரர் புகழ் கூறும் மரபையொட்டித்தான் இராசராச சோழன் காலம்முதல் மெய்க்கீர்த்திகள் கல்வெட்டுக்களிற் பொறிக்கும் வழக்கம் தோன்றியிருத்தல் வேண்டுமென அவர் கருதுகிறார். எனவே, பதிகங்கள் கி. பி. 990-க்கு முன்னால் எழுந்தனவென்பது அவருடைய கருத்தாகும்.

சில பத்துக்களிற் காணப்படுகின்ற செய்திகள் பதிகத்திலும் வற்புறுத்தப்படுகின்றன. காட்டாக, இரண்டாம் பத்தின் பதிகத்துள் இமயத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வில்லினைப் பொறித்து ஆண்டான் என்பது கூறப்படுகிறது. இப்பத்தின் முதற்பாட்டிலேயே இமயத்தை எல்லையாகக் கொண்டு அவன் ஆண்டான் என்று குமட்டூர்க் கண்ணனாரால் கூறப்படுவதால் பொருத்தம் உண்மை காண்கிறோம். ஏழாம் பத்தினைப் பாடிய கபிலருக்குச் செல்வக்கடுங்கோ ஆழியாதனால் ஊர்கள் பரிசிலாகத் தரப்பட்டன எனப் பதிகம் கூறுகிறது. இச்செய்தியைப் பெருங்குன்றூர்க்கிழார் ஒன்பதாவது பத்தில் சோழர்கள் தோற்று இட்ட வேலின் பெருக்கத்திற்கு உவமையாகக் கூறுகின்றார். அது வருமாறு :

“ உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே.” (IX, 5 : 11 - 13)

ஆயினும், சில பதிகங்களிற் காணப்படுகின்ற செய்திகள் நூலினுள்ளே அமைந்த பாடல்களோடு பொருந்துவனவாகக் காணப்படவில்லை. காட்டாக, ஐந்தாம்பத்தின் இறுதியிற் காணப்படும் பதிகத்தில்,

> " கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
> கானவில் கானங் கணையிற் போகி
> ஆரிய அண்ணலை வீட்டி "

என்று வருகிறது. கண்ணகியாகிய கடவுட் பத்தினிக்குக் கல் கொள்ளப்பட்ட செய்தி பாட்டினகத்தே கூறப்படவில்லை. இஃது ஒரு பொருந்தாமைபோலத் தோன்றும். ஒருவேளை, செங்குட்டுவன் பத்தினிக்குக் கல் கொண்டுவந்த பிற்பாடு இப்பதிகம் பாடப்பட்டிருத்தல் இயலும்.

சில சொற்றொடர்கள் ஒரு பத்திற் காணப்படுகின்றவை ஏனைய பத்துக்களிலும் திரும்பவும் காணப்படுகின்றன. அவற்றிற் சிலவற்றை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளிவிட்டாலும் தள்ளிவிடலாம். " காஞ்சி சான்ற வயவர் பெரும !" என்பது ஏழாம்பத்திலும், ஒன்பதாம் பத்திலும் வருகிறது. " வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை " என்பது ஏழாம் பத்திலும், ஐந்தாம் பத்திலும் வருகிறது. " வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர் " என்பது ஆறும் பத்திலும், ஏழாம் பத்திலும் வருகிறது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் தள்ளிவிட்டாலும், அடியில் வருகின்றவாறு சில முழு அடிகளே சில

பத்துக்களில் திரும்பத் திரும்ப வருவதைக் காண்கிறோம்.

" களிறுபாய்ந் தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப "

என்ற அடிகள் ஐந்தாம் பத்திலும், ஒன்பதாம் பத்திலும் வருகின்றன.

" இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே "

என்றவாறு இரண்டடிகள் ஆறும் பத்திலும், ஏழாம் பத்திலும், எட்டாம் பத்திலும் வரக் காண்கின்றோம். இவ்வாறு மீண்டும் மீண்டும் சில அடிகள் வருவதை முன்னோர் மொழிபொருளேயன்றிச் சொல்லையும் பொன்னேபோல் போற்றுவம் என்ற காரணத்தாற் கூறினார்கள் என்று கொள்ளுவதா, அன்றி ஒருவரே பாடினமையின் திரும்பத் திரும்ப ஒருவருடைய அடிகளே ஏனைய இடங்களிலும் வந்தன என்று கொள்ளுவதா என்ற செய்தி ஆராயத் தக்கதொன்றாகும்.

ஆயினும், பதிற்றுப்பத்து முழுதும் ஒருவரே பாடினார் என்று முடிவு கட்டுதற்குத் தடையாகச் சில காரணங்கள் உள. பாரியைப்பற்றிக் கபிலரே பாடியிருத்தல் வேண்டும் என்பதற்கு வேண்டிய ஆதாரம் ஏழாவது பத்தில், பாரி இறந்துவிட்டதால் செல்வக்கடுங்கோ ஆழியாதனிடத்தில் பரிசிலுக்காகத் தாம் இரந்து வரவில்லை என்ற கருத்துப்பட அவர் பாடியுள்ளமையே சான்றாகும். அங்ஙனம் ஏழாவது பத்தினைப் பாடியவர் கபிலர் என்று வைத்துக்கொண்டு, ஏனைய பத்துக்களையும் கபிலர்

தாம் பாடியிருப்பார் என்று கொள்ளுதற்குத் தடையாகச் சில செய்திகள் இருக்கின்றன. ஒன்பதாம் பத்தில், பெருங்குன்றூர்க்கிழார், "கபிலர் பரிசிலாகப் பெற்ற ஊரினும் பல வேல்களை" என்று உவமையிற்படுத்திக் கூறியிருக்கின்ற காரணத்தால் கபிலரின் வேறானவர் ஒன்பதாம் பத்தினைப் பாடினவர் என்பது ஏற்படும்.

அல்லாமல், பதிற்றுப்பத்திற் காணப்படும் பாடல் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புலவர் பாடினாராக, அவற்றையெல்லாம் பத்துப் பத்தாகத் திரட்டிப் பிறகு சில பெயர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லலாமென்றாலோ, அதற்கும் தடையுள்ளது. நான்காவது பத்து முழுவதும் அந்தாதித் தொடையில் இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. அவ்வந்தாதித் தொடையில் ஒரு பத்தினைப் பாடுதல் வேண்டுமெனின், ஒருவரே அந்தப் பத்துப் பாடல்களையும் பாடியிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். இவ்வகையே நோக்கினால் இன்னும் ஆராய்ச்சி செய்வதற்குப் பல்வேறு செய்திகள் பதிற்றுப்பத்தில் இருக்கின்றனவென்பது புலப்படும்.

அந்துவஞ்சேரலிரும்பொறையின் மரபினர்கள் ஒருவர்பின் ஒருவராய் ஆண்டிருத்தல் கூடும் என்றும், முன்னரே உதியஞ்சேரல் மரபினர் ஒரே காலத்தில் வெவ்வேறு ஊர்களைத் தலைநகராகக் கொண்டு வெவ்வேறு பகுதிகளை ஆண்டிருத்தல் கூடும் என்றும் கொண்டால் சில பொருந்தாமைகள் நீங்குகின்றன.

12. சிலப்பதிகாரமும் பதிற்றுப்பத்தும்

இனி, சிலப்பதிகாரத்திற்கும் பதிற்றுப்பத்திற்கும் உள்ள சில தொடர்புகளைக் காண்போம். ஐந்தாம் பத்திற் பாடப்பட்ட செங்குட்டுவன் மோகூர் மன்னனுடைய வேப்பமரத்தை வெட்டினான் எனக் கூறப்படுகிறான். இதுவே சிலப்பதிகாரத்திலும் நீர்ப்படைக் காதையின்கண் சொல்லப் பட்டிருக்கக் காண்கிறோம்:

" பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள் ".
(காதை 27 : அடிகள் 124-126)

பதிற்றுப்பத்தில்,

" மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து "

என்று கூறப்படுவதும்,

" மோகூர்,
கடுஞ்சின விறல்வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே "

என்று கூறப்படுவதும் சிலப்பதிகார அடிகளொடு ஒப்புநோக்கத் தக்கன.

செங்குட்டுவனுடைய மூதாதையர் ஒருவர் அகப்பா என்ற ஊரை எறிந்தவர் என்று சிலப்பதிகாரத்திற் பேசப்படுகிறார்.

" மிகப்பெருந் தானையொடு இருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல் ஆயினும் "

என நடுகல் காதையில் (143—144) வருகிறது. இச் செய்தி பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தின்கண்

கூறப்படுதலையும் காண்கிறோம். அம்மூன்றும் பத்திற்குரிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடிய இடத்தில்,

“ தண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ ” (III, 2 : 26-27)

என்று கூறுகின்றார். இதிலிருந்து, ஐந்தாம் பத்திற்குரிய குட்டுவன், செங்குட்டுவனாக இருத்தல் இயலும் எனவும், மூன்றாவது பத்திற்கு உரியவனாக அமைந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், செங்குட்டுவனின் முன்னோருள் ஒருவன் எனவும் கொள்ளுதற்குச் சில சான்றுகள் பெறுகிறோம். சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன் “எழுமுடி மார்பன்” எனப் பேசப்படுகிறான். அஃதாவது, ஏழு முடியால் செய்யப்பட்ட மாலையை அணிந்தவன் என்பது கருத்து. இஃது ஐந்தாம் பத்துப் பாடலில் (வரி 6) “ எழுமுடி மார்பின் எய்திய சேரல் ” என வருதலைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன் நெடுங்கடலோட்டிய செய்தி

“ நெடுந்தேர்த் தானையொடு இரும்பிற் புறத்துஇறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி ” (28 : 118-119)

என வருவதைப் பார்க்கின்றோம். இச்செய்தி பதிற்றுப்பத்தில்,

“ கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பின் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் ”

என வருதலோடு ஒப்புநோக்கத் தக்கது. இவ்வாறு ஒப்புநோக்குழி, சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்ற செங்குட்டுவனும் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்

பத்தில் ஓதப்படுகின்ற குட்டுவனும் ஒருவனே ஆவன் என்பது தோற்றும்.

முடிவுரை

இதுகாறும் காட்டியவாற்ருல், பதிற்றுப்பத்தின் துணையாக 1850 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் வேந்தர்களுள் ஓர் இனத்தவராகிய சேரர்களுடைய நாட்டு வளமும், குடிமக்கள் இயல்பும், அரசர் கொடை வளமும், படை நலமும், மனைமாட்சியும் அறியப்படும். அன்றியும், பதிற்றுப் பத்திற் காணப்படுகின்ற கவியழகும் அரிய சொல் வழக்குகளும் அறியப்படும். பதிற்றுப்பத்தின் ஆசிரியர் ஒருவரே என்று ஐயப்படுதற்குரிய சில காரணங்கள் இருந்தாலும், ஒருவருக்கு மேற்பட்ட பல ஆசிரியர்கள் இருந்தனர் என்பதற்குரிய சான்றுகளும் உண்டு என்பது அறியப்படும்.

PUBLIC LIBRARY
27 JAN 1958
MADRAS